19

786

تعليم الدين

தஃலீமுத்தீன்

என்னும்

நன்மார்க்கநடைகள்



1345

Q7
N56
78472

...ா புக் டிப்போ, மதுரை.

எது நாகரீகம்?

பொய்யை மெய்யாக்கி மனக்கோட்டைகட்டி எட்டாத ஆடம்பரங்களை நினைத்து மனதைத் தகர்த்து சுக்கு நூராக்கி வாழ்க்கையை குழப்பத்துக் குள்ளாக்கும் **நாவல்களைப் படித்து** பொழுதைப் போக்கிவிடுவது **நாகரீகமா?** அல்லது மெய்யை பொய்யாக்கி விடக்கூடாது என்றும், மக்களுக்கு அதிக லேசானதும் நம்பக்கூடியதும், வாழ்க்கைகளை சீர்படுத்தி சிறந்தோங்கி, உண்மை வாழ்க்கையாக வாழ வேண்டுமென்ற கருத்துடன் பல மேதாவிகளும், அறிவாளிகளும், உணவையும், செல்வத்தையும், செல்வாக்கையும், தன் சொந்த குடும்பத்தையும் பொருட்படுத்தாமல் அதிசிரத்தையுடன் உண்மை மூலத்திலிருந்து ஆதாரமாக எழுதிய நூல்களைப் படித்து மனக் கவலையின்றி நிறந்தரமான **இன்ப வாழ்க்கை** நடத்துவது

—: நாகரீகமா? :—

நாகரிகத்தின் உண்மைஉருவம் தெரிந்துகொள்ள வேண்டுமானால் **நல்வழிச் சுடரை** தேடி புரட்டிப் பாருங்கள்! மனிதன் கருவிலிருந்து, உலக அழிவு நாள், தீர்ப்பு நாள், சம்பூரண வாழ்க்கை, நரக வேதனை தற்சமயம் உலகில்ஏற்பட்டுள்ள கடைசி உலக அழிவு நாளின் அறிகுறி யாவும் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் **நல்வழிச்சுடரின்** பக்கங்களை புரட்டிப் பாருங்கள் **உண்மை நாகரீகம்?**

கீழ்கண்ட விலாசத்தில் உங்கள் பெயரை பதிவு செய்து கொள்க!

குர்ஆனிய்யா புக் டிப்போ, மதுரை.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

தஃலீமுத்தீன்

என்னும்

நன்மார்க்க நடைகள்

இது ஹகீமுல் உம்மத் ஹாஜி மௌலானா மௌலவீ ஹாபிஸ்
முஹம்மத் அஷ்ரப் அலி (தானவீ) ரஹ்மத்துல்லாஹி
அலைஹி அவர்களின்
உர்தூ நூலின் மொழி பெயர்ப்பாகும்

○

தமிழாக்கம்
மௌலவீ ஹாபிஸ் அ. மு. அப்துல் ஜப்பார் (பாக்கவீ)

⁂

[உரிமை பெற்றது: ஹிஜ்ரி 1375 ரபீஉல்அவ்வல்-மீ கி. பி. 1955]
[2ம் பதிப்பு: ஹிஜ்ரி 1376 கி. பி. 1956]

[ஹத்யா 0—15—0]

வெளியீடு:
குர்ஆனிய்யா புக் டிப்போ,
56, தாசில்தார் பள்ளிவாசல் தெரு, மதுரை.

முஸ்லிம் உலகம் வெகு ஆவலோடு

எதிர்பார்த்திருந்த

இஸ்லாம் தந்த

இன்பத் திருமணம்

வெளிவந்து விட்டது!

இந்நூல் இல்லறவாழ்க்கையில் ஈடுபட்டோருக்கும், ஈடுபடவிருப்போருக்கும் மிகமிக தேவையானது என்பது இந்நூலை படித்தவர்களுக்கு மறைந்ததன்று. இந்நூலானது திருகுர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களைக் கொண்டு மிக உன்னதமான நடையில் வாசகர்களுக்கு ஊக்கத்தையும் உணர்ச்சியையும் தரக்கூடிய முறையில் தொகுக்கப்பட்டுள்ளது. இவ்வறிய நூலில் அடங்கியுள்ள சில முக்கிய விஷயங்கள்.

திருமணம்பற்றி திருகுர்ஆன், சிறந்தபெண்கள் யார்? பெண்களும் ஒரு சோதனைப் பொருளே! மூன்று நபர்கள், ஏழைப் பெண்ணைத் தள்ளிவிடாதீர், அன்பின் உறைவிடம் எது? சிறந்த திருமணம் எது? நற்பாக்கியசாலி யார்? திடீர் சாதலுக்கு சிறந்த மருந்து, பார்வையைப் பேணிக்கொள், தனித்திருக்கும் பெண்களிடம் செல்லாதே, வீணே அன்னியப் பெண்களை ஆசிக்காதே, கடிமணம் கூடுமா? மாதா பிதாக்களின் கடமை என்ன? குறி பார்ப்பது கூடுமா? திருமணத்தை எங்கே நடத்துவது? மனைவிக்கு அன்ன வஸ்திரம் கொடு. பெண் பேச

போட்டி போடலாமா? இஸ்லாம் கருத்தடையை ஆதரிக்கிறதா? இயற்கைக்கு மாறுக இன்பம் தேடலாமா? அபரிமிதமாக மஹர் வைக்கலாமா? வலீமா தஃவத் பல மனைவிகளுக்கு மத்தியில் நீதி செலுத்து. சிறந்த மணமகன் யார்? சீதனத்தை இஸ்லாம் ஆதரிக்கிறதா? வீணர்கள் யார்? அகற்ற வேண்டிய அனுச்சாரங்கள். திருமணம் சம்பந்தமான நாற்பது முக்கிய மஸ்அலாக்கள் இன்னும் பல விஷயங்கள் அடங்கியுள்ளன.

இவ்வுன்னதமான இந்நூலை வசதியுள்ள சகோதரர்கள் தங்களது திருமணங்களிலும் இதர சந்தர்ப்பங்களிலும் இயன்றளவு அதிகமான பிரதிகளை வாங்கி மக்களின் மத்தியில் இலவசமாக கொடுத்தால், திருமணத்திலும், திருமணத்திற்குப்பின் நடக்கும்மார்க்கத்திற்கும் மனிதனின் தன்மைக்கும் முறன்பாடான காரியங்களை விட்டு ஜனங்கள் தவிழ்ந்து கொள்ள சாதகமாக இருக்குமென்பது எனது கருத்து.

நல்ல பாலிஷ் வெள்ளைத்தாள் கிரௌன்
1க்கு 8 சைஸ் 70 பக்கம் 0—10—0
ஒரு புஸ்தகம் தேவைக்கு 12 அணு அனுப்பி பெற்றுக் கொள்க!

திருமணங்களுக்குப் பரிசளிக்க ஸ்பெஷல் தயாரிப்பு
(ஆர்ட் பேப்பர் புல் கலிகோ பைண்ட் கில்ட்)
பிரதி 1-க்கு ரூ. 2—0—0.
ஒரு பிரதி தேவைக்கு ரூ. 2—2—0 அனுப்பி பெற்றுக் கொள்க!

குர்ஆனிய்யா புக் டிப்போ, மதுரை.

بسم الله الرحمن الرحيم
نحمده ونصلي على رسوله الكريم

இரண்டாம் பதிப்பின்

முகவுரை

அல்ஹம்து லில்லாஹ்! இஸ்லாத்தின் நிர்ணயக் கொள்கைகள், மற்றும் ஒழுக்கங்கள், முஸ்லிம்களின் மீது கடமையான காரியங்கள், முஸ்லிம்கள் எடுத்து நடக்க வேண்டிய, விட்டகலக்கூடிய சட்டங்களை மிக சம்பூரணமான முறையில் திருகுர்ஆன் ஹதீஸ் ஆதாரங்களைக் கொண்டு சுருக்கமாகத் தெளிவான முறையில் ஹகீமுல் உம்மத் மௌலானா **முஹம்மத் அஷ்ரப் அலி தானவீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி** அவர்கள் உர்தூவில் **தஃலீமுத்தீன்** என்ற பெயருடன் வெளியிட்டு நாடெங்கும் பரவி மக்கள் பலனடைந்து கொண்டிருந்தார்கள். தமிழ் மக்களுக்குப் பலனளிக்க வேண்டுமென்ற நீண்ட கால எனது ஆவலை அல்லாஹ் ஒரு வருஷத்திற்கு முன்பு மொழி பெயர்த்துவெளியிடும்பாக்கியத்தை அருளினான்

அல்ஹம்து லில்லாஹ்!

இந் நூலானது மக்களின் மத்தியில் சில மாதங்களுக்குள் பரவி, விற்பனையாகி விட்டது. மீண்டும் இரக்ஷகனின் அருளினால் இன்று உங்களின் கரங்களில் புதிய எழுத்துக்களுடன் பல

இணைப்புகளுடன் நல்ல கிலேஸ் தாளில் **குர்ஆனிய்யா பிரஸ் என்ற நமது சொந்தப் பதிப்பகத்தின் முதலாம் வெளியீடாக** காட்சியளிப்பதற்கு உதவி செய்த வல்ல ரஹ்மானைப் போற்றுமலிருக்க முடியாது. இந்நூல் மிக முக்கியமானது என்பதற்கு மௌலானு அவர்களின் நூன்முகத்தை படித்தவர்களுக்கு தெரியாமலிருக்க முடியாது. முஸ்லிம் பெருமக்கள் தங்கள் சிரமத்தைப் பாராமல் மௌலானுவின் நூன்முகத்தை படிக்கும்படி மிகப் பணிவுடன் கோருகிறேன்.

மேலும் இந்நூலை முஸ்லிம் மக்களிடத்தில் இலகுவில் பரப்புவதற்காக வசதியுள்ள சகோதரர்கள் தங்களாலியன்றவரை வாங்கி வினியோகம் செய்யும்படி மீண்டும் கேட்டுக்கொள்கிறேன் இப்படிச் செய்வதால் தான் முஸ்லிம் சகோதரர்களுக்கு மார்க்க சம்பந்தமான விஷயங்கள் விரைவில் பரவும் என்பது வெளிப்படையான விஷயம். இது வியாபாரத்தைக் கருதிக் கூறும் விஷயமல்ல என்பதையும் கூறுமலிருக்க முடியவில்லை. இந்நூலைப் பற்றி பல மௌலவிகளும் பொது மக்களும் பத்திரிகைகளும் மிகமிகப் போற்றிப் புகழ்ந்துள்ளார்கள் என்ருலும் அவைகளை யெல்லாம் பல காரணங்களை உத்தேசித்து இந்நூலில் நான் அச்சிடவில்லை. இந்த இரண்டாம் பதிப்பில் அநேக திருத்தங்கள் சேர்க்கப்பட்டிருக்கிறது. மீண்டும் எதுவும் திருத்தங்கள் தெரிவித்தால் நன்றியுடன் திருத்திக் கொள்ளப்படும்.

மௌலானா அவர்களின் தஃலீமுத்தினுடைய ஐந்து பிரிவுகளில் நான்கு பிரிவை மட்டுமே இந்நூலில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இன்ஷா அல்லாஹ் மிக விரைவில் ஐந்தாம் பிரிவு இரண்டாம் பாகமாக வெளிவர விருக்கிறது.

இரண்டாம் பாகம் தேவைகளுக்கு எழுதி தங்கள் பெயர்களை பதிவுசெய்து கொள்ளுங்கள்.

இப்படிக்கு,
மௌலவீ ஹாபிஸ் **அப்துல் ஜப்பார்** (பாக்கவீ)
மானேஜர்,
குர்ஆனிய்யா புக்டிப்போ, மதுரை.

நீண்டகாலமாக எதிர்பார்த்திருந்த

துஆயெமஸ்னூன்

இரண்டாம் பதிப்பு
மூலமும் - உரையும் தயாராகி விட்டது!

இதில் எம்பெருமானார் நபிகள் ஸல் அவர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஓதியும், செய்தும் காண்பித்த 78 துஆக்களை பாக்கெட் சைஸில் அரபி மூலமும்-தமிழ் உச்சரிப்பும், அதன் மொழி பெயர்ப்புடன் 124 பக்கங்கள் அச்சாகி வெளி வந்துவிட்டது! தனிப் பிரதி 1-க்கு 0—6—0 ஒரு பிரதி தேவைக்கு 0—7—0 அணு அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்,

குர்ஆனிய்யா புக் டிப்போ,
56, தாசில்தார் பள்ளிவாசல் தெரு, **மதுரை.**

بسم الله الرحمن الرحيم

الحمد لله نحمده ونستعينه ونؤمن به ونتوكل عليه ونعوذ بالله
من شرور انفسنا ومن سيئات اعمالنا من يهده الله فلا مضل له
ومن يضلله فلا هادي له ونشهد ان لا اله الا الله وحده لا
شريك له ونشهد ان سيدنا محمدا عبده ورسوله

தஃலீமுத்தீன் என்ற உர்தூ நூலின் மூலகர்த்தாவான ஹகீமுல் உம்மத் மௌலானா முஹம்மத் அஷ்ரப் அலீ தானவீ (ரஹ்மத்துல்லாஹி அலைஹி) அவர்கள் தஃலீமுத்தீனுக்குத் தந்த

நூன்முகம்

உலக இரக்ஷகனை போற்றிப் புகழ்ந்த பின்னர் கூறுவதாவது:—

இஸ்லாம் என்றால் என்ன? தொழுகை, நோன்பு, மறைவான சில உண்மைகளை நம்புதல், பரலோகத்தில் என்ன நிகழும்? சொர்க்கத்தில் ஹூருல்ஈன்களென்னும் கண்ணழகிகள் கிடைப்பர். நரகத்தில் பாம்பும், தேளும் நிறைந்திருக்கும் என்பன போன்ற சில போதனைகள் கொண்ட ஒரு மதம். மற்றபடி மனிதனின் அகபுற வாழ்வுக்கும் அதற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அல்லாஹ், அவன் தூதர் பற்றி நினைத்தபடி யூகித்துக் கொள்ளலாம். விரும்பிய பிரகாரம் லேவாதேவி வியாபாரம், கூட்டுறவு

முறைகள் செய்து கொள்ளலாம். உண்பது, உடுத்துவது, உட்காருவது, எழுந்திருப்பது, சந்திப்பது, குடும்ப பரிபாலனம் இவை பற்றியும் ஒரு கட்டுப்பாடு கிடையாது. மனப்பக்குவம் செய்து கொள்ளும் முறைகளையும் நம்மிஷ்டப் படியே கையாண்டு கொள்ள வேண்டியதுதான் சுருங்கக் கூறுமிடத்து சகல காரியங்களிலும் நமக்குச் சுதந்திரமளிக்கப்பட்டிருக்கிறது.

அப்படியே சில திட்டங்கள் நமக்குத் தேவைப்பட்டாலும் பிற சமயத்தவரைப் பின் பற்றி வியாபாரம் செய்து கொள்ள வழியிருக் கிறது. நாட்டுப் பரிபாலனங்கள் குறித்து பழைய புதிய தத்துவ ஞானிகளிடம் பாடங் கற்றுக் கொள்ளலாம். மனப் பக்குவம் அடைவதற்காகச் சில மூடர்களிடம் சென்று தன்னைத் தெய்வம் என்று கூடத் தாவாச் செய்வதற்குத் தயங்காத போலிச் சந்நியாசிகளிடம்போய் கற்றுக்கொள்ள லாம். இஸ்லாத்திலே, தெய்வ இலட்சணங்கள், தூதுவத் தன்மைகள் குறித்து எவ்வித்க் கட்டுப் பாடுமில்லை. பரஸ்பர கடமைகள் பற்றிய போத னைகளோ, குண ஒழுக்கங்கள் பற்றிய விளக்கங் களோ, ஆத்ம முன்னேற்றப் படித்தரங்களின் சம்பூர்ண அனுஷ்டானத் திட்டங்களோ எதுவும் கிடையாது என்ற அளவுக்குத் தற்காலத்திலே பெரும்பாலோர் இஸ்லாத்தைப் பற்றி விளங்கி இருக்கிறார்கள்.

இத்தகைய விபரீதமான விளக்கத்தினால் விளைந்த கேடுகள் சின்னஞ் சிறியவைகள் அல்ல. இதன்

மூலம் ஒவ்வொரு சாரரும் ஒவ்வொரு முடிவுக்கு வரத் தலைப்பட்டார்கள்.

1. இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாம் சம்பூர்ணத்துவமுடையதல்ல என்று குற்றம் சாட்டினார்கள்.

2. படித்த இளைஞர்கள் தம் அறியாமையின் காரணத்தால் சில விஷயங்களில் நாம் நவீன நாகரீகங்களின் பால் மிகவும் தேவையுடையவர்கள் என்ற கருத்தில் புறம்பான வழிமுறைகளை நம் மார்க்கமாகிய தீனுல் இஸ்லாத்தின் வழிமுறைகளைக் காட்டிலும் அதிக சிரத்தையுடன் பின்பற்றிவந்ததோடல்லாமல் தம் கொள்கையில் பெரும்பாலானவற்றைக் கண்டு எள்ளிநகையாடவும் துணிவு கொண்டனர்.

3. ஒன்றுமறியாத பாமரர்களோவெனின் தொழுகை, நோன்பு இத்தியாதி காரியங்களில் உலமாக்களிடம் சென்று கேட்டுத் தெரிந்து கொள்வதை அவசியமெனக் கருதினர். மற்றபடி பரஸ்பர கடமைகள் பரிபாலனங்கள், விஷயத்தில் தாம் சுயேச்சை யுடையவர்கள் என்று எண்ணலாயினர். இதனால் தான், உலமாக்களிடத்திலே வழக்கு, வியாபாரம் சம்பந்தமாக ஆலோசனைகள் கேட்கப்படுவதில்லை, தௌஹீது ரிசாலத்து (தூதுவத்துவம்) பற்றிய உட்பிரிவுகளையும், கோரிக்கைகளையும் கேட்டு விளங்கிக் கொள்வதில்லை. சில அமல்களினால், தெய்வத்தன்மையில் ஷிர்க்கும், நுபுவ்வத்தில் ஷிர்க்கும். உண்டாகி விடுகிறது. பெண்களில் இத் தீமை மிக மிக அதிகம்.

4. ஆலிம்கள், இரவு பகலாக அமல் இபாதத்துகளின் மஸாயில்களைத் தேடித் துருவி எடுப்பதில் கவனஞ் செலுத்துகிறார்களே தவிர பரஸ்பர கடமைகள், குணம், ஒழுக்கம், மன ஆத்ம, சீர்திருத்தம் பற்றி அக்கரை செலுத்துவதில்லை. கல்வியில் முன்னேறிச் செல்லச் செல்ல, தற்பெருமை, அகங்காரம், பேராசை, உலகப்பற்று, மெய் மறதி இவைகளிலும் முன்னேறிச் செல்கின்றனர்.

5. **தர்வேஷ்**களென்னும் துறவிகளின் நிலை இதைவிட விசித்திரமா யிருக்கிறது. இவர்கள் ஷரீஅத்தையும், தரீகத்தையும் வெவ்வேறாகப் பிரித்துணரலானார்கள். ஹகீகத்துதான் முக்கிய நோக்கமென்றும் ஷரீஅத் என்பது கட்டுப்பாட்டுக்குரிய ஓர் திட்டமென்றும் நம்பலானார்கள். உலமாக்களின் தொடர்பிலிருந்து தூரமானார்கள். சத் முயற்சியில் சம்பவிக்கும் சிற்சில மாறுதல்களை "ஞானத்தின் உச்சம்" என்று மனப்பால் குடித்துக்கொண்டு யூகங்களை ஞான விளக்கம் என்றும், ஞான விளக்கங்களை மேலான பேரின்பம் என்று தாமே விசுவாசித்துக் கொண்டார்கள். அவைகளை ஷரீஅத்தின் தராசில் நிறுத்தி எடை போடுவதற்கோ உலமாக்களிடம் கூறி அறிந்து கொள்வதற்கோ அவர்களுக்குத் தேவை ஏற்படவில்லை.

இவ்வாறு சகல பிரிவாரிடையேயும் இந்த விபரீத விளக்கத்தினால் சற்றேறக் குறைய மாறுதல்கள் நிச்சயமாகவே உற்பத்தியாயின. இன்னா லில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

உண்மையில் ஒருவர் குர்ஆனையும், ஹதீஸை யும் கவனக் கண்கொண்டு காண்பாராயின் இந்த சகலவித போதனைகளையும் தெளிவான வாக்கி யங்களில் கூறப்பட்டிருப்பதை அறிந்து கொள் வார் : பரிசுத்த ஷரீஅத்தாகிறது சம்பூரணத்துவ முடையதாகவும். பிற சட்ட திட்டங்கள், போத னைகள் பால் தேவையற்றதாகவும் இருப்பதைக் கண்டு கொள்வூான், உண்மை இவ்விதம் இல்லை யென்றால் இறைவன் தன் திருமறையிலே, "**உங்களிடையே, உங்களிலிருந்தே ஒரு ரஸூலை நாம் அனுப்பினோம் ; அவர் உங்களுக்கு நம் வேத வசனங்களை ஓதிக் காண்பிக்கிறார் ; உங்களைப் பரிசுத்தப் படுத்து கிறார் ; வேதத்தையும், ஞானத்தையும் உங்களுக்குக் கற்பித்துத் தருகிறார். மேலும் நீங்கள் அறியாதவற்றை யெல்லாம் உங்களுக்குப் போதித்துத் தருகிறார்.** என் றும் இன்றைய தினத்தில் உங்களுக்கு நாம் உங்க ளுக்கு உங்களுடைய தீனை சம்பூரணத்துவ முடையதாக்கி யுள்ளேன். என்னுடைய பாக்கி யங்களை உங்கள்மீது பூர்த்தி செய்து விட்டேன். மேலும் **இஸ்லாமை** உங்களுக்கு தீனாக (வாழ்க் கைத் திட்டமாக) நான் பொருந்திக் கொண் டேன் என்றும் கூறி அருளி யிருக்க மாட்டான்.

சிலர், நம்பெருமானார் ஸல் அவர்களிடம் யூதர் களின் சில விஷயங்கள் எங்களுக்கு நல்லதாகத் தெரிகிறது. அவைகளை எழுதி வைத்துக்கொள்ள அனுமதி தாருங்கள் நாயகமே! என்று கோரிய போது "யூதர்களும் கிறிஸ்தவர்களும் தத்தளித் துக் கொண்டிருப்பது போல நீங்களும் தத்தளித் துக் கொண்டிருக்கிறீர்களா? நிச்சயமாகவே

உங்களிடம் நான் மிகத் தூய வெண்மையான மார்க்கத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று அறிவுறுத்தினார்கள். இது மிகத் தெளிவான விஷயம்: இதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை எனக் கருதுகிறோம்.

நிற்க, எந்தக் குர்ஆன் ஷரீபிலே, மறைவானவற்றை நம்பும்படியும், தொழுது நோன்பு நோற்று, தர்மஞ் செய்யும்படியும் கூறப்பட்டிருக்கிறதோ அதே குர்ஆன் மஜீதிலே திருமணம் பிரிவினை, வியாபாரம், வட்டி, மோசடி, ஸலாம் சொல்லுதல், ஸிபாரிஷ் செய்தல், பெற்றோர் நலம் பேணல், உறவினர், சுற்றத்தார், பந்து மித்திரர்களின் கடமைகள், விரயஞ் செய்தல், சகோதர வாஞ்சை, பரிகாசம், புறம், பொய், பெருமை, பொறுமை, தவக்கல், நம்பிக்கை, பயம், பக்தி இவை எல்லா விஷயங்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இவ்வாறே ஹதீது கிரந்தங்களின் அட்டவணைகளைப் புரட்டிப் பார்க்கையில், ஈமான், தொழுகை, ஜகாத், இத்தியாதி தலையங்கங்களுக்குப்பின், வியாபாரம் நிக்காஹு, தலாக், ஒழுக்கம், முதலிய தலையங்கங்களும் காணப்படுகின்றன.

இவ்வாறிருக்க, இஸ்லாம் சில கொள்கைகளையும், அமல்களையும் மாத்திரமே கற்பித்துத் தரவில்லை என்ற எண்ணத்திற்கு எங்கே இடமிருக்கப் போகிறது? இக்கட்டத்தில் ஒரு நீதிவான் '' இஸ்லாம் நமக்குச் சகல கருமங்களையும் போதித்துக் கொடுத்திருக்கிறது; அது பிறரளவில் நம்மைத் தேவை யாவதற்கு இடம் வைக்கவில்லை'' என்றே உறுதி கொள்வான். பிறசமுதாய நேர்மையாளர்களும் தாம் இஸ்லாமிலிருந்தே பயன் பெற்றிருப்பதாக ஒப்புக்கொள்கின்றனர்.

சுருங்கக் கூறுமிடத்து மேற்கூறப்பட்ட எண்ணமாகிறது. உலகில் வியாபித்து சகல தறத்தாருக்கும் துன்பங்கள் வியாபித்துக் கொண்டிருப்பதை அறிந்து. இந்த விபரீத எண்ணத்தைப் போக்க வேண்டும். இது பற்றி ஒரு நூல் எழுத வேண்டும். அதில் சகல விஷயங்களும் குர்ஆன், ஹதீதிலிருந்து பொறுக்கி எடுக்கப் பட்டு தொகுக்கப்பட வேண்டும் என்று இஸ்லாமிய அனுதாபமாகிறது எம்மைத் தூண்டியது.

இந்த நூலின் வாயிலாக இஸ்லாமிய சகோதரர்கள் அனைவருக்கும் பயனளிப்பது நோக்கமாயிருப்பினும் சிறப்பாக **ஞான வழி** செல்பவர்களின் அபிலாஷையையே முன்வைத்து எழுதப் பட்டிருக்கிறது. ஆகவே பொதுவாக சகல முஸ்லிம்களும், சிறப்பாக ஞான வழி செல்பவர்களும் இதனை ஆராய்வதுடன் இதனை சிறிது சிறிதாக ஜபமாக (வாளீபாவாக) ஆக்கிக் கொள்வதும் இன்றியமையாதது ஏனெனில், **"மெய் காதலன் சந்தோஷமுற வேண்டுமென்பதே ஞானியின் ஜீவித லட்சியம்"** அந்த மெய்க் காதலின் கட்டளைகளுக்குக் கீழ்படிவதின் மூலமே அவன் சந்தோஷத்தைப் பெற முடியும். எனவே மெய்க்காதலின் கட்டளைகள் எல்லா நிலைமைகளுடனும் சம்பந்தப் பட்டிருக்கும்போது எல்லா சமயத்திலும் அவனுக்குக் கீழ்படிவதின் மூலமே அவன் சந்தோஷத்தைப் பெற முடியும் என்றாகிறது. ஆகவே, மெய்வழி செல்ல விரும்புகிறவர்கள் தம்முடைய (அகீதா) நிர்ணயக் கொள்கைகளை "சுன்னத்து வல்ஜமாஅத்" கூட்டத்திற் கேற்ப மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம். பர்லான கடமைகளான தொழுகை, நோன்பு போன்றவைகளின் சட்டதிட்டங்களை அறிந்து 'அனுஷ்டித்து வரவேண்டும். ஹராம், ஹலால் பற்றிய விபரங்

களையும் தெரிந்து கொள்ள வேண்டும். **ஹலாலைப் புசிப்பதால் இருதயத்தில் ஒளி பிறக்கிறது.** வாழ்க்கை நிர்வாகங்கள் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும். இதனால் உரிமையாளர்களின் உரிமைகள் பாழாக்கி விடாமல் இருப்பதற்கு வழி பிறக்கும். உரிமைகளில் தவறிழைப்பது கொடிய அநீதியாகும். அநீதியாளனின் மீது சாபம் உண்டாகிறது. பிறகு (லஃனத்) சாபமும் (ரஹ்மத்) அருளும் ஓரிடத்தில் அமைவது எப்படி? ரஹ்மத் என்னும் அருள் இல்லாமல் ரிலா என்னும் சந்தோஷம் கிடைப்பதில்லை. ஆகவே இந்தச் சகல கட்டங்களையும் கடந்ததன் பிறகு மிகக் கூர்மையான இந்த வழியில் காலெடுத்து வைப்பார்களாக! இன்ஷா அல்லாஹ்! இத்தகையவர்கள் ஒருக்காலும் வழிதவற மாட்டார்கள். தம்முடைய லட்சியப் பாதையை நிச்சயமாக அடைந்தே திருவார்கள்.

இனி இறைவனின் திருப் பெயரால் நம் கருத்தை ஆரம்பிக்கின்றோம். கட்டுரைகளின் எண்ணிக்கைகளைக் கவனத்தில் வைத்து இதனை ஐந்து பாகமாகப் பிரிக்கின்றோம், (1) நிர்ணயக் கொள்கைகள், (2) வணக்க வழிபாடுகள். (3) பரஸ்பரக் கடமைகள், (4) வாழ்க்கை ஒழுக்கங்கள், (5) மனிதன் தூய்மை அடையும் வழிகள்.

இறைவனே! இந்தப் பாமரனுக்குத் துணை செய்தருள்வாயாக! குற்றங் குறைகளென்னும் கடலிலிருந்து கரை சேர்த்து வைப்பாயாக!

ஆமீன்! வபிஹீ நஸ்த்தஈன்!

உள்ளே......

எண்	விஷயம்	பக்கம்
1.	இஸ்லாமின் நிர்ணயக் கொள்கையும்...	10
2.	ஷிர்க்கைப் பற்றிய குறிப்பு ...	28
3.	இறைவனின் அறிவுத் திறனில்... ...	28
4.	அல்லாஹ்வுக்குச் சொந்தமான... ...	29
5.	வணக்கத்தில் இணை வைத்தல் ...	29
6.	பழக்க வழக்கத்திலுள்ள இணைகள் ...	30
7,	கப்ர்மீது நடக்கும் புதிய அனுஷ்டானம்	31
8.	பழக்க வழக்கதிலுள்ள சடங்குகள் ...	32
9.	பெருங் குற்றங்கள் ...	36
10.	(ஈமான்) விசுவாசத்தின் அம்சங்கள் ...	38
11.	பாவங்கள் செய்வதால் உலகத்தில்... ...	42
12.	வழிபாடுகளினுல் உலகத்தில் ஏற்படும்...	44
13.	வணக்க வழிபாடுகள் ...	45
14.	தொழுகை ...	49
15.	மரணமும் மரணத்தின் பிறகும் ...	56
16.	ஸகாத் ஸதகா தர்மம் ...	57
17.	நோன்பின் விளக்கம் ...	58
18.	திருகுர்ஆனை ஓதுவதற்குரிய விதிகள்...	59
19.	பிரார்த்தனை. தியானம், பாவ மன்னிப்பு, தேடும் விதிகள் ...	60
20.	குறிப்பிட்ட சமயங்களில் ஓதும் துஆ...	61
21.	ஹஜ்ஜும், மதீனவில் ஜியாரத்தும் ...	66
22.	சத்தியமும், நேர்ச்சை செய்ய நேர்ந்து...	67
23.	பார்ஸீ கீதம் ...	68
24.	நாட்டு நிர்வாகமும், பரஸ்பர... ...	69
25.	வட்டியின் விளக்கம் ...	71

எண்	விஷயம்	பக்கம்
26.	அன்பளிப்பு ...	83
27.	மரண சாசனம் ...	84
28.	திருமணத்தின் விளக்கங்கள் ...	84
29.	திருமண விருந்து ...	88
30.	ஆடவர்கள் மனைவிகளிடத்தில் நடக்க...	88
31.	பெண்கள் புருஷனிடத்தில் அனுஷ்......	89
32.	அடுத்த மதத்தவர்களுடன் எப்படி......	91
33.	தற்கொலை புரிந்து கொள்வது ...	92
34.	பதவியும் நாட்டு நிர்வாகமும் ...	93
35.	வாகனங்கள்மீது சவாரி அனுபவ... ...	95
36.	பிரயாணத்தின் ஒழுக்கங்கள் ...	96
37.	உயிர்ப் பிராணிகளை அறுக்கும் ஒழுக்கம்	97
38.	வாழ்க்கையின் ஒழுக்கமும், உண்ணுவதும் குடிப்பதும் ...	98
39.	மறைக்க வேண்டிய உறுப்புகளும்... ...	102
40.	வியாதியும் அதன் சிகிச்சையும் ...	106
41.	கனவைப் பற்றிய விளக்கம் ...	107
42.	அனுமதி கேட்டல் ...	108
43.	முஸாபஹா முஆனகா கியாம்......	109
44.	நடத்தலும், அமருதலும், படுத்தலும்	110
45.	சபையின் ஒழுக்கங்கள் ...	110
46.	பலதரப்பட்ட ஒழுக்கங்கள் ...	113
47.	பெயர் சூட்டுவது ...	114
48.	பேசக்கூடிய ஒழுக்கங்கள் ...	115
49.	நாவைப் பேணல் ...	116
50.	ஊழியமும் கடமையும் ...	116

தஃலீமுத்தீன்

என்னும்

நன்மார்க்க நடைகள்

இஸ்லாமின் நிர்ணயக் கொள்கையும் மெய்ப்பித்தலும்

1. உலகமனைத்தையும் இல்லாமையிலிருந்து **அல்லாஹு** சிருஷ்டித்தான்.

2. **அல்லாஹு** ஒருவன். அவன் (எவரிடமும்) தேவையற்றவன். அனைத்தும் அவனது அருளையே எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றன.

3. **அல்லாஹு** (எவரையும்) பெறவுமில்லை; பெறப்படவும் இல்லை; அவனுக்கு ஒப்பாகவும் எதுவுமில்லை.

4. ஆதியும் அவனே; அந்தமும் அவனே.

5. **அல்லாஹுவுக்கு** ஒப்பாரும் மிக்காரும் இல்லை. அவன் தனித்தவன். அவன் ஜீவனுள்ளவன். எல்லா வஸ்துக்களின் மீதும் சக்தியுள்ளவன் அவன் சகல வஸ்துக்களையும் நன்கு அறிந்தவன். அவன் யாவற்றையும் உற்று

நோக்கினவனாகவே இருக்கிறான். தான் விரும்பியதை யெல்லாம் செய்யக்கூடியவன்; கூறக்கூடியவன்; அவனே வணக்கத்திற்குரியவன். அவன் இணையற்றவன். தன் அடியார்கள் மீது கிருபையுள்ளவன். அவன் சகல குறைகளையும் விட்டும் தூயவன். எச்சமயத்திலும் தன் அடியார்களைக் காப்பாற்றுபவன். அவன் கண்ணியமுடையவன்; உயர்ந்தோன்! சிருஷ்டிப்பவன்; பாவங்களை மன்னித்தருள்பவன், பேராற்றலுடையவன்; ஈகையுள்ளவன். அல்லாஹ் நாடியவர்களை உயர்த்துகிறான்; இன்னும் நாடியவர்களைத் தாழ்த்துகிறான்; நாடினவர்களைச் செல்வவானாக ஆக்குகிறான்; நீதமுள்ளவன்; சகிப்புத் தன்மையுடையோன்; உழைப்பின் தரத்தை அறிபவன்; பிரார்த்தனைகளை ஏற்பவன்; அவன் ஒவ்வொரு காரியங்களிலும் நிபுணத்துவமுள்ளவன்; காரியங்களைப் பூர்த்தி செய்பவன்; அவனே யாவற்றையும் படைத்தவன்; **இறுதி** நாளில் எழுப்புகிறவன்; உயிர் உண்டாக்குகிறவன்; மரிக்கச் செய்பவன்; எனவே அல்லாஹ்வை தத்துவங்கள் வருணனைகள் ஆகியவற்றின் மூலமாக அனைவரும் அறிகின்றனர். ஆனால் அவனது நுட்பத்தை எவரும் அறிய இயலாது. அவனே குற்றவாளிகளின் குற்றத்தை மன்னிப்பவன். எவர்கள் தண்டனைக்குத் தகுதியானவர்களாக இருக்கின்றனரோ அவர்களுக்குத் தண்டனை யளிக்கிறான். அவனே நேரான பாதையைக் காண்பிக்கிறான். அவனுக்கு நித்திரை யில்லை.

அவனுக்கு உலகத்தைக் கவனிப்பதில் **சோர்வு** ஏற்படுவதில்லை. அவனே யாவருக்கும் உதவி யளிப்பவன். அவனுக்கு பரிபூரணமான எல்லா **அம்சங்களும்** உள்ளன.

6. அல்லாஹ் சிருஷ்டிகளின் தன்மைகளை விட்டும் பரிசுத்தமானவன்.

7. திருகுர்ஆனிலும், நாயகமொழிகளிலும் சில இடங்களில் சிருஷ்டிகளுக்குள்ள அம்சத்தைத் தழுவின விஷயங்களைப் பற்றி கூறப்பட்டிருப்பதை அதன் கருத்து அல்லாஹ்வுக்கே தெரியும் என்று ஒப்படைத்து விடுவதே நலம். அல்லது, அதற்குத் தகுதியான மொழிபெயர்ப்பைச் சொல்வதுமாகும்.

8. உலகத்தில் நடக்கக்கூடிய நல்லது கெட்டது யாவற்றையும் அவைகள் நடைபெறுவதற்கு முன் சதா அறிந்து கொண்டிருப்பவன் அல்லாஹ். தன் நாட்டத்தின்படியே சிருஷ்டிக்கிறான். இதற்கு (தக்தீர்) **விதி** எனப் பெயர். பெரிய காரியங்களைச் சிருஷ்டிப்பதில் மிகவும் தெரிந்தவன். அவைகளை எவரும் அறிய முடியாது.

9. அல்லாஹ் தனது அடியார்களுக்கு அறிவையும், நாட்டத்தையும் கொடுத்திருக்கிறான். அந்த அறிவினால் அவர்கள் நன்மை தீமைகளைத் தெரிந்து தனது அபிப்பிராயப்படி செய்கின்றனர். ஆனால், அடியார்களுக்கு எதையும் சிருஷ்

டிக்கச் சக்தியில்லை. **தீமையான** செயல்களில் அல்லாஹ் பொருத்த மற்றவனுகிறன். **புண்ணிய மான** காரியங்களில் சந்தோஷமடைகிறன்.

10. அல்லாஹ் தன் அடியார்கள் செய்ய இயலாத காரியங்களைப் பற்றி கட்டளையிட வில்லை.

11. அல்லாஹ் எதையும் செய்யக் கடமைப் பட்டவனல்ல. அவன் எதைக் கிருபை செய் கிறனே அதுவே அவனின் நன்கொடையாகும்.

12. அநேக **நபிமார்கள்** அல்லாஹ்விஞல் இவ்வகிலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளார்கள். இவர்கள் அல்லாஹ்வின் அடியார்களுக்கு நேர் வழியைக் காண்பிக்க வந்தார்கள். அந்த **நபிமார் கள்** பாவங்களை விட்டு மிகவும் தூய்மையானவர் கள். அவர்களின் பூரண எண்ணிக்கை அல்லாஹ் வுக்கே தெரியும். அவர்களை மெய்ப்பிப்பதற் காகவே அவர்களாலேயே மற்றவர்கள் செய்ய முடியாத, புத்தப்புதிய மிகச் சிரமமான காரியங் களைத் தெரியப்படுத்தினன். இதற்கு '**முஃஜிஸா**' என்று பெயர். இவர்களில் முதன்மையானவர் கள் **ஆதம்** அலை அவர்கள் ஆவார்கள். இறுதி நபி **முஹம்மத்** ஸல் அவர்கள் ஆவார்கள். இவர்களுக் கிடையில் பல நபிமார்கள் வந்திருக்கின்றனர். இவர்களில் பிரபல்யமானவர்கள் நூஹ் அலை, இபுறுஹிம் அலை, இஸ்ஹாக் அலை, இஸ்மாயீல் அலை, யஃகூப் அலை, யூசுப் அலை, தாவூத் அலை, ஸுலைமான் அலை,

அய்யூப் அலை, மூஸா அலை, ஹாரூன் அலை, ஸகரிய்யா அலை, யஹ்யா அலை, ஈஸா அலை, இல்யாஸ் அலை அல்யஸஉ அலை, யூனுஸ் அலை, லூத் அலை, இத்ரீஸ் அலை துல்கிப்ல் அலை, ஸாலிஹ் அலை, ஹூது அலை, ஷுஐபு அலை ஆகியோர் ஆவார்கள்.

13. **நபிமார்களில்** சிலர் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள். எல்லாரையும்விட உயர்ந்தவர்கள் **நபி முஹம்மத்** ஸல் அவர்கள் தான். இவர்களுக்குப் பிறகு புதிய நபி எவரும் இறுதிநாள் வரை வரமாட்டார்கள். **இறுதிநாள்** (கியாமத்) வரை எத்தனை மனிதர்கள், ஜின்கள் உண்டாவார்களோ அவர்கள் அனைவருக்கும் **முஹம்மது** ஸல் அவர்களே **நபி** யாவர்கள்.

14. நமது **நபி முஹம்மத்** ஸல் அவர்களை; இருக்கும் சமயத்திலேயே சரீரத்துடன் மக்காவிலிருந்து பைத்துல் முகத்தஸுக்கும் அதிலிருந்து ஏழு வானங்களுக்கும் அங்கிருந்து அல்லாஹ் தனக்குப் பிரியமான இடம் வரை அனுப்பி வைத்து பிறகு மக்காவுக்கே திருப்பி அனுப்பி வைத்தான். அதை "**மிஃறாஜ்**" என்று கூறப்படும்.

15. அல்லாஹ் சில சிருஷ்டிகளை **ஒளியால்** படைத்து அவர்களை நமது பார்வையிலிருந்து மறைத்து வைத்திருக்கிறான். அவர்களுக்கு வானவர்கள் (மலாயிகத்) எனப் பெயர். அவர்களில் **ஆண் பெண்** என்ற பிரிவினை இல்லை. அநேக காரியங்கள் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. அவர்கள் அல்லாஹ்வின்

உத்தரவுக்கு எப்பொழுதும் மாற்றம் செய்வ தில்லை. அவர்களில் நான்கு வானவர்கள் பிரபல்யம் வாய்ந்தவர்கள். அவர்கள் ஹஸ்ரத் **ஜிப்ரயீல்** அலை, **மீகாயீல்** அலை, **இஸ்ராபீல்** அலை, **இஜ்ராயீல்** அலை ஆகியோராவார்கள்.

16. அல்லாஹ் சில சிருஷ்டிகளை நெருப்பி ஞல் படைத்து அவர்களை நம்முடைய பார்வையி லிருந்து மறைத்து வைத்திருக்கிருன். அவர் களுக்கு **ஜின்** என்று சொல்லப்படும். அவர்களில் நல்தவர்களும் உண்டு; கெட்டவர்களும் உண்டு. அவர்களுக்குப் புத்திர பாக்கியமும் உண்டு. அவர்களில் மிகவும் பிரசித்தமானவன் **இப்லீஸ்** (ஷைத்தான்).

17. ஒரு முஸ்லிம் அல்லாஹ்வுக்கு மிகவும் ஏற்ற முறையில் வணக்கம் புரிந்து, பாவத்தை விட்டு அகன்று, உலகத்தின் ஆசையை விட்டு அகன்று, நபிகளுக்கு மிகவும் வழிப்பட்டு நடந்து கொண்டால் அல்லாஹ்வுக்கு பிரியமானவனுக ஆகிவிடுகிருன். இந்த அடியானுக்கு **வலீ** என்று பெயர். வலியிடமிருந்து சில நேரங்களில் மற்ற மக்களால் செய்ய முடியாத விஷயங்கள் வெளி யாகும். இதை "**கருமத்**" என்று சொல்லப்படும்.

18. **வலீ** எத்தகைய கண்ணியத்தைப் பெற்று விட்டாலும் **நபிகள் திலகத்**துக்குச் சம மாக முடியாது.

19. மனிதன் அல்லாஹ்வுக்கு எத்தகைய பிரியமானவனுக ஆகிவிட்டாலும் அவனுடைய

பகுத்தறிவும், உணர்ச்சியும் சரியாக இருக்கும் வரை மார்க்கத்தின் கட்டளைகளுக்கு கட்டுப் பட்டு நடப்பது கடமை **(பர்லு) (தொழுகை, நோன்பு** இதர வணக்கங்களும் செய்தல் அவசியமாகும். பாவச் செயல்களில் ஈடுபட அனுமதியுமில்லை.)

20. எவன் மார்க்கத்திற்கு முரண்பட்டவ ஞக இருக்கின்றுனே அவன் அல்லாஹ்வுக்கு அன்பனல்ல, அவனுல் புதிதெனப்படக்கூடிய காரியங்கள் காண்பிக்கப்பட்டாலும் சரி, ஒன் றிருக்கில் அது **சூனியமாக** இருக்கலாம; அல்லது **இயற்கையாக** இருக்கலாம்; அல்லது **ஷைத்தானின் செயலாக** இருக்கலாம். அதை நம்புவதற்கு அனுமதியில்லை.

21. **வலியினுல்** சமயங்களில் ரகசியமான விஷயங்கள் நித்திரையிலிருக்கும்போதும், விழித் திருக்கும் சமயத்திலும் வெளியாகும். இதை '**கஷ்ப்**' இல்ஹாம் என்று சொல்லப்படும். இது வும் மார்க்கத்துக்கு ஒத்து இருந்தால் ஒப்புக் கொள்ளப்படும். மார்க்கத்திற்கு மாற்றமாக இருந்தால் ஒப்புக்கொள்ளப்பட மாட்டாது.

22. அல்லாஹ்வும் ரஸூல் ஸல் அவர்களும் மார்க்கத்தின் சகல விஷயங்களையும் **திருகுர்ஆன், ஹதீஸ்** (நாயக வாக்கியங்கள்) களில் அடியார் களுக்கு காண்பித்து விட்டனர், புதிய விஷயங் களை மார்க்கத்தில் உண்டுபண்ணுவதற்கு அனு மதி யில்லை. புதிய விஷயங்களுக்கு '**பித்அத்**' என்று சொல்லப்படும். பித்அத் பெருங் குற்ற

மாகும். ஒவ்வொருவரும் அறிய முடியாத சில நுட்பமான விஷயங்களை மிகவும் உறுதி வாய்ந்த முந்திய ஆலிம்கள் (அறிஞர்கள்) திரு குர்ஆனி லிருந்தும், **நாயக வாக்கிய**ங்களான (ஹதீஸி லிருந்தும்) அறிந்து மற்றவர்களுக்கும் காண் பித்து விட்டார்கள். இவ்விதமான அறிஞர்கள் (உலமாக்கள்) '**முஜ்தஹித்**' என்று அழைக்கப் படுவார்கள், முஜ்தஹித் பலர் உண்டாயினர். அவர்களில் பிரபல்யம் பெற்றவர்கள் நால்வர். இவர்கள் இமாம் **அஃலம் அபூ ஹனிபா** ரஹ் இமாம் **ஷாபி** ரஹ், இமாம் **மாலிக்** ரஹ், இமாம் **அஹ்மத்** ரஹ் ஆகியோராவர். எவருக்கு எந்த முஜ்தஹித்தின் பால் அதிக நம்பிக்கை இருக்கின்றதோ அவர் களைத் தொடர்வதை தெரிந்து கொள்ளலாம். இந்தியாவில் இமாம் **அபூ ஹனிபா** ரஹ்வை தொடர்ந் தவர்கள் அதிகம் உண்டு. அவர்கள் **ஹனபி** என்று கூறிக்கொள்கின்றனர். இதே போன்று **நப்ஸை** ஆத்மாவை) சுத்தப்படுத்த திருகுர்ஆனிலிருந்தும் நாயக வாக்கியங்களிலிருந்தும் **வலிமார்கள்** ஜனங் களுக்கு தங்கள் ஹிருதயப்பிரகாசத்தால் அறிந்து எடுத்துரைத்துள்ளனர். இவர்கள் '**ஷைக்**' என அழைக்கப்படுவார்கள். ஷைகுகள் அநேகர் உண்டாயினர். இவர்களில் காஜா முஈனுத்தீன் சிஷ்தீ ரஹ், கௌதுல் அஃலம் அப்துல் காதிர் ஜெய்லானி ரஹ், ஷைக் ஷிஹாபுத்தீன் ஸுஹ்ர வர்தி ரஹ், காஜா பாஹாவுத்தீன் நக்ஷ பந்தி ரஹ் ஆகியோர் ஆவார்கள். ஒரு முஜ்தஹித், ஒரு ஷைகை நம்பிக்கையுடன் தொடர்ந்த பிறகு,

மற்ற ஷைகையும், முஜ்தஹித்தையும் கெட்டவர்கள் என்று எண்ணம் கொள்வதற்கு அனுமதியில்லை. அல்லாஹ், ரஸூலின் வார்த்தைகளுக்கு முரண்படாத வரையில் ஒரு முஜ்தஹித், ஷைகை தொடரலாம். இதற்கு மாற்றம் ஏற்படின் தொடர்வதற்கு அனுமதி இல்லை.

23. ஒவ்வொரு நபியும் தங்கள் சமூகத்திற்கு மார்க்க விஷயங்களை எடுத்து உரைப்பதற்காக அல்லாஹ் அநேக சிறிய, பெரிய வேதங்களை வானுலகிலிருந்து **ஜிப்ரயீல்** அலை மூலம் இறக்கி வைத்திருக்கின்றான். அதில் மிகவும் பிரபல்யம் பெற்றவை **நான்கு வேதங்கள்**. அதில் முந்தியதான **தௌராத் வேதம்** ஹஸ்ரத் மூஸா அலை அவர்களுக்கும் **ஜபூர் வேதம்** ஹஸ்ரத் **தாவூத்** அலை அவர்களுக்கும், **இன்ஜீல் வேதம்** ஹஸ்ரத் **ஈஸா** அலை அவர்களுக்கும், **குர்ஆன் மஜீத்** நமது **நாயகம்** ஸல் அவர்களுக்கும் அருளப்பட்டன. **குர்ஆன் மஜீத்** இறுதி வேதமாகும். இனி எந்த வேதமும் வானுலகிலிருந்து வர மாட்டாது. முடிவு (**கியாமத்**) வரை திருகுர்ஆன் சட்டங்களே நடைபெறும். இதர வேதங்களை வழிகெட்ட மக்கள் மாற்றி விட்டார்கள். ஆனால் **திரு குர்ஆன் ஷரீபை** காப்பாற்றுவது அல்லாஹ்வின் **பொறுப்பு** என அல்லாஹ் வாக்குறுதி செய்திருப்பதால் அதை எவரும் **மாற்ற** முடியாது.

24. நமது நபிகள் **முஹம்மத்** ஸல் அவர்களை எந்த முஸ்லிம் பார்த்தார்களோ, **அவர்களுக்கு ஸஹாபி** (தோழர்) என்று சொல்லப்படும். அந்த

ஸஹாபிகளைப் பற்றி மிகவும் கண்ணியங்கள் வந்து உள்ளன. ஸஹாபிகளைப் பற்றி அன்பும் நல்லெண்ணமும் கொள்வது கடமையாகும். அவர்களின் மத்தியில் சச்சரவைக் கேள்விப்பட்டால், மனிதனின் இயற்கையான மறதி என்று அறிந்து அவர்களை இகழ்ந்து பேச வேண்டாம். ஸஹாபிகளில் மேலானவர்கள் நான்கு பேர்கள் இவர்களில் ஹள்ரத் **அபூபக்கர் ஸித்தீக்** ரலி அவர் ரஸூலுல்லாஹ்வுக்குப் பிறகு அவர்களுடைய ஸ்தானத்தில் பதவியேற்று மார்க்கத் தொண்டில் ஈடுபட்டார்கள். இதனால் இவர்களை முந்தின பிரதிநிதி (**கலீபா**) என்று சொல்லுகிறார்கள். **அபூபக்கர் ஸித்தீக்** ரலி மற்ற கலீபாக்களைவிட மிகவும் மேலானவர்கள். இவர்களுக்குப் பின் ஹள்ரத் **உமர்** ரலி அவர்கள் இரண்டாம் கலீபா (பிரதிநிதி)வாகவும் அவர்களுக்குப் பின் ஹள்ரத் **உத்மான்** ரலி அவர்கள் மூன்றும் கலீபாவாகவும், அவர்களுக்குப் பின் ஹள்ரத் **அலி** ரலி அவர்கள் நான்காம் கலீபாவாகவும் இருந்தார்கள்.

25. **நபிகள்** திலகத்தின் சந்ததியினரும், மனைவிமார்களும் கண்ணியப் படுத்துவதற்குத் தகுதியானவர்களாக இருக்கின்றனர். நபிபெருமானார் அவர்களுடைய புத்திரிகளில் மிக கண்ணியம் அடைந்தவர்கள் ஹஸ்ரத் **பாத்திமா** ரலி அவர்கள், மனைவிமார்களில் மேலானவர்கள் ஹள்ரத் **கதீஜா**, ஹள்ரத் **ஆயிஷா** ரலி ஆகியோராவார்கள்.

26. அல்லாஹ், ரஸூல் ஆகிய இருவர்களின் வாசகங்களை உண்மையென அறிந்து, அதை ஒப்புக் கொள்வதில் தான் ஈமான் (விசுவாசம்) உறுதியடைகிறது. அல்லாஹ், ரஸூலின் வார்த்தைகளைச் சந்தேகித்தலும், அதைப் பொய்ப்படுத்தலும், அதில் குறைகளை உண்டு பண்ணுவதும் அல்லது இருவர்களால் கூறப்பட்ட வாக்கியத்தைக் கொண்டு பரகசிப்பதும் ஈமானை (விசுவாசத்தை) இழக்கக்கூடியதாக இருக்கின்றன.

27. திருகுர்ஆனிலும், ஹதீஸிலும் வெளிப்படையான கருத்துக்களை ஒப்புக்கொள்ளாமலிருப்பதும். தந்திரம், சூழ்ச்சி செய்து தன்னுடைய கருத்தின்படி மொழி பெயர்ப்பை உண்டாக்குவதும் மார்க்கத்தில் தீமையான விஷயங்களாகும்.

28. பாபங்களை தடுக்கப்படாதது (ஹலால்) என்ற எண்ணம் கொள்வதால் விசுவாசம் (ஈமான்) அகன்று விடுகின்றது.

29. எத்தகைய பெருங்குற்றமாக இருந்தாலும், அதை கெடுதி என எண்ணம் இருக்கும் வரை ஈமான் அகலுவதில்லை. ஆனால் (ஈமான்) பலஹீனமடைகிறது.

30. அல்லாஹ்வை பயப்படாமலிருப்பது அல்லது ஆதரவு அற்று விடுவது அவிசுவாசமாகும் (குப்ருகும்).

31. மறைவான விஷயங்களை மற்றவர்களிடம் கேட்பதும், அதை உறுதிப்படுத்துவதும் குப்ருகும். நிச்சயமாக நபிகளுக்கு 'வஹி'யின் மூலமும், வலிமார்களுக்கு 'கஷ்ப்' இல்ஹாம் (உதிப்பு) மூலமும், பொதுமக்களுக்கு அடையாளங்களாலும், சில விஷயங்கள் அறிவதற்கு உண்டாகின்றன.

32. ஒருவனின் பெயரைக் குறித்து 'காபிர்' என்று சொல்வது, அல்லது அவனைச் சாபமிடுவது பெருங்குற்றமாகும். 'அநீதம்' செய்பவன் மீது சாபம் உண்டாகுக; பொய்யர்கள் மீது முனிவு உண்டாகுக; என்று கூற அனுமதி உண்டு. எவரின் மீது அல்லாஹ்வும் ரஸூலும் சாபம் இட்டு இருக்கின்றனரோ அல்லது காபிர் என்று சொல்லி இருக்கின்றனரோ அவர்களை காபிர் அல்லது முனிவு பெற்றவன் என்று கூறுவது தவறல்ல.

33. மனிதன் இறந்த பிறகு அடக்கப்பட்டிருந்தாலும், அடக்கப்படா விட்டாலும், அந்நிலையில் முன்கர், நகீர் என்ற இரு பெயர் பூண்ட இரண்டு வானவர்கள் இறந்தவனிடம் வந்து, "உன் அல்லாஹ் யார்? உன் மார்க்கம் எது? ரஸூல் முஹம்மத் ஸல் அவர்களைப் பற்றி அவருக்கும் உனக்கும் என்ன தொடர்பு? என்பதைக் கேட்கின்றனர். இறந்தவன் (ஈமான்) விசுவாசம் உள்ளவனாக இருந்தால் சரியான பதிலை அளிக்கிறான். பிறகு அவனுக்கு சகல சுகங்களும் இருக்

கின்றன. அவிசுவாசியாக இருந்தால், பதிலளிக்கையில், "**யான் ஒன்றும் அறியேன்**" என்று கூறுவான். இவனுக்கு மிகவும் கஷ்டங்கள் இருக்கின்றன. சிலருக்கு அல்லாஹ் இந்த சோதனையை மன்னித்து விடுகிறான். இந்த விஷயங்கள் யாவும் இறந்தவனுக்குத் தெரிகின்றன. நித்திரை செய்துகொண்டிருப்பவன் கனவில் பார்ப்பவை நித்திரையற்றவனுக்குத் தெரிவதில்லை. அது போன்று இறந்தவனிடத்தில் நடக்கும் விஷயங்கள் அவனுக்கே தெரியும். மற்றவர்களால் அறிய முடியாது.

34. இறந்தவர்களுக்காக **துஆ** செய்வதாலும் தர்மங்கள் செய்வதாலும் இறந்தவர்களுக்கு நன்மை கிடைப்பதுடன் பெரும் **பிரயோஜனம்** உண்டாகிறது.

35. அல்லாஹ்வும் ரஸூலும் **முடிவு நாளைப்** பற்றியுள்ள எந்த அடையாளங்களைச் சொல்லி இருக்கின்றார்களோ அவை நிச்சயம் உண்டாகும். இமாம் **மஹ்தி** அலை வருவார்கள். மிகவும் நீதத்துடன் ஆட்சி புரிவார்கள். ஒற்றைக் கண்ணுள்ள **தஜ்ஜால்** எனப் பெயர் பூண்டன் வருவான். உலகத்தில் அநேக புரட்சிகளை ஏற்படுத்துவான். அவனைக் கொலை செய்வதற்கு **ஈஸா** அலை வானத்திலிருந்து இறங்குவார்கள். அவனைக் கொன்று விடுவார்கள். **யஃஜூஜ் மஃஜூஜ்** என்ற மிகவும் சக்தி வாய்ந்த கூட்டத்தார் உலகமனைத்தும் பரவி விடுவார்கள். அவர்கள் **அல்லாஹ்வின்**

கோபத்தால் அழிந்து விடுவார்கள். மக்களிடம் வார்த்தையாடும் நூதனமான **ஒரு பிராணி** உண்டாகும். **சூரியன்** மேற்குத் திசையிலிருந்து கிளம்பும். **குர்ஆன்** மஜீத் உயர்த்தப்படும். சில நாட்களில் முஸ்லிம்கள் அனைவரும் இறந்து விடுவார்கள். உலகம் அனைத்தும் **காபிர்** (அவிசுவாசி)களினால் நிரம்பி விடும். இன்னும் அநேக **அடையாளங்கள்** உண்டாகும்.

36. அடையாளங்கள் பூர்த்தியாகும் சமயம் கியாமத் (முடிவு) நாளின் அறிகுறிகள் ஆரம்பமாகும். அல்லாஹ்வின் கட்டளையின்படி ஹஸ்ரத் இஸ்ருபீல் அலை அவர்கள் **சூர்** ஊதுவார்கள். **சூர்** என்பது பெரிய கொம்பைப் போன்றது. சூர் ஊதுவதால் **வானம், பூமி** அடங்கலும் பறக்கப்பட்ட புழுதி போன்று ஆகிவிடும். சிருஷ்டிகள் மடிந்து விடுவார்கள். அல்லாஹ் எதை உயிருடனிருக்க நாடுகிறானோ அவைகள் உயிருடன் இருக்கும். இதே நிலையில் சில காலம் நடக்கும்.

37. உலகமனைத்திலும் இரண்டாம் முறை சூர் ஊதப்பட்டு உலகமனைத்தும் உண்டாகும். மடிந்தவைகள் யாவும் உயிர்ப்பிக்கப்பட்டு கியாமத் (தீர்ப்பு நாளின்) மைதானத்தில் எல்லோரும் சேகரமாகி விடுவார்கள். அங்குள்ள கஷ்டங்கள் சகிக்க முடியாமல் தத்தளித்து யாவரும் நபிமார்களிடம் உதவி நாடுவார்கள். இறுதியாக நமது நபிகள் ஸல் (ஷிபாரிஷ்) மன்றாட்டம் செய்வார்கள். நன்மை தீமை யாவையும் நிறுக்கப்படும்.

அதைப்பற்றி விசாரணை நடைபெறும். சிலர் விசாரணை இன்றி **சுவர்க்கம்** அடைவார்கள். நல்லவர்களின் செயல்களின் **பட்டோலையை** வலது கரத்திலும். தீயோரின் செயல்களின் **பட்டோலையை** இடது கரத்திலும் அளிக்கப்படும். நமது **நபிகள்** ஸல் அவர்கள் தங்களின் உம்மத்களுக்கு **ஹௌளுள் கௌதரின்** தீர்த்தத்தைப் புகட்டுவார்கள். (அது பாலைவிட வெண்மையும், தேனைவிட தித்திப்பும் உள்ளது.) **சிருத்** என்ற பாலத்தில் நடந்து நல்லோர்கள் சுவர்க்கம் அடைவார்கள். தீயோர்கள் பாலத்தை விட்டும் நழுவி நரகத்தில் விழுந்து விடுவார்கள்.

38. நரகம் உண்டாகி விட்டது. அதில் பாம்பு,தேள் இன்னும் வகை வகையான வேதனைகள் இருக்கின்றன. நரகவாசிகளில் எத்தகைய பெரும் பாவிகளாக இருப்பினும் சரி, கொஞ்சமேனும் ஈமான் (விசுவாசம்) இருக்குமாயின் அவர்களின் தீய செயல்களுக்குத் தகுந்த பிரகாரம் நரகத்தில் வேதனை அடைந்தபின் நபிமார்கள் மற்ற பெரியோர்களின் ஷபாஅத்தால் (மன்றாட்டம்) நரகத்தை விட்டு மீட்கப்பட்டு, சுவர்க்கம் அடைவார்கள். காபிர் (அவிசுவாசி) முஷ்ரிக் (அல்லாஹ்வுக்கு இணை வைப்பவன்) இவர்கள் சதா நரக வேதனையிலேயே இருப்பதுடன் மௌத்து (இறப்பும்) வரமாட்டாது.

39. சுவர்க்கமும் உண்டாக்கப்பட்டு விட்டது. அதில் பல வகையான சுகங்களும் இருக்

கின்றன. சுவர்க்கவாதிகளுக்கு எந்த வகையான பீதியும், கவலையும் ஏற்படாது. அவர்கள் சதாவும் அங்கேயே இருப்பதுடன் இறப்பும் ஏற்படாது.

40. சிறிய பாவத்தின் மீது தண்டனை செய்வதற்கும், பெரும் குற்றத்தை தன் கிருபையினால் மன்னிப்பதற்கும் **அல்லாஹ்வுக்கு** உரிமையுண்டு.

41. எவர்களை அல்லாஹ்வும், ரஸூலும் சுவர்க்கவாதி எனக் கூறிவிட்டார்களோ அவர்களைத் தவிர்த்து வேறு எவரையும் சுவர்க்கவாதி என்று உறுதிப்படுத்த முடியாது. நல்ல அடையாளங்களைப் பார்த்து நல்லெண்ணம் கொள்வதும் அல்லாஹ்வின் அருளை ஆதரவு வைப்பதும் அவசியமாகும்.

42. **சுவர்கத்தின்** பெரும் பாக்கியம் அல்லாஹ்வின் திருச் சந்திப்பே யாகும். சுவர்க்க வாதிகளில் எவர்களுக்கு அல்லாஹ்வின் தரிசனம் ஏற்படுமோ அவர்களுக்கு மற்ற சுகங்கள் சுகங்களாகத் தெரியாது.

43. இவ்வகிலத்தில் வாழ்ந்தவனாக நேத்திரங்களைக்கொண்டு எவரும் அல்லாஹ்வை பார்க்கவும் முடியாது; பார்க்கவும் இல்லை.

44. வாழ்நாள் முழுவதும் நல்லவன் கெட்டவனாக இருந்தாலும், எந்நிலையில் இறப்பு(காதிமா) ஏற்படுகின்றதோ அதின்படியே நற்கூலி, தண்டனை கிடைக்கும்.

பிரிவு

ஸூறத்துன்னிஸாஉ 115-ம் ஆயத்து முதல் 120-ம் ஆயத்து வரை கூறப்பட்ட ஆயத்துக்கள்.

(115) எவன் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவான பின்னரும் (அல்லாஹ்வுடைய) இத்தூதரை விட்டுப் பிரிந்து விசுவாசிகளின் வழியல்லாததில் செல்லுகின்ருனே, அவனை நாம் அவன் செல்லும் (தவருன) வழியிலேயே செல்லவிட்டு (பின்னர் அவனை நரகத்தில் சேர்த்து விடுவோம். அது செல்லுமிடங்களில் மிகக் கெட்டது.

நிச்சயமாக அல்லாஹ், தனக்கு இணைவைப்பதை மன்னிக்கவே மாட்டான். இதனை அல்லாத (குற்றத்)தை (அதுவும்) தான் விரும்பியவர்களுக்கே மன்னிப்பான். ஆகவே, எவரேனும் அல்லாஹ்வுக்கு இணைவைத்தால் அவன் வெகு தூரமான வழிகேட்டில்தான் இருக்கின்றன.

அல்லாஹ்வை யன்றி அவர்கள் (தெய்வங்களாக) அழைப்பவைகள் பெண்களன்றி வேறில்லை. துஷ்ட ஷைத்தானை யன்றி (மற்றெதையும்) அவர்கள் அழைக்கவில்லை.

அந்த ஷைத்தானை அல்லாஹ் முனிந்து சபித்தான். அதற்கு அவன் உன் அடியார்களின் ஒரு குறிப்பிட்ட தொகையினரை நிச்சயமாக நான் எடுத்துக் கொள்வேன்'' என்று கூறினுன்.

அன்றி நிச்சயமாக அவர்களை வழி கெடுப்பேன். அவர்களுக்கு வீண் நம்பிக்கைகளை உண்டு பண்ணி (பிசாசுகளுக்காக பிரார்த்தனை செய்து விடப்பட்ட) ஆடு,மாடுகளின் காதுகளை அறுத்து விடும்படியும் அவர்களை ஏவுவேன். அல்லாஹ்வின் சிருஷ்டி (களுடைய கோலங்)களை பேதப்படுத்தும்படி நிச்சயமாக நான் அவர்களை ஏவுவேன்'' என்று கூறினான். ஆகவே, எவன் அல்லாஹ்வை யன்றி (இத்தகைய) ஷைத்தானை (தான் வழிப்படும்) பாதுகாவலனாக ஏடுத்துக் கொள்கிறானோ அவன் நிச்சயமாக பிரத்தியட்சமான நஷ்டத்தையே அடைந்து விடுவான்.

(120) அவர்களுக்கு (ஷைத்தான்) வாக்களிக்கின்றான். அவர்களுக்கு பொய் நம்பிக்கையுமூட்டுகிறான். எனினும் ஏமாற்றுவதற்கன்றி, ஷைத்தான் அவர்களுக்கு வாக்களிப்பதில்லை.

மேலே எழுதப்பட்டுள்ள அல்லாஹ்வின் திருவசனத்தால், 'பித்அத்' (மார்க்கத்தில் புதிய விஷயங்கள்) 'ஷிர்க்' (அல்லாஹ்வுக்கு இணை வைத்தல்) துர்ப்பழக்கங்கள் முதலிய அறியாமையினால் அல்லாஹ்வுக்கு வழிப்படுதலுக்குப் பதிலாக ஷைத்தானுக்கு வழிப்படுதல் ஏற்பட்டு, அதன் மூலம் ஏற்படும் கெடுதல்கள் தெளிவாகி விட்டன. ஆகவே இந்த விஷயங்களில் ஈடுபடுவதால் அல்லாஹ்வை ஒருமைப் படுத்தல், ரஸூலை மெய்ப்பித்தல் ஆகிய கொள்கையில் கெடுதியும் விசுவாசத்தில் (ஈமான்) இருளும் வந்து விடு

கின்றன. ஆனதால் ஜனங்கள் மேலே கூறியுள்ள கெடுதிகளை விட்டும் தவிர்த்துக் கொள்ள இஸ்லாமிய நிர்ணயக் கொள்கையைக் கூறிய பிறகு கெட்ட கொள்கை, துர்ப்பழக்கங்கள் மக்களின் மத்தியில் வழங்கி வருகின்ற பெருங் குற்றங்கள் விவரிக்கப்படுகிறது.

மேலே கூறப்பட்டுள்ள விஷயங்களில் சில பூரணமான குப்ர் (அவிசுவாசம்) ஷிர்க் (இணை வைத்தலாக) இருக்கின்றன. அதில் சில விஷயங்கள் அவிசுவாசத்திற்கு(குப்ர்)ம், இணை வைத்தலுக்கு சமீபமாகவும், இன்னும் சில விஷயங்கள் மார்க்கத்தில் புதிதாக உண்டாக்கப்படும். (பித்அத்) என்ற வழி தவறியவைகளாகவும் சிற்சில விஷயங்கள் (மக்ரூஹ்) வெறுக்கப்பட்ட குற்றமாகவும் இருக்கின்றன. ஆகவே இவைகளை விட்டும் தப்பித்து இருப்பது முக்கிய கடமையாகும். இவைகளைச் சொல்லிய பிறகு விசுவாசத்தில் (ஈமான்) ஏற்படும் குறைகளையும், ஈமானின் பிரிவுகளையும் சொல்லப்படும். ஈமானின் பிரிவுகளைப் பற்றிச் சொல்வதால், ஈமானின் உள்ள குறைகள் பரிபூரணமாக்கப்படுகின்றன. பிறகு பாவச் செயலால் உலகத்தில் ஏற்படும் நஷ்டங்களையும் அல்லாஹ்வுக்கு வழிப்படுவதால் உலகத்தில் கிடைக்கும் பலனைப் பற்றியும் சொல்லப்படும். ஜனங்கள் உலகத்தில் நஷ்டத்தையும், பலனையுமே கவனிப்பதால் இதை அனுகியாவது நல்ல கிரியாம்சைகளில் ஈடுபட நல்லுதவியும், பாவத்தைவிட்டு தூரமாகுதலும் ஏற்பட

ஏதுவாகும் என்பதை உத்தேசித்து **பாவத்தால்** ஏற்படும் நஷ்டத்தையும் **ஊழியத்தால்** ஏற்படும் நலனையும் பற்றிக் கூறப்பட்டுள்ளன. ஆகவே மேலே கூறப்பட்டுள்ளவைகளுக்குள்ள ஆதாரங்களை பூராவும் இந்த சிறிய கட்டுரையில் எழுத வசதி இல்லாததால், முக்கியமான ஆதாரத்தை மட்டும் இதில் எழுதியுள்ளேன்.

'ஷிர்க்'கைப் பற்றிய குறிப்பு

'ஷிர்க்' என்பதற்கு நேர்மொழி பெயர்ப்பு இணை வைத்தல் என்பதாகும். ஷரஹில், ஷிர்க் செய்வது என்று கூறப்படும் சமயத்தில் அல்லாஹ்வுடைய உள்ளமையில் அல்லது அல்லாஹ்வின் அம்ஸங்களில் (சிபத்) அல்லது அப் ஆல் (செயல்களில்) மற்றவர்களைக் கூட்டு சேர்ப்பது என்ற கருத்தில் சொல்லப்படுகிறது. மேலே கூறப்பட்ட மூன்று வகையான ஷிர்க்கையும் இங்கு கூறப்படுகிறது. (உதாரணம்) அல்லாஹ் ஆலிம் (அறிந்தவன்) அல்லாஹ்வுடைய (இல்ம்) அறிவு போன்றவை மற்றவர்களும் அறிந்தவர்கள்தான் என்று அறிவது அல்லாஹ்வுடைய (இல்ம்) என்ற சிபத்தில் (அம்ஸத்தில்) இணை வைப்பதாகும். இது போன்றே மற்றவைகளையும் அறிந்து கொள்ளலாம். (மொழி பெயர்த்தவர்)

இறைவனின் அறிவுத் திறனின் இணை வைத்தல்

பீர் அல்லது கண்ணியமான பெரியோர்கள் நம்முடைய நிலைமைகளைத்தும் தெரிந்து கொண்டிருப்பதாக எண்ணுவதும் நக்ஷத்திர

கணிதத்தால், மறைவான (கைப்) விஷயங்களை அறியத் தேடுவதும் பெரியோர்களின் வார்த்தைகளில் வரும், நற்குறி, துர்க்குறி வார்த்தையைப் பார்த்து அதை உறுதி என்று உணருவதும், தூரத்திலிருந்து ஒருவனை அழைத்துவிட்டு அவனுக்கு விஷயம் தெரிந்துவிட்டதாக கருதுவதும் ஒருவரின் பெயரால் நோன்பு நோற்பதும் அல்லாஹ்வின் அறிவுத் திறனின் இணை வைப்பதாக இருக்கின்றன.

அல்லாஹ்வுக்குச் சொந்தமான காரியங்களில் மற்றவர்களைக் கூட்டாக்குதல்

அல்லாஹ்வைத் தவிர மற்றவர்களை, நன்மையை அல்லது தீமையைத்தர சக்தியுள்ளவர்கள் என்று கருதுவது, அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் தங்களுடைய கோரிக்கையைக் கேட்பது ரிஸ்கை புத்திரர்களைக் கேட்பது, ஆகியவைகள் அல்லாஹ்வின் சுயேச்சையில் இதரர்களை கலப்பது போன்றதாகும்.

வணக்கத்தில் இணை வைத்தல்

அல்லாஹ்வைத் தவிர மற்றவைகளுக்கு சிரம் பணிவது, மற்றவர்களின் பெயரின் மீது பிராணியை விடுவது, நேர்ந்து கொள்வது. ஷீர்னி பூக்கள், நாணயங்களை பரக்கத் செய்யப் பட்ட ஸ்தானங்கள்மீது அல்லது முஸ்லிம்களின் கப்ர்கள் மீது நேர்ச்சை செய்வது, மற்றவர்களின் நேர்ச்சைகளை ஒப்புக்கொள்வது, ஒருவரின் மண்ணறையை (கப்ரை) அல்லது இடத்தை வலமிடுவது (தவாப்) அல்லது அல்லாஹ்வின்

உத்தரவுக்கு முன் மற்றவர்களின் சொல்லை அல்லது வழியை மிகைப்படுத்துவது,மற்றவர்களின் முன்பு குனிவது, சித்திரம்போல் சுவரைப் போன்று நின்று கொள்வது, **ஹஜ்ரத் இமாம் ஹுஸைன்** ரலி அவர்களின் **கர்பலா** தினத்தன்று செய்யப்படும் சடங்குகள் செய்வது, சிலுவையில் ஆடுகளை ஏற்றுவது, ஒருவரின் பெயரின் பேரில் பிராணியை அறுப்பது, மற்றவர்களிடம் முறைப்பாடு செய்வது, **கஃபா** அல்லாத இடங்களுக்கு கஃபாவைப் போன்று மரியாதை செய்தல் ஆகியவைகள் வணக்கத்தில் அல்லாஹ்விற்கு இணை வைப்பது போலாகும்.

பழக்க வழக்கத்திலுள்ள இணைகள்

ஒருவரின் பெயரின் பேரில் சிறுவர்களின் **காது மூக்குகளைக்** குத்துவது, காதுகளில்நகை இடுவது, ஒருவரின் பெயரால் காசை முடிந்து கரங்களில் கட்டுவது, அல்லது கழுத்தில் நாடா போடுவது, **முத்து** அல்லது பூக்களின் (ஸஹ்ரா) ஹாரங்களை மாப்பிள்ளையின் முகத்தில் தொங்க விடுவது, பூக்களின் **ஹாரங்களை** இடுவது, தன்னை பகீரைப் போன்று (ஞானி, சூபி, வேஷம்) தரித்துக்கொள்வது, **அலி பக்ஷ்-ஹுசைன் பக்ஷ்** என்பன போன்ற பெயர்களைச் சூட்டுவது, ஒரு வஸ்துவை **காணிக்கைக்**கென்று எண்ணம் கொள்வது, ஒரு பிராணிக்கு ஒரு மஹானின் பெயரை வைத்து அவரின் மரியாதையை அதற்குக் கொடுப்பது. **முஹர்ரம் மாதத்தில் வெற்றிலை** போடாம விருப்

பது, சிவப்புப் புடவைகளை அணியாம லிருப்பது மனைவி உணவருந்தும் பாத்திரத்தைக் கணவனுக்கு கொடுக்காம லிருப்பது, **ஆலிம்**களின் (மத அறிஞர்கள்) வேலைப்பாடுகள் நக்ஷத்திரத்தால் ஏற்படுகின்றன என்று எண்ணம் கொள்வது, நல்ல நாள் கெட்ட நாள் (நஹஸ்) பார்ப்பது நக்ஷத்திரக் கணக்கில் அல்லது ஜின் வசியம் இருப்பவர்களிடமிருந்து மறைவான விஷயங்களைத் தெரிந்து கொள்வது, **சகுனம்** பார்ப்பது, மாதங்களின் சிலவற்றை துர்க்குறி என்று எண்ணம் கொள்வது, பெரியார்களின் பெயரை (வளீபா)ப் போன்று சில பெயர்களை குறிப்பிட்ட அளவு தினந்தோறும் ஜபிப்பது, அல்லாஹ்வும், ரஸூலும் நாடினால் இன்ன வேலை நடந்துவிடும் என்று சொல்வது, அல்லாஹ் மேலே நீங்கள் கீழ் என்று சொல்வது, அல்லாஹ்வைத் தவிர மற்ற பெயர்களின்மீது சத்தியம் செய்வது, அல்லாஹ்வைத்தவிர மற்றவர்களை பெரிய அரசன் என்றோ ஆண்டவன் என்றோ சொல்வது **சிலைகளை** வைப்பது, குறிப்பாக பெரியார்களின் படங்களை **(சூரத்)** விருத்திக்கென்று (பரக்கத்) வைத்து அவைகளுக்கு கண்ணியம் செய்தல் என்பன போன்ற பல விஷயங்கள் பழக்க வழக்கத்திலுள்ள **இணை வைத்தலாக** இருந்து வருகின்றன.

கப்ர் (சமாதி) மீது நடக்கும் புதிய (பித்அத்) அநுஷ்டானங்கள்

கப்ர்கள் (சமாதி)மீது ஆடம்பரத்துடன் கூட்டத்தைக் கூட்டுவது, அதிகமாக தீபங்களை

எரிப்பது, பெண்மணிகள் கபுரடிக்குச் செல்வது துப்பட்டிகள் போடுவது, கப்ருகளை பலமாக கட்டுவது, பெரியார்களை கண்ணியம் செய்ய கப்ருகளுக்கு அளவுக்கு மீறி கண்ணியம் செய்வது, கப்ருகளை முத்தமிடுவது, வலம் (தவாப்) வருவது, சாஷ்டாங்கம் (ஸஜ்தா) செய்வது, உலக மார்க்க சம்பந்தமான முக்கியமான பணிகளைச் செய்யாமல் விட்டுவிட்டு தர்ஹாக்களின் (ஜியாரத்) தரிஸனைக்காக செல்வது, அங்கு இராகங்களைப் பாடுவது, உயரமான கப்ருகளை. கட்டி சித்திரம் வரைவது, அவைகளின் மீது புஷ்பங்களின் ஹாரங்களை இடுவது, அதன் பக்கம் தொழுவது, அதன்மீது கட்டிடம் கட்டுவது, கற்களை எழுதி கப்ருகளில் வைப்பது, கூடாரங்கள் போடுவது, நகரா அடிப்பது, மிட்டாய் போன்ற இனிப்பு பதார்த்தங்களைக் காணிக்கையாக வைப்பது ஆகியவை கபுரடியில் நடக்கும் பித்அத்களாகும்.

பழக்க வழக்கத்திலுள்ள (பித்அத்) சடங்குகள்

நாற்பதாம் நாள் பாத்திஹா செய்வது, இரண்டாம் தாரம் விவாஹம் செய்வது தேவையிருக்க இரண்டாவது திருமணத்தைக் கேவலமாக எண்ணுவது, **திருமணம், விருத்த சேதனம்** (கத்னு) போன்றவைகளில் அதன் செலவுகளுக்கு வசதியில்லாமலிருக்கையில் சகல சடங்குகளையும் நடத்துவது, கூத்தாடுவது, சாயங்களை ஒருவருக்கொருவர் தெளித்துக் கொள்வது,

ஹோலி, தீபாவளி என்ற ஹிந்துக்களின் உற்சவ சடங்குகளை நடத்துவது, ஆடவர்கள் பற்களுக்கு சாயம் இடுவது, ஆடவர்கள் மருதோன்றி இடுவது, ஆடவர்கள் சிவப்பு ஆடைகள் அணிவது, அதிகமாக மோதிரங்கள் அணிவது, ஸலாம் என்று சொல்வதற்குப் பதிலாக (பந்தகி) வணக்கம் அல்லது கோர்னிஷ் என்ற பதங்களைக் கூறுவது, தன் கணவனின் தம்பி. கணவனின் மூத்த சகோதரர்கள் - கணவனின் குப்பி மகன் கணவனின் சிறிய தந்தை மகன் இவர்களுக்கு முன் திரையின்றிப் பெண்கள் வருவது, இராகங்களையும் வாத்தியங்களையும் கேட்பது, அவைகளைக் கேட்பதையே வணக்கமாகக் கருதுவது, வம்சத்தின் மீது தற்பெருமை கொள்வது, அல்லது தனது கோத்திரம் பெரியார்களைச் சேர்ந்ததாயிருப்பதை முன்னிட்டு திருப்தி அடைவது, ஒருவருடைய வம்சத்தில் குறைகள் இருக்குமாஞல் அதன்மீது குறைபாடு சொல்வது, தொழிலைக் கேவலமாக நினைப்பது, ஸலாம் கூறுவதை மரியாதை யற்றதென்று கருதுவது, கடிதங்களில் மரியாதை தெரிவித்த பிறகு வணக்கம் என்ற பதத்தை எழுதுவது, ஒருவரை அளவு கடந்து புகழ்வது, திருமண சமயத்தில் வீணை செலவுகள் செய்வது, வீணை வார்த்தைகளைப் பிரயோகிப்பது, ஹிந்துக்களின் சடங்குகளைச் செய்வது, மணமகனுக்கு மார்க்கத்திற்கு (ஷரஃ) முரண்பட்ட உடைகளை அணிவிப்பது, அதிகப் படியாக அழகு படுத்துவது, அதிகமான தீபங்

களைக்கொண்டு செல்வது, மணமகனின் வீட்டில் பெண்களின் மத்தியில் ஆடவர்கள் செல்வது, திருமணத்திற்குப் பிறகு வழக்கத்தி லிருக்கும் விளையாட்டுக்களை விளையாடுவது, விவாஹக் கட்டணத்தை (மஹர்) அதிகமாக நிச்சயம் செய்வது, திருமணத்திற்குச் சில தினங்களுக்கு முன் மணமகளுக்கு **மஞ்சள்** நிறமான ஆடையை அணிவித்து ஒரு இடத்தில் உட்கார வைத்து விடுவது, இன்னும் இது போன்ற சடங்குகளைச் செய்வது, ஹாரங்களை முகத்தின் மீது தொங்க விடுவது, துக்கரமான நேரத்தில் சப்தமிட்டு அழுவது, நிலைமைகளைக் கூறிக் கூறி அழுவது, பழக்கத்திலுள்ள மடாக்களை உடைத்து விடுவது பல நாட்கள் அல்லது பல மாதங்கள், பாத்தி ரத்தை உடைத்த அந்த வீட்டில் எவரையும் தங்க விடாமல் செய்வது, ஷை வீட்டில் எவ்விதமான சந்தோஷ காரியத்தையும் செய்யாம லிருப்பது, குறிப்பிட்ட தேதிகளில் துக்க செய்திகளை புதுப் பிப்பது, அளவுக்கு மீறி அழகுபடுத்தும் வேலை யில் ஈடுபடுவது, சாதாரண நடை உடை பாவனை களைக் கேவலமாக மதிப்பது, வீடுகளில் உருவப் படங்களைத் தொங்க விடுவது, ஆடவர்கள் பட்டு ஆடைகளை அணிவது, வெற்றிலை அத்தர் முதலா னவைகளை வைக்கும் சாமான்களை வெள்ளி, தங் கம் முதலியவற்றில் செய்து வைத்துக் கொள் வது, பெண்மணிகள் மிகவும் மெல்லிய ஆடை களை அணிவது, அவிசுவாசிகளின் (காபிர்) நடையுடை பாவனைகளைப் பின்பற்றுவது,

திருவிழாக்களுக்குச் செல்வது, ஹிந்துக்கள் அணியக்கூடிய ஆடைகளை அணிவது, ஹிந்துப் பெண்கள் அணியக்கூடிய ஆடைகளை அணிவது, ஆண்கள் நகைகளை அணிந்து கொள்வது, தாடியைச் சிரைத்துக் கொள்வது அல்லது கத்தரித்துக் கொள்வது, அல்லது பின்னிக் கொள்வது, தலையின் நாலு பக்கங்களையும் சிரைத்து மத்தியில் மட்டும் ரோமத்தை வளர விடுவது, தலையின் முன் பாகத்தைச் சிரைத்து விடுவது, மீசையை வளர்த்துக் கொள்வது, கறண்டை மொழியைவிட கீழே வரும் விதமாக ஆடை அணிந்து கொள்வது, ஆடவர்கள் பெண்களின் நடை உடை பாவனைகளையும், பெண்கள் ஆடவர்களின் நடை உடை பாவனைகளையும் பின் பற்றுவது, அழகுபடுத்துவதையே கருத்தாகக் கொண்டு மதிலுக்கும், மோட்டுக்கும் திரை போடுவது, ஜோதிடத்தால் ஏற்படும் கெடுதியைத் தடுக்க உயிர்பலி கொடுப்பது, கருப்பு மைகளைப் பூசுவது, பெண்மணிகள் குறிப்பிட்ட இரவில் (குதாயிராத்) நேர்ச்சை கடன்கள் செய்வதாகக் குறிப்பிட்டுக் கொண்டு அந்த இரவில் ஆடுவதும் பாடுவதுமாக இரவைக் கழித்து காலையில் பள்ளிவாசலுக்கு இரவில் தயார்செய்த உணவை அனுப்புவது, பச்சைக் குத்துவது, நரைத்த உரோமத்தை அகற்றுவது, மனோ இச்சையுடன் ஆலிங்கனம் செய்வது, கரங்களைக் கோர்ப்பது, சிவப்பு நிறம் குங்கும நிறம் போன்ற ஆடைகளை ஆண்கள் அணிவது, ஜனங்களிடை

யில் வழக்கமாக இருக்கும் (ஷதரன்ஜ்) போன்ற விளையாட்டுகளை விளையாடுவது, மார்க்கத்திற்கு (ஷரஃ) முரண்பட்ட முறையில் மந்திரம் போன்றவை செய்வது, இவை போன்ற எத்தனையோ விஷயங்கள் மார்க்கத்தில் புதிதாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன. அவைகளுள் சிலவற்றை மட்டுமே கூறப்பட்டுள்ளது.

பெருங் குற்றங்கள்

அல்லாஹ்வுக்கு நிகராக இணை வைப்பது, நீதமின்றி ஒருவனைக் கொலை செய்வது, பெற்றோர்களைக் கஷ்டப்படுத்துவது, அன்னியப் பெண்களுடன் இன்பம் (ஜினா) அனுபவிப்பது, தாய் தந்தையரற்ற (யதீம்) பிள்ளைகளின் பொருளை அனுபவிப்பது, பெண்ணை (ஜினா) போகத்தின் படுதூர் உண்டுபண்ணுவது, அவிசுவாசிகளின் (காபிர்) போர்க்களத்தை விட்டுப் பின்வாங்குவது, மதுபானம் அருந்துவது, அநீதி செய்வது, ஒருவனுடைய கெடுதியை அவன் அறியாமல் மறைவாகக் கூறுவது, ஒருவனைப் பற்றி துர் எண்ணம் கொள்வது, தன்னை மற்றவர்களைவிட உயர்ந்தவனாகக் கருதுவது, அல்லாஹ்வுக்குப் பயப்படாமல் இருப்பது, அல்லாஹ்வின் அருளை விட்டு ஆதரவு அற்று விடுவது, வாக்குறுதியை நிறைவேற்றத் தவறுவது, அடுத்த வீட்டுப் பெண்களை கெட்ட எண்ணத்தோடு பார்ப்பது, நம்பிக்கைத் துரோகம் செய்வது, தொழுகை, நோன்பு, ஏழைவரி, (ஜகாத்) மக்கா யாத்திரை

(ஹஜ்) போன்ற அல்லாஹ்வின் கட்டளைகளை நிறைவேற்றுமல் இருப்பது, திருகுர்ஆனை ஓதி மறந்து விடுவது, உண்மையை மறைத்து பொய் சாட்சியம் கூறுவது, பொய் சொல்வது, பொய் சத்தியம் செய்வது, ஒருவனின் பொருள், மானம் உயிர் இவை போகக்கூடியதற்கு அல்லாஹ்வைத் தவிர மற்ற வஸ்துக்களின்மீது சத்தியம் செய்வது, அல்லாஹ்வைத் தவிர மற்றவைகளுக்கு சாஷ்டாங்கம் (ஸஜ்தா) செய்வது, ஜூம்ஆ தொழுகையை விடுவது, முஸ்லிம்களை அவிசுவாசி (காபிர்) என்று சொல்வது, ஒருவனின் கெடுதிகளைப் புறம் பேசுவது, திருடுவது, அநீதியானவர்களைச் சந்தோஷப் படுத்துவது, வட்டி லஞ்சம் முதலியன வாங்குவது, பொய் தாவாவுக்கு தீர்ப்பு அளிப்பது, வர்த்தகத்தில் வாங்குவதிலும், விற்பதிலும் குறைவாக அளப்பது, கிரயத்தை முடிவு செய்த பிறகு வற்புறுத்தி கிரயத்தைக் குறைத்துக் கொடுப்பது, ஒரு ஆண் மற்ருெரு ஆணுடன் சேர்க்கை செய்வது, மாதவிடாய் நிலையிலுள்ள தன் மனைவியுடன் இன்பம் துய்ப்பது, உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரிக்கச் செய்வதில் பிரியப்படுவது, அன்னிய பெண்களுடன் தனித்து இருப்பது, மிருகங்களுடன் புணர்ச்சி செய்வது, சூது விளையாடுவது அவிசுவாசி (காபிர்) களின் சடங்குகளை பிரியப்படுவது, ஜோதிடன் வார்த்தைகளை உண்மையென நம்புதல், தான் வணக்கம் புரிபவன் அல்லது அல்லாஹ்வுக்கு வழிபடுபவன் என்பதைச்

சொல்லுதல், இறந்தவன் மீது அடித்துக் கொண்டு அல்லது சப்தமிட்டு அழுதல், உணவுப் பொருள்களை குறை கூறுதல், கூத்துப் பார்ப்பது மக்களுக்கு காண்பிக்க வணக்கம் புரிதல், தான் ஆனந்திக்க ராகங்களை தாளம் போன்றவைகளை கேட்டல், மற்றவைகளின் இல்லத்தில் அனுமதி இன்றி நுழைதல், ஜனங்களுக்கு உபன்னியாசம் புரிய தகுதி இருக்க உபன்னியாசத்தை செய்யாமலிருத்தல், பரிகாசம் செய்து கேவலப் படுத்துதல், மற்றவர்களின் குற்றங்களில் கவனம் செலுத்துதல் முதலியன பெரும் பாவங்களாகும்.

(ஈமான்) விசுவாத்தின் அம்சங்கள்

அல்லாஹ் இருக்கிறுன் என்று உறுதி கொள்ளுதல், அல்லாஹ்வைத் தவிர மற்றவைகளை **புதிதென்று** அறிதல், அல்லாஹ்வின் வானவர்கள் (மலாயிகத்துகள்) **வேதங்கள்**, தூதர் (**நபிமார்**)கள், விதி (தக்தீர்), முடிவு (கியாம) நாள், இவை மீது ஈமான் (விசுவாசம்) கொள்ளுதல், அல்லாஹ்வின் மீது அன்பு கொள்ளுதல், மற்றவர்களிடத்தில் அன்பு கொள்வதும் வெறுப்பதும் **அல்லாஹ்**வுக்கென செய்தல், தன்னலமின்றி **ரஸூலுல்லாஹ்**வின் மீது அன்பு கொள்ளுதல், ரஸூலுல்லாஹ்வின் கண்ணியத்தை உறுதி கொள்ளுதல், ரஸூலுல்லாஹ்வின் மீது சலவாத் ஓதுவது, ரஸூலை கண்ணியப்படுத்துவதாகும்.

வணக்கங்களை அல்லாஹ்வுக்கென செய்வதும், ரஸூலுல்லாஹ்வை தொடர்வதும்

தாட்சண்யம் (நிபாக்) மனதில் ஒன்றும் வெளியில் ஒன்றும் செய்யாமலிருப்பதும், அல்லாஹ்வுக்கே என்று செய்வதாகும். அல்லாஹ்வைப் பயப்படுவது (அல்லாஹ்வுக்குப் பயப்படுதல் என்பதன் கருத்து) அல்லாஹ்வின் வேதனையை பயப்படுவதன் மூலம் வேதனைக்கு காரணமாக உள்ள செயல்களை விடுவதாகும். அல்லாஹ்வின் அருளை ஆதரவு வைப்பது, (ஒரு மனிதன் சமய சந்தர்ப்பமாக குற்றம் செய்திடில், அல்லாஹ்விடம் பாவ மன்னிப்புத் தேடி அல்லாஹ் பாவத்தை மன்னித்து விடுவான் என்று எண்ணம் கொள்வதே. அல்லாஹ்வின் அருளை ஆதரவு வைப்பதன் கருத்து) பாவமன்னிப்பு (தௌபா) சதாவும் செய்து கொண்டிருப்பது, அல்லாஹ்வின், உபகாரங்களுக்கு **நன்றி** செலுத்துவது, வாக்கை நிறைவேற்றுவது, மனோ இச்சையை விடுவதிலும் **கஷ்டங்கள்** அதிகரிக்கும் சமயத்திலும் **சகித்துக்** கொள்ளுதல்.

அல்லாஹ்வின் **விதியை** (தக்தீரை) பொருந்திக் கொள்ளுதல் பணிவைத் (தாழ்மைத் தனத்தை) தெரிந்து கொள்ளுதல்.

வெட்கப்படுதல், **முதியோர்**களுக்குக் கண்ணியம் செய்தல், **சிறுவர்கள்** மீது கிருபை காட்டுதல், **பொருமை** கொள்ளுதல் தன்னைத் தானே நல்லவனென்று கருதுதலை விடுத்தல், **பொறுமை**, **துர்** எண்ணங்களை விடுதல், **கோபத்தை** விடுதல்.

அல்லாஹ்வைப் ஒருமைப் படுத்தும் மூல மந்திரத்தை '**லாயிலாஹ இல்லல்லாஹு**' என்ற கலிமாவை ஓதிக்கொண்டே இருத்தல்

ஒரு நாளில் குறைந்தது **பத்தும்**, நடுத்தரம் **நூறும்** திருகுர்ஆனின் ஆயத்துகளை ஓதிக்கொண்டிருப்பது, இதைவிட அதிகம் ஓதுவது உயர்ந்த அந்தஸ்தாகும்.

மார்க்கத்தின் (கல்வியை) தான் கற்றுக் கொள்வதுடன், மற்றவர்களுக்குக் கற்றுக் கொடுத்தல்.

துஆ! இறைவனிடம் பிரார்த்தனை செய்தல், அல்லாஹ்வை **ஜபித்துக்** கொண்டிருத்தல், பாவ மன்னிப்பு (இஸ்திக்பார்) தேடுவதும், அல்லாஹ்வை ஜபிப்பதாகும்.

வீணான காரியங்களை விட்டும் அகன்று இருத்தல், பார்வைக்குத் தெரிந்த தெரியாத இருவகையான அசுத்தங்களை (நஜீஸ்) விட்டும் **சுத்தமாக** இருத்தல், (அசுத்தங்களை விட்டு அகன்று இருக்க முயற்சிப்பதும் சுத்தத்திலுள்ளதாகும்.)

மர்ம ஸ்தானத்தை மறைத்தல், பர்லு, நபில் தொழுகைகளைத் தொழுதல், ஜகாத் (ஏழைவரி) கொடுத்தல், பர்லு (கடமை) நபில் (கடமைக்கு அதிகப்பட்ட) தர்மங்களைச் செய்தல், வெள்ளாட்டிகளை உரிமை விடுதல், அதிக தர்மம் கொடுத்தல், உணவு அளித்தல், விருந்து செய்வதும் தர்மத்திலுள்ளதாகும். பர்லு (கடமைக்கு

அதிகமான) நோன்புகளை நோற்றல், **இஃதிகாப்** (மஸ்ஜிதில் தங்குவது) **லைலதுல்கத்ர்** இரவைஎதிர் பார்த்தல், **ஹஜ்** (மக்கா யாத்திரை)க்குச் சென்று அங்கு செய்ய வேண்டிய உம்ரா, தவாப்(வலம்) போன்றவைகளைச் செய்தல், மார்க்கத்தின்படி நடக்க முடியாத சிநேகிதத்தை விட்டு விலகிக் கொள்ளுதல், மார்க்கத்தின்படி நடக்க முடியாத தேசத்தைவிட்டு வேறு தேசத்திற்குச் சென்று விடுதல், **அல்லாஹ்வுக்கென்று** செய்த **நேர்ச்சையை** நிறைவேற்றுதல், அல்லாஹ்வின்மீது செய்த **சத்தியத்தை** நிலைநாட்டுதல், அப்படி நிறைவேற் ருமலிருந்தால் அதற்கு (கப்பாரு) குற்றப்பரிகாரம் கொடுத்தல், திருமணம் செய்து கொள்வதுடன் அல்லாஹ்வுக்கு வழிபடுதல், அதிக பய பக்தியைக் கைகொள்ளுதல்.

தன் **மக்களுக்குச்** செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றுதல், **தாய் தந்தையர்களுக்கு** உபகாரம் நன்னடத்தையுடன் நடந்து கொள்ளுதல், புத்திரர்களை சீர்திருத்தல், சுற்றத்தார்களின் கடமைகளை நிறைவேற்றுதல், அடிமைகள், வெள்ளாட்டிகள் தன் எஜமானர்களுக்கு வழிபடுதல், **எஜமானர்கள்** தன் அடிமைகள், வெள்ளாட்டிகள்மீது கிருபை காட்டுதல், **அரசர்கள்** நீதியுடன் ஆட்சி நடத்துதல், முஸ்லிம்களின் (ஜமாஅத்) சமூகத்திற்கு வழிபடுதல், முஸ்லிம் அதிகாரிகளுக்கு கீழ்படிந்து நடத்தல், ஜனங்களை **சீர்திருத்தல்**, முஸ்லிம் அரசாங்கத்தைவிட்டு விலகியிருக்கும் அட்டூழியக்காரர்களிடம் போர் புரிதல்,

நற்காரியத்தின்மீது உதவி செய்தல், **தீயகாரியத்தை** விட்டு மக்களைத் தடுத்தல், இஸ்லாமிய சட்டப்படி (ஹு¯தூத்) தண்டனைகளை விதித்தல், மார்க்கத்தை **பிரசாரம்** செய்தல், இஸ்லாமிய அரசாங்கத்தின் எல்லையைக் காப்பாற்றுதல், **அமானித** பொருள்களைக் காப்பாற்றுதல், யுத்தத்தில் கிடைத்த பொருளில் ஐந்தில் ஒரு பாகத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்தல், பணம் தேவைப்பட்டவர்களுக்கு கடன் கொடுத்தல், அடுத்த வீட்டார்களுக்கு உபகாரம் செய்தல், நன்னடத்தை நடத்தல், தன்பாத்ததிகளை வாங்குவதில் **கடினம்** செய்யாமலிருத்தல், ஹலால் (மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட) வழியில் பொருளை சேகரித்தல், அந்தப் பொருளை மார்க்கத்திற்கு விரோதமில்லாத வழியில் செலவு செய்தல், அதிகச் செலவு செய்யாமலும், மிகக் குறுகியதாக இல்லாமலும், மார்க்கத்திற்கு முரண்பாடில்லாததாக செலவு செய்தல் மார்க்கத்திற்குச் செலவு செய்வதாகும். ஸலாத்திற்குப் பதில் சொல்லுதல் தும்மினவனுக்கு நல்ல துஆ கேட்டல், ஜனங்களுக்குக் கஷ்டத்தை உண்டாக்காம லிருத்தல், விளையாட்டு **வீணான** காரியங்களை விட்டு விலகி இருத்தல், நடக்கும் வழியில் கஷ்டத்தை உண்டாக்கக் கூடிய வஸ்துக்களை அகற்றுதல்

பாவங்கள் செய்வதால் உலகத்தில் உண்டாகும் நஷ்டங்கள்

கல்வி பாக்கிய மறுத்தல், வாழ்க்கையின் வழிகள் குறைந்து விடுதல், அல்லாஹ்வைவிட்டு

வெறட்சி ஆகுதல், நல்ல மனிதர்களிடமும் பொது மக்களிடமும் வெறுக்கப்பட்டவனுகுதல், மிகுதியான காரியங்களில் கஷ்டம் உண்டாதல், இருதயத்தில் இருள் தென்படுதல், சில சமயங்களில் **மனதிலும்** சரீரத்திலும், சோர்வு ஏற்படுதல், வணக்கத்தைவிட்டு பாக்கியமற்றவனுக ஆகுதல், **வாழ்நாள்** குன்றுதல், பாவச் செயல்களைத் தொடர்ச்சியாக செய்ய நேரிடுதல், பாவ மன்னிப்பின் எண்ணத்தில் சோர்வு ஏற்படுதல், சில நாட்களுக்குள் **இருதயத்தில்** பாவத்தின் அறுவருப்பு எடுபட்டு துர்ச் செயலில் **அல்லாஹ்வின்** விரோதிகளுக்கு அனந்தரவாரிசாக ஆகுதல், அல்லாஹ்வின் சமூகத்தில் இகழப்பட்டவனுகுதல், மற்ற சிருஷ்டிகளுக்குக் கஷ்டங்கள் கொடுத்தல், அதனுல் மற்ற சிருஷ்டிகள் இவன்மீது **சாபமிடுதல்** **அறிவு** குன்றுதல், ரஸூலுல்லாஹ்வின் சாபம் இவன்மீது ஏற்படுதல், மரியாதை வெட்கம் இழத்தல், அல்லாஹ்வின் கண்ணியம் இவனின் மனதை விட்டு அகன்று விடுதல், அலாஹ்வின் கொடை (நிஃமத்) அகன்று விடுதல், கஷ்டங்கள் அதிகமாகுதல், புகழ்சிறப்பின் பெயர்கள் இவனை விட்டு நீங்குதல், அத்துடன் இவனுக்கு இழிவான பெயர் ஏற்படுதல், ஷைத்தான்கள் இவன்மீது சாடுதல், மன திருப்தியற்றவனுக இருத்தல், (சக்ராத்தில்) இறக்கும் சந்தர்ப்பத்தில் மூல மந்திரம் (கலிமா) சொல்ல நாவு வராமலிருத்தல், அல்லாஹ்வின் அருளை விட்டு ஆதரவற்றவனுக ஆகுதல், ஆதலால் பாவ மன்னிப்பு அற்றவனுக இறந்து விடுதல் முதலியனவாகும்.

வழிபாடுகளினால் உலகத்தில் ஏற்படும் சில பிரதி பலன்கள்

இரணம் அதிகரித்தல் பலவிதமான (பரக்கத்) நல்லாசிகள் ஏற்படுதல், சிரமங்களும் நிம்மதி யற்றலும் அகலுதல். **நோக்கங்கள்** இலகுவில் கைகூடுதல், மழை பெய்தல், வாழ்க்கை சுமூக மாதல், எல்லா வகையான சிரமங்கள் அகன்று விடுதல். அல்லாஹ் உதவியாளனாக இருத்தல். இவர்களின் மனதை உறுதிப்படுத்த வானவர் (மலக்கு) களுக்கு அல்லாஹ்வின் சமூகத்தி லிருந்து உத்தரவு ஏற்படுதல், உண்மையான சிறப்பு ஏற்படுதல், அந்தஸ்து உயர்தல், ஜனங்க ளிடத்தில் அன்பு உண்டாக்குதல், **திருகுர்ஆன்** இவனுக்கு சுகத்தை உண்டாக்குதல், பொருளில் ஏற்படும் நஷ்டத்திற்கு அதிகமான பகரம் கிடைத்தல், நாளுக்குநாள் **அல்லாஹ்வின்** (நிஃமத்) கொடையில் விருத்தி ஏற்படுதல், பொருள் அதி கரித்தல், மனதில் திருப்தி ஏற்படுதல், இவனின் சந்ததிகளில் இதன்பலாபலன்கள் உண்டாகுதல், இவனின் வாழ்நாளில் எதிர்பாராத நற்செய்கை களின் பாக்கியம் உண்டாதல், இரப்பின் தரு வாயில் (சக்ராத்தில்) வானவர்கள் சந்தோஷ செய்தியை அறிவித்தல், தேவையுள்ள சமயங் களில் உதவி கிடைத்தல், சந்தேகங்கள் நிவர்த்தி யாகுதல், பதவி நிலைபாடாகுதல், அல்லாஹ்வின் கோபம் குறைதல், வாழ்நாள் அதிகரித்தல், ஏழ்மையைவிட்டு தப்பித்தல், குறைந்ததில் **அதிக விருத்தி** உண்டாதல்,

வணக்க வழிபாடுகள்

1. மனதிற்குச் சங்கடம் உள்ள நேரத்தில் (உலுவு) அங்க சுத்தி திருப்தியாக செய்யுங்கள்.

2. ஒவ்வொரு சமயமும் உலுவுடனிருக்க முயலுங்கள்.

3. உலுவு உள்ள நிலைமையிலும் மீண்டும் உலுச் செய்வது மிக்க நலம்.

4. மதி (வெட்டை) விந்திறைல் (குளிப்பு) சரீர சுத்தம் (வாஜிப்) கடமை இல்லை. முன் துவாரத்தை கழுவி உலுச் செய்வது போதுமானது,

5, சந்தேகத்தால் உலு முறித்தல் ஏற்படாது உலுவை முறித்தலாக்கும் காரணங்கள் திட்டமானல்தான் உலு முறிந்து விடும்.

6. உட்கார்ந்து தூங்குவதாலும், தொழுகையின் நிலையில் தூங்குவதாலும் உலுமுறியாது

7. மலம் ஜலம் கழிக்கும்போது மேற்கு திசைப்பக்கம் முகத்தையோ அல்லது முதுகையோ திருப்பியிருக்கவேண்டாம், வலது கரத்தால் அசுத்தத்தை சுத்தம் செய்ய வேண்டாம்.

8. (நஜீஸை) அசுத்தத்தை எலும்பு, அடுப்புக்கறி இவைகளால் சுத்தம் செய்ய வேண்டாம். காரணமின்றி மூன்று மண்கட்டிகளுக்குக் குறைவாய் எடுத்துச் செல்ல வேண்டாம்.

9. சிறுநீரை சரியான விதத்தில் சுத்தம் செய்யாமலிருப்பது (கப்ரில்) மண்ணறையில் வேதனை உண்டாகும்.

10. ரஸ்தாக்களின் நிழலில் மலஜலம் கழிக்க வேண்டாம்.

11. மலங் கழிக்கச் செல்லும்போது அல்லாஹ் ரஸூலின் பெயர்கள் பதிக்கப்பட்டுள்ள மோதிரங்களை வெளியில் வைத்துவிடவும்

12. மைதானங்களில் பார்வையில் தென் படாத இடத்தில் மலம் கழியுங்கள். தரைக்கு சமீபமான பிறகு ஆடையை அகற்றுங்கள்.

13. சிறுநீரின் துளிகள் தெரித்து தேகத்தில் படாத இடத்தில் அமருங்கள். பொந்துகளில் சிறுநீர் கழிக்க வேண்டாம். ஏனெனில் ஒரு சமயம் அப்பொந்துக்களில் உள்ள தொந்தரவு கொடுக்கும் விஷ ஜந்துக்கள் கஷ்டத்தை உண்டாக்கும்.

14. மலம் கழிக்கும் சமயம் பின்பக்கம் மறைவு இருப்பது அவசியம். ஒன்றும் இல்லாவிட்டால் மணல் குவியலையாவது குவித்துக் கொள்ளவும்.

15. குளிக்கும் அறையில் சிறுநீர் கழிக்கக் கூடாது. அங்கு மலங் கழிப்பது இழிவான செலயாகும்.

16. மலம் கழிக்கும் சமயம் ஒருவருக்கொருவர் பேச வேண்டாம்.

17. மலம் கழிக்கப் போகும் சமயம் இதை ஓதுங்கள்.

اَللّٰهُمَّ اِنِّيْ اَعُوْذُبِكَ مِنَ الْخُبُثِ وَالْخَبَائِثِ

பிஸ்மிஸ்லாஹி அல்லாஹும்ம இன்னீ அஊதுபிக மினல்குபுதி வல்க பாயிதி

அல்லாஹ்வே! ஆண், பெண் ஜின், ஷைத்தான் இவைகளின் கெடுதிகளை விட்டு நான் உன்னிடத்தில் காவல் தேடுகிறேன்.

வெளியே போகும் சமயம் இதை ஓதவும்.

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَذْهَبَ عَنِّى الْاَذٰى وَعَافَانِيْ

குப்ரானக அல்ஹம்து லில்லாஹில்லதீ அத்ஹப அன்னில் அதாவஆபனி

உன்னிடத்தில் பாவமன்னிப்புத் தேடுகிறேன். எனக்கு துன்பம் விளைவிக்கும் பொருள்களை விட்டு பாதுகாத்து, எனக்கு ஆரோக்கியத்தை கொடுத்த அல்லாஹ்வுக்கே சர்வ புகழும் உரித்தாகுக! என்று சொல்லவும்.

18. மண்கட்டிகளைக் கொண்டு சுத்தம் செய்த பின் தண்ணீரைக்கொண்டு சுத்தம் செய்யுங்கள்.

குறிப்பு: மற்ற துஆக்களின் விளக்கங்களைத் தெரிய "துஆயே மஸ்னூன்" என்ற நமது வெளியீட்டில் பார்க்கவும். அரபி வார்த்தைகளை அரபி தெரிந்தவர்களிடம் தெரிந்து ஓதுக.

19. நின்றுகொண்டு சிறுநீர் கழிக்க வேண்டாம்.

20. ஒவ்வொரு தொழுகை நேரத்திலும் பற்களை மிஸ்வாக் குச்சியைக்கொண்டு சுத்தம் செய்யுங்கள். நித்திரையிலிருந்து எழுந்த சமயம் கரங்களைக் கழுவாமல் தண்ணீரில் கரங்களை விட வேண்டாம்.

21. உலுவில் கால்களின் பின்பாகத்தைத் தண்ணீரால் நன்ருய் கழுவ அதிக முயற்சி செய்யுங்கள்.

22. உழுவில் (அங்க சுத்தியில்) கரங்கள், கால் விரல்கள், தாடி இவைகளைக் கோதுங்கள்.

23. உலுவு செய்யும்போது தண்ணீர் சுத்தமானதா? இல்லையா? மூன்று தடவை செய்தோமா? இல்லையா? என்று சந்தேகிக்க வேண்டாம்.

24. உறுவில் தண்ணீரை அதிகமாக செலவு செய்ய வேண்டாம்.

25. உலுச் செய்யும்போது விரலில் மோதிரம் இருந்தால் அதை அசைத்து த்ண்ணீர் விரலுக்குள் போகும்படி செலுத்துங்கள்.

26. ஸ்நானம் (சரீர சுத்தம்) செய்யும்போது முதலில் இரண்டு கரத்தையும் கழுவி சரீரத்திலுள்ள நஜீஸை (அசுத்தத்தை) கழுவிக் கொள்ளுங்கள். பின்பு உலுச்செய்து கொண்டு மூன்று தடவை சிரசைக் கழுவிக்கொண்டு சரீரமெங்கும் தண்ணீர் விட்டுக் கொள்ளுங்கள்.

(27) ஸ்நானம் முடிந்தபின் உலு முறியாத வரையில் தனியாக உலுச் செய்ய வேண்டிய தில்லை.

28. முழுக்கு (ஜுைபத்) ஏற்பட்ட சமயத்தில் நித்திரை செய்வதற்கு அல்லது உணவு அருந்துவதற்கு அல்லது மனைவி இடத்தில் மீண்டும் போகம் செய்ய நாடினுல், அசுத்தத்தை சுத்தம் செய்து கொண்டு உலுச் செய்வதே உசிதம். உலுச் செய்யாமலிருப்பதால் குற்றமில்லை.

29. தரையில் ஜலம் தேங்கி நின்ருலும் நிர்ப்பந்தமின்றி அதில் சிறுநீர் கழிக்கவேண்டாம்

30. வெப்பத்தால் உஷ்ணமடைந்த ஜலத்தை உபயோகிப்பதால் வெண்குஷ்ட நோயின் பயம் இருக்கிறது.

31. வெள்ளிக்கிழமையன்று ஸ்நானம் செய்வது சுன்னத்தாகும். (மைய்யித்தை) இறந்தவர்களைக் குளிப்பாட்டியபின் குளிப்பாட்டியவன் ஸ்நானம் செய்து கொள்ளுதல் நலம்.

தொழுகை

தொழுகையை குறிப்பிட்ட நேரங்களில் ருகூஃ ஸஜ்தாவை முறைப்படி செய்யுங்கள். அதில் எந்த அளவுக்கு பயபக்தி உள்ளச்சப்பாட்டுடன் நிறைவேற்ற முடியுமோ அந்த அளவுக்குச் செய்யுங்கள். ஏழு வயதடைந்த புத்திரனைத் தொழும்படி வற்புறுத்துங்கள். பத்து வயதானவுடன்

அடித்தேனும் தொழும்படிச் செய்யுங்கள். தொழுகையைத் தொடர்ந்து தொழுங்கள். இஷா வுக்கு முன்பு நித்திரை செய்ய வேண்டாம். தஹஜ்ஜுத் (இராத் தொழுகை) அல்லது ஸுப்ஹு தொழுகை (காலை வணக்கம்) தவறுமலிருப்பதற்காக இஷாவுக்குப்பின் உடன் நித்திரை செய்யுங்கள்,

அஸர் தொழுகையின் (மாலை வணக்கம்) நேரம் குறுகிய நேரம், அதைக் கடைசி நேரத்தில் தொழாமலும் காலங்கடத்திக் கொண்டே இராமலும் முந்தின நேரத்திலேயே தொழுது விடுங்கள். குறித்த நேரத்தில் தொழாமல் தூங்கிவிட்டு அல்லது மறந்துவிட்டு தொழுகையின் நேரம் கடந்துவிட்டால் விழித்த சமயத்திலோ அல்லது ஞாபகத்திற்கு வந்த சமயத்திலோ தொழுது விடுங்கள். அந்த நேரம் மக்ரூஹான நேரமாக இருந்தால் அதற்குப்பின் தொழலாம்,

பாங்கு சொல்வது தொழுகைக்கு அழைப்பதற்காக வேண்டியே இருப்பதால் பாங்குக்குப் பிறகும் ஜனங்களை அழைக்க வேண்டாம். தூங்குபவனை விழிக்கச் செய்வது குற்றமில்லை. பாங்கு சொல்பவனே காமத்துச் சொல்வது உசிதம். பாங்கு சொல்பவனின் உத்தரவின்றி மற்றவர் காமத்துச் சொல்வது சரியல்ல. நன்மையைக் கருதி ஏழு வருடம் பாங்கு சொல்வதனால் அவனுக்கு **நரகம்** இல்லை என்று **தாஜுல் அன்பியா ரசூலே கரீம்** ஸல் அவர்கள் வாக்குறுதி செய்துள்

ளார்கள். பாங்குக்கும் காமத்திற்கும் மத்தியிலுள்ள நேரத்தில் (துஆ) பிரார்த்தனை செய்தால் அந்த துஆ ஒப்புக்கொள்ளப்படுகிறது.

தொழுகைக்கு ஓடி வரவேண்டாம். அப்படி ஓடி வந்தால் மூச்சு வாங்கும். மூச்சு வாங்குவதால் மன நிம்மதி இராது. தொழுவதற்காக மஸ்ஜிதுக்கு அதிக தூரத்திலிருந்து வருவதால் அதிக நன்மை கிடைக்கும்.

மஸ்ஜிதில் நுழையும்போது வலது காலை முதலில் வையுங்கள். பிறகு,

'அல்லாஹும்மப்தஹ்லி அப்வாப ரஹ்மத்திக'

என்று ஓதவும்.

இதன் பொருள்: யா அல்லாஹ்! எனக்கு உன் அருளின் தலைவாயலை திறந்திடுவாயக!

மஸ்ஜிதிலிருந்து வெளியே புறப்படும்போது இடது காலை முன்னே வைத்து இதை ஓதவும்.

'அல்லாஹும்ம இன்னீ அஸ்அலுக்க மின்பள்லிக'

இதன் பொருள்: யா அல்லாஹ்! உன்னிடத்தில் உன் நன்கொடையை இறைஞ்சுகிறேன்.

மஸ்ஜிதில் நுழைந்த சமயம் மக்ரூஹ் அல்லாத நேரமாக இருப்பின் தஹிய்யத்துல் மஸ்ஜித் (மஸ்ஜிதின் காணிக்கை) என்று இரண்டு ரக்அத் தொழுவது மிகவும் நலம்.

78472

(மஸ்ஜிதில்) பள்ளிவாசலில் சப்தம் செய்ய வேண்டாம். நாற்றம் உள்ள வஸ்துக்களை

(வெங்காயம், ஹுக்கா புகை) போன்ற வகைகளை தின்றும் குடித்தும் மஸ்ஜிதுக்குள் போக வேண்டாம். மஸ்ஜிதுக்குள் எச்சல் உமிழ வேண்டாம். துர்க்காற்று கழிய வேண்டாம், அதனால் (மலாயிகத்து) வானவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது. மஸ்ஜிதில் வியாபாரம் செய்ய வேண்டாம். வீணை கீதங்களைப் பாட வேண்டாம்.

மலஜலம் முதலியவை கழியும்படி நேரிடலாம். ஆனதால் மஸ்ஜிதில் வயிற்றில் அடிக்கும் தண்டனை விதிக்க வேண்டாம்.

உலகத்தின் விஷயங்களை மஸ்ஜிதில் பேச வேண்டாம். மனதைக் கவனக் குறைவாக்கக் கூடிய சிங்காரம் செய்யப்பட்ட ஆடைகளை அணிந்து தொழுவதும், மனதை அதன் பக்கம் இழுக்கக்கூடிய கவர்ச்சிகரமான அலங்காரம் செய்துள்ள இடத்தில் தொழுவதும் உசிதமல்ல

தொழுபவன்முன் திரை இருப்பது அவசியம் திரை ஒன்றுமில்லாவிடில் ஒரு தடி அல்லது உயரமானது ஒன்றை வலது அல்லது இடது பக்கச் சாயலில் வைக்கவும். நேராக வைப்பதால் சிலைகளை வணங்குவதுபோலாகுமாதலால் சாய்த்து வைக்கவும்.

(முக்ததிகள்) பின் தொடர்ந்து தொழுபவர்களில் பல நிலையிலுள்ளவர்களு மிருப்பார்கள். ஆதலால் அவர்களுக்கு சங்கடம் விளைவிக்காமலிருக்க வேண்டும். ஒருக்கால் சங்கடத்தை முன்

னிட்டு அவர்களுக்கு ஜமாஅத்தில் வெறுப்பு ஏற்படக்கூடும். ஆதலால் இமாம் சுருக்கமான நேரத்தில் தொழ வைக்க வேண்டும்.

தொழுகையில் ருகூஃ ஸஜ்தா மற்றும் சகல செயல்களை மன நிம்மதியுடன் செயலாற்றுங்கள் தொழுகையில் ஆடையைச் சேர்ப்பதும், ரோமங்களைச் சீவுவதும் உசிதமல்ல, தொழுகையில் கைகளை பூமியில் ஊன்றி எழுந்திருக்க வேண்டாம், பர்லு தொழுத இடத்தை விட்டு நகர்ந்து நபில் தொழுவது நலம், தொழுகையில் பல திசைகளில் பார்க்க வேண்டாம், இயன்ற வரையில் கொட்டாவியைத் தடுத்துக் கொள்ளுங்கள். ஸஜ்தாவில் அடிக்கடி மண்ணை ஊதுவதும் பொடிக் கற்களை அகற்றுதலும் வேண்டாம். தொழுகைக்குப் போகும் சமயத்தில் தொழுகைக்கு விரோதமான செயல்களைச் செய்ய வேண்டாம். ஸஜ்தா செய்யுமிடத்தில் பார்வையைச் செலுத்தவும்.

ஜமாஅத்துடன் தொழுங்கள். ஜமாஅத்தை விட்டு தனி தனியாய்த் தொழுவதை மிக கண்டிக்கப்பட்டுள்ளது. மிகக் கடினமான கஷ்டம் ஏற்பட்டுவிடின் ஜமாஅத்தை விடுவது மன்னிப்பு உண்டு. (பசி அதிகரித்து விட்டாலும், அல்லது மலஜலம் சமீபித்துவிட்டாலும், முதலில் இவைகளை முடித்துக்கொண்டு பிறகு தொழவும். இமாம் பின் தொடர்ந்தவர்களுக்கு (துஆ) பிரார்த்தனை கேட்கவும்.

மஸ்ஜிதில் பாங்கு (தொழுகை) அறிவிப்புச் செய்யப்பட்டு விட்டால் மஸ்ஜிதை விட்டு வெளியில் செல்ல வேண்டாம், ஆனால், சிறுவேலை இருந்தால் அதை முடித்துக் கொண்டு வந்து விடுவது குற்றமல்ல.

(ஸப்) அணிவகுப்பு நிற்கும் சமயம் நேராகவும் சேர்ந்தும் நில்லுங்கள். முந்தின வரிசையைப் பூர்த்தி செய்து இரண்டாவது வரிசையைப் பூர்த்தி செய்யுங்கள். பிறகு மூன்றும் வரிசையைப் பூர்த்தி செய்யுங்கள். இமாமின் இரண்டு பக்கங்களிலும் (முக்ததி) தொடர்பவர்கள் இருத்தல் வேண்டும். பின் தொடர்பவர் இமாமைப் பற்றி சரியான காரணத்துடன் திருப்தியற்றவனாக இருந்தால் அந்த இமாம் இமாமத்துச் செய்யாம விருத்தல் வேண்டும். இமாமத் செய்யாமலிருப்பதற்கு தந்திரம் செய்து கொள்வதும் ஒருவர் மற்றவர் மீது பொறுப்பைப் போட்டுவிட்டு தான் தப்பித்துக் கொள்வதும் (கியாமத்) முடிவு நாளின் அறிகுறியாகும். பின் தொடர்பவர்களைவிட உயரமான இடத்தில் இமாம் நிற்க வேண்டாம். இமாமுக்கு முன் ருகூஃ அல்லது ஸஜ்தா அல்லது வேறு எந்தச் செயலையும் செய்யாதீர்கள். ஜமாஅத் நடக்கும் தருவாயில் எந்த நிலையில் (ஸஜ்தா அல்லது இருப்பில்) இமாம் இருந்தாலும் அதே நிலையில் இமாமுடன் தொடர்ந்து கொள்ளவும். இமாம் எழுந்திருப்பதை எதிர்பார்க்க வேண்டாம். (தஹஜ்ஜுத்) இராத் தொழுகை தொழ முயற்சி

செய்புங்கள். அதில் மிக நன்மையுண்டு. எப்பொழுதும் செய்ய முடியாமல் இருக்கக்கூடிய விதத்தில் நபில் தொழுகைக்கு ஓதக்கூடிய துஆக்களை அதிகமாக ஓத வேண்டாம் தொழுகையில் அழுத்து தூக்கம் வந்துவிட்டால் சிறிது நேரம் தூங்கிவிட்டுப் பிறகு தொழுங்கள். நித்திரை செய்புமுன் உலுச் செய்து கொண்டு நித்திரை செய்யுங்கள். வீட்டிலும் நபில் தொழும் வழக்கம் வைத்துக் கொள்ளுங்கள் வெள்ளிக் கிழமையன்று ஸலவாத்தை அதிகமாக ஓதுங்கள் ஸ்நானம் செய்து ஆடைகளை மாற்றி வாசனை பூசி அதிகாலையில் பள்ளிக்குச் செல்லுங்கள் ஜனங்களைத் தாண்டிக்கொண்டு போக வேண்டாம். ஒருவர் உட்கார்ந்திருக்கும் இடத்தைவிட்டு அவரை எழுப்பி மற்றவர் உட்கார வேண்டாம். இரண்டு நபர்களின் மத்தியில் நுழைந்துஉட்கார வேண்டாம். குத்பா ஓதும் சமயம் பேச வேண்டாம். தூக்கம் வரும் முறையில் உட்கார வேண்டாம். தூக்கம் அதிகமாக வந்து விட்டால் உட்கார்ந்த இடத்தை விட்டு மாறி வேறு இடத்தில் உட்கார்ந்து கொள்ளவும்.

சூரிய சந்திர கிரஹணம் ஏற்பட்ட சமயம் தொழுங்கள். அல்லாஹ்விடம் (துஆ) பிரார்த்தனை புரியுங்கள். தர்மம் கொடுங்கள் (தௌபா) பாபத்தை மன்னிக்க பிரார்த்தனை புரியுங்கள். தனக்குச் சொந்தமான அடிமை இருந்தால் விடுதலை செய்யுங்கள்.

ஈத் பெருநாளில் ஈத் மைதானத்திற்குப் போகும்போது ஒரு ரஸ்தாவிலும் வரும்போது வேறு ரஸ்தாவிலும் செல்லுங்கள். குர்பானி செய்ய நாட்டமுள்ளவர்கள் ஈதுல் அள்ஹா (ஹஜ்ஜுப் பெருநாளின்) பிறை பிறந்ததிலிருந்து குர்பானி செய்யும் வரையில் நகம் தலை ரோமங்கள் எடுக்காமலிருப்பது (முஸ்தஹப்பு) நலம். ரஸூலுல்லாஹ்விற்காகவும் குர்பானி செய்வதால் அன்பு அதிகரிக்கின்றது.

பருவ மழையால் (பரகத்) செழிப்பு அதிகரிக்கின்றது. ஆதலால் அதை சரீரத்தில்பட வைப்பது நலம்.

மழை பொழிய இறைவனிடம் (துஆ) பிரார்த்தனை செய்யப் போகும் சமயம் அழுக்கு ஆடைகளுடனும், கிழிந்த ஆடைகளுடனும் மிகப் பணிவுடனும் பயந்தவனாக செல்ல வேண்டும்.

மரணமும், மரணத்தின் பிறகும்.

மனிதன் இறக்கும் தருவாயை அடைந்துவிட்டால் அவன் அருகில் அமர்ந்து கலிமயே தௌஹீத் (லாயிலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்) என்ற மூல மந்திரத்தை சப்தத்துடன் ஓதிக்கொண்டிருக்கவும். (மைய்யித்து) இறந்தனுக்கு இடும் (கபன்) ஆடை மிகவும் உயர்ந்ததுமன்றி மிகவும் தாழ்ந்ததுமன்றி நடுத்தரமானதாக இடவும். கஷ்டங்கள் வந்தாலும். பழைய கஷ்டங்கள் ஞாபகத்திற்கு வந்தாலும்,

إِنَّا لِلّٰهِ وَإِنَّا إِلَيْهِ رَاجِعُوْنَ ۝

இன்னாலில்லாஹி வஇன்னாஇலைஹி ருஜிஊன்

நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்காகவே இருக்கின்றோம். நிச்சயமாக நாம் அவனிடமே மீளுவோம் என்று ஓதுங்கள். குறைந்த கஷ்டமாக இருந்தாலும் அதற்கும் மேற்கூறிய ஆயத்தை ஓதுங்கள். இதனால் நன்மை கிடைக்கும். (கப்ர்) சமாதிகளைக் கண்டால் ஸியாரத்துச் செய்யுங்கள். அதனால் உலகத்தின் அன்பு குறைகிறது. மறு உலகத்தின் ஞாபகம் தோன்றுகிறது. வெள்ளிக்கிழமையன்று குறிப்பாக தாய் தந்தையர்களின் கப்ருக்குச் சென்று ஸியாரத்துச் செய்வது நலம்.

ஸகாத் (மார்க்க சொத்துவரி), ஸதகா (கடமை)க்கு அதிகமான தர்மம்

ஸகாத் (மார்க்க சொத்துவரியை) முன்கூட்டிக் கொடுக்க அனுமதியுண்டு. கூடுமான வரையில் மக்களிடத்தில் மரியாதையைக் கவனித்து கேட்காம விருப்பவர்களுக்குக் கொடுங்கள். குறைந்த அளவைக்கொடுப்பதற்காக வெட்கப்பட வேண்டாம். எது கடமையுள்ளதோ அதைக் கொடுங்கள். (ஸகாத்) மார்க்க சொத்து வரி கொடுத்து விட்டதால் நீங்கள் செய்ய வேண்டியவைகள் பூராவையும் செய்துவிட்டதாக கருத வேண்டாம். உங்கள் பொருளின் அந்தஸ்திற்குத் தகுந்தபடி செய்ய வேண்டிய **இதர கடமைகளும்** உண்டு.

அன்பர்களுக்கும், சொந்தக்காரர்களுக்கும் மார்க்க சொத்து வரியை கொடுப்பதால் இரு வகையான நன்மையுண்டு. முதலாவது தர்மம், இரண்டாவது பந்துக்களை ஆதரித்தல், பக்கத்து வீட்டார்கள் ஏழைகளாய் இருந்தால் சால்னாவை அதிகமாக காய்ச்சி அவர்களுக்கும் கொடுத்துக் கொள்ளுங்கள். சாத்தியப்படா விட்டால் கேட்பவர்களுக்காகிலும் கொடுங்கள். எந்த அளவுக்கு **புருஷனின்** பொருளிலிருந்து **வாழ்க்கைத் துணைவி** மற்றவர்களுக்குக் கொடுத்தால் புருஷனுக்கு திருப்தி ஏற்படுமோ அந்த அளவுக்கு மனைவி கொடுக்கலாம்.

தர்மம் கொடுத்த பொருளை வாங்கினவர் விற்பதாக இருந்தால் கொடுத்தவர் அந்தப் பொருளைக் கிரயத்திற்கு வாங்குவது கொடுத்த பொருளை திருப்பி வாங்குவதைப்போ லிருப்பதாலும், பொருள் கொடுத்தவர் கிரயத்தைக் குறைத்தும் கொடுக்கவும் கூடுமாதலாலும் அப்பொருளை விலைக்கு வாங்க வேண்டாம்,

நோன்பின் விளக்கம்

நோன்பு நோற்கும் சமயத்தில் வீண் வார்த்தையாடலும் சப்தமிடலும் வேண்டாம். எவராவது உங்களிடம் விதண்டா வாதத்திற்கு வந்தால், நான் நோன்பு நோற்றிருக்கிறேன் என்னிடம் வாதம் செய்யாதீர்கள். மன்னித்துக் கொள்ளுங்கள் என்று கூறிவிடுங்கள். பிறையைப் பார்த்து,

இது நேற்றைய பிறை என்று கூறவேண்டாம். பிறையைப் பார்த்த தினத்தன்றே கணக்கு ஆரம்பம்.

புருஷன் வீட்டிலிருக்க வாழ்க்கைத் துணைவி புருஷனின் அனுமதியின்றி கடமைக்கு அதிக மான நபில் நோன்பு நோற்க அனுமதி இல்லை சமயா சமயங்களில் கடமைக்கு அதிகமான நபில் நோன்புகளை நோற்றுக் கொள்ளுங்கள். நபில் நோன்பு நோற்கும் சமயம் விருந்துக்குச் சொல் லப்பட்டால் விருந்து சொன்னவர்களை சந்தோ ஷப்படுத்துவதற்காக அவரின் வீட்டிற்குச்சென்று துஆ (பிரார்த்தனை) செய்யுங்கள். நோன்பு இல் லாம விருந்தால் உணவை அருந்துங்கள். கண் ணியமிக்க ரம்ஜான் மாதத்தின் பிறை இருபதி லிருந்து இயன்றவரை அதிகமாக வணக்கத்தி லிருப்பதற்கு முயலுங்கள்.

திருகுர்ஆன் ஓதுவதற்குரிய விதிகள்

திருகுர்ஆனை ஓதத் தெரிந்தவர்கள் தினந் தோறும் ஓரளவு ஓதிவர வேண்டும். ஓதினதை மறந்து விடுவது பெருங் குற்றமாகும்.

2. ஓதும் வழக்கமுள்ளவர்களுக்குச் சோர்வு ஏற்படின் ஓதுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

3. சுத்தமாக ஓதவேண்டிய முறையில் ஓத முடியாவிட்டால் அலுத்து ஓதுவதை அத்துடன் நிறுத்திக் கொள்ள வேண்டாம். தெரிந்த முறையில் கஷ்டம் பாராமல் ஓதிக்கொண்டிருக்க

வேண்டும். இதனால் இரு நன்மைகள் கிடைக்கின்றன.

4. ஓதுபவன் அல்லாஹ்வுக்குப் பயந்து ஓதுகிறான் என்று செவியுறுபவன் எண்ணக்கூடிய வாறு ஓதுவதே திருகுர்ஆனை ஓதுவதில் அழகிய முறையாகும்.

5. நித்திரை செய்யுமுன் ஸூரத்துல் இக்லாஸ் **(குல்ஹுவல்லாஹு)** ஸூரத்துல் பலக் **(குல்அவூது பிறப்பில் பலக்)** ஸூரத்துன்னாஸ் **(குல்அவூது பிறப்பின்னாஸ்)** இந்த மூன்று ஸூராக்களையும் ஒவ்வொரு ஸூராவையும் மூன்று விடுத்தமாக மூன்று ஸூராக்களையும் ஓதி கையில் ஊதி, தேகமெங்கும் தடவிக் கொள்ளுங்கள். இவ்வாறு **தாஜுல் அன்பியா நபி பெருமானார்** ஸல் செய்வார்கள்.

துஆ (பிரார்த்தனை), திக்ரு (தியானம்)
தெளபா (பாவ மன்னிப்பு) தேடும் விதிகள்

துஆ (பிரார்த்தனை) மிக ஆவலுடனும் **அன்புடனும்** கேளுங்கள். பாவமான விஷயங்களை விரும்பி பிரார்த்தனை செய்வது கூடாது. நீங்கள் கேட்கும் துஆ (பிரார்த்தனைகள்) ஒப்புக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டால் அதற்காக சோர்ந்து கேட்பதை நிறுத்த வேண்டாம். ஒப்புக்கொள்ளப்படுவதில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

கோபம் வந்த சமயங்களில் தன் மக்கள், தன் பொருள் போன்றவைகள் மீது சாபமிடாதீர்கள் சமயங்களில் கெட்டவைகளும் இறைவனிடம் ஒப்புக்கொள்ளப்பட்டு விடும். அல்லாஹ்வின்

ஞாபகத்தை மறந்த நேரங்கள் வீணான நேரங்களாகும். இயன்ற அளவு தஸ்பீஹ் மணிகளாலோ அல்லது விரல்களின் முடிச்சுக்களினாலோ தஸ்பீஹ் செய்து கொள்ளுங்கள்,

தௌபா (பாவமன்னிப்பு) கேட்பதை அதிகமாக்கி கொள்ளுங்கள். அதனால் கஷ்டங்கள் இலகுவாகின்றன. எதிர்பாராதவிதத்தில் ரிஸ்கு (வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள்) கிடைக்கின்றன.

உட்கார்ந்திருந்தாலும், படுத்திருந்தாலும், உலக விஷயங்களைப் பேசிக்கொண் டிருந்தாலும் கொஞ்ச நேரமாகிலும் அல்லாஹ்வின் திக்ரை (தியானத்தையும்) ரஸூல் ஸல் அவர்களின் ஸலவாத்தையும் செய்து கொள்ளுங்கள். இவ்விதம் செய்யாமலிருக்கும் சபை வீணானது என்று கண்டிக்கப்பட்டுள்ளது. எதிர்பாராமல் தன்னில் துர்வசமாக பாவம் ஏற்பட்டுவிடின் (தௌபா) பாவமன்னிப்பு கேட்பதில் தாமதிக்காதீர்கள். மீண்டும் அதே பாவத்தில் ஈடுபடும்படி ஏற்படின் மீண்டும் உறுதியான மனதுடன் பாவமன்னிப்புக் கேட்டுக்கொள்ளுங்கள்.

குறிப்பிட்ட சமயங்களில் கீழ்க்கண்ட துஆக்களை ஓதுங்கள்.

நித்திரைக்கு முன்

اَللّٰهُمَّ بِاسْمِكَ اَمُوْتُ وَاَحْيٰى

அல்லாஹும்ம பிஇஸ்மிக அமூது வஅஹ்யா

பொருள்: அல்லாஹ்வே! உன் திருநாமத்தின் மீதே நான் நித்திரை செய்கிறேன் பிறகு விழிப்பேன்.

நித்திரையை விட்டு விழித்த சமயம்

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِيْ اَحْيَانَا بَعْدَ مَا اَمَاتَنَا وَاِلَيْهِ النُّشُوْرُ

அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யாஞ பஃத அமாதஞ வஇலைஹின்னுஷூர்

பொருள்: நித்திரைக்குப் பிறகு விழிப்பைத் தந்த அல்லாஹ்வுக்கே சர்வ புகழும் அவனின் பக்கமே மீட்சி இருக்கிறது.

காலையில்

اَللّٰهُمَّ بِكَ اَصْبَحْنَا وَبِكَ اَمْسَيْنَا
وَبِكَ نَحْيٰى وَبِكَ نَمُوْتُ وَاِلَيْكَ الْمَصِيْرُ

அல்லாஹும்ம பிகஅஸ்பஹ்ஞ வபிகஅம்ஸைஞ வபிகநஹ்யா வபிகநமூத்து வஇலைக்கன்னுஷூர்

பொருள்: அல்லாஹ்வே! உன்னுடைய வல்லமையைக் கொண்டு காலை, மாலை அடைந்தோம். மேலும் உன் வல்லமையைக் கொண்டு நாங்கள் உயிருடன் வாழ்வதும், இறப்பதும், மேலும் உன்பக்கமே மீட்சியும் இருக்கிறது.

வாழ்க்கைத் துணைவியுடன் இன்பலீலை
புரியும்போது

بِسْمِ اللهِ اَللّٰهُمَّ جَنِّبْنَا الشَّيْطَانَ وَجَنِّبِ الشَّيْطَانَ مَا رَزَقْتَنَا

**பிஸ்மில்லாஹி அல்லாஹும்ம ஜன்னிப்
னஷ்ஷைத்தான வஜன்னிபிஷ்ஷைத்தான மாரஸக்தனு**

பொருள்: அல்லாஹ்வே! எங்களை ஷைத்தானை விட்டும் காப்பாற்றுவாயாக! மேலும், எங்களுக்குத் தர இருக்கும் மக்களை விட்டும் ஷைத்தானை அப்புறப்படுத்துவாயாக.

காபிர் (அவிசுவாசி)களின் அபகாரத்திற்கு

அல்லாஹும்ம முனஸ்ஸிலல்கிதாபி ஸரீஃஅல் ஹிஸாபி அல்லாஹும்மஹ்ஸிபில் அஹ்ஸாப, அல்லாஹும் மஹ்ஸிம்ஹும் வஸல்ஸில்ஹும்

பொருள்: வேதத்தை இறக்கி வைத்தநாயனே! விரைவாக கேள்வி கேட்கக்கூடியவனே! விரோதிகளின் கூட்டத்திற்கு தோல்வியைக் கொடுப்பாயாக! அவர்களை அசைத்து விடுவாயாக!

விருந்து கொடுத்தவருக்கு நன்றி
செலுத்துவதற்காக உணவு அருந்திய பிறகு

اَللّٰهُمَّ بَارِكْ لَهُمْ فِيْمَا رَزَقْتَهُمْ وَاغْفِرْ لَهُمْ وَارْحَمْهُمْ

அல்லாஹும்ம பாரிக்லஹும் பீமாரஸக்தஹும்
வங்பிர்லஹும் வர்ஹம்ஹும்

பொருள்: அல்லாஹ்வே! அவர்களுக்கு நீ கொடுத்ததில் அபிவிருத்தியைக் கொடுத்தருள் வாயாக! அவர்களின் பாவத்தை மன்னித்தருள் வாயாக! அவர்களுக்கு கிருபை செய்வாயாக!

பிறையைப் பார்த்தால்

اَللّٰهُمَّ اَهِلَّهٗ عَلَيْنَا بِالْيُمْنِ وَالْاِيْمَانِ وَالسَّلَامَةِ

وَالْاِسْلَامِ وَالتَّوْفِيْقِ لِمَا تُحِبُّ وَتَرْضٰى رَبِّيْ وَرَبُّكَ اللّٰهُ

அல்லாஹு‌ம்ம அஹில்லஹு அலைனா பில்யும்னி
வல்ஈமானி வஸ்ஸலாமத்தி வல்இஸ்லாமி
வத்தௌபீகி லிமாது ஹிப்பு வதர்ளா
ரப்பீ வரப்புகல்லாஹு

பொருள்: நாயனே! இந்தப் பிறையை நீ எங்கள்மீது பரக்கத்தாகவும், ஈமானுக்குரியதாயும் மேலும் சாந்தியுடையதாயும் இஸ்லாத்தில் ஸ்திரமாய் இருப்பதற்கு காரணமானதாயும் இன்னும் நீ அன்பு கொள்ளக்கூடியதும், நீ பொருந்திக்கொள்ளக்கூடியதுமான அமல்களைச் செய்ய நல்லுதவியையும் அமைத்துக்கொண்டதாக இந்தப் பிறையின் வெளியாகுதலை ஆக்கித் தந்தருள்வாயாக! ஏ! இளம் பிறையே! உனது இரக்ஷகனும் எனது இரக்ஷகனும் அல்லாஹ்வே யாகும்.

கஷ்டத்தில் சிக்குண்டவனைப் பார்த்து அல்லாஹ் உன்னை இந்தச் சங்கடத்திலிருந்து நீக்கி விடுவான் என்று சொல்லிவிட்டு

اَلْحَمْدُ لِلّٰهِ الَّذِىْ عَافَانِىْ مِمَّا ابْتَلَاكَ بِهٖ وَفَضَّلَنِىْ عَلٰى كَثِيْرٍ مِّمَّنْ خَلَقَ تَفْضِيْلًا

அல்ஹம்துலில்லா ஹில்லதீ ஆபானீமிம்மப் தலாக்கபிஹீ வபள்ளலனீ அலாகதீரிம்மிம்மன் கலக்க தப்ளீலன்

பொருள்: உன்னை சோதித்த வியாதியை விட்டு என்னைச் சுகமாக்கி வைத்து படைக்கப் பட்ட படைப்புகளை விட என்னைச் சிறப்பாக்கி வைத்த இறைவனுக்கே சகல புகழும்.

வழி அனுப்பும் சமயம்

اَسْتَوْدِعُ اللّٰهَ دِيْنَكَ وَاَمَانَتَكَ وَخَوَاتِيْمَ عَمَلِكَ

அஸ்தௌதிஹுல்லாஹ தீனக்கும் வஅமானத்தக்கும் வகவாதீம அமலிக்க

பொருள்: உங்களின் கிரியாம்சைகளின் இறுதியையும் உங்கள் அமானிதத்தின் பொறுப்பையும் உங்களின் மார்க்கத்தையும் அல்லாஹ்விடத்தில் ஒப்படைக்கின்றேன்.

திருமண வாழ்த்து

بَارَكَ اللّٰهُ لَكَ وَبَارَكَ عَلَيْكُمَا وَجَمَعَ بَيْنَكُمَا فِيْ خَيْرٍ

பாரக்கல்லாஹு லக்க வபாரக்க அலைக்குமா வஜமஅ பைனகுமா பீகைரின்

பொருள்: உனக்கும் உனது வாழ்க்கைத் துணைவிக்கும் அபிவிருத்தியை அல்லாஹ் தந் தருள்வானாக! உங்களுக்கிடையில் நலவின்மீது வாழ அருள் புரிவானாக!

கஷ்டம் நேரிட்டால்

யாஹய்யு யாகையூமு பிரஹ்மதிக்க அஸ்தகீது

பொருள்: உயிருடன் இருப்பவனே! சக்தி வாய்ந்தவனே! உன் அருளைக்கொண்டு ரக்ஷித் துக் காப்பாற்றுவாயாக!

ஹஜ்ஜு (மக்கா யாத்திரையும்) ஜியாரத்து (மதீனாவில் எம்பெருமானார் ஸல் சந்திப்பும்)

ஹஜ்ஜு கடமைப்பட்டவர்கள் உடனே ஹஜ் செய்வது அவசியம். எதிர்பாராத முறையில் தடைகள் ஏற்படவும் கூடும். **ஹஜ்ஜுக்கு** போவோர்கள் போதிய வசதியுடன் போக வேண்டும். ஹஜ்ஜை முடித்துக்கொண்டு மதீனா

குறிப்பு: மற்ற துஆக்களின் விவரங்களை நமது வெளியீடு துஆயெ மஸ்னூன் என்ற நூலில் விரிவாக பார்க்கலாம். அந்நூல் 78 துஆக்கள், 124 பக்கங்கள் கொண்டது. விலை 0-6-0 அணாதான். ஒரு புஸ்தகம் தேவைக்கு 0-7-0 அணா அனுப்பி பெற்றுக் கொள்க.

வுக்குப் போக வசதி இருப்பின் அங்கு சென்று **ரஸூலுல்லாஹ்வின்** ஜியாரத்துச் செய்து சிறப்பு அடையுங்கள். ஹஜ்ஜை மட்டிலும் செய்ய வசதி இருப்பின் **ஹஜ்ஜை** செய்துவிட்டு வசதி ஏற்பட்ட சமயம் மதீனாவுக்குச் செல்ல வேண்டும். மக்காவுக்கும் செல்லாமலிருப்பதற்கு அனுமதி இல்லை. **ஹாஜி** தன் இல்லத்திற்கு வந்து சேரும் வரையில் அவர்களின் துஆ ஒப்புக்கொள்ளப்படுவதால் அவர்களைச் சந்தித்தால், அவர்களுக்கு ஸலாம் சொல்லுங்கள். முஸாபஹா (கரத்தை மற்ற கரத்துடன் சேர்த்தல்) செய்யுங்கள். உங்களுக்கு துஆ இஸ்திக்பார் (பாவங்களின் மன்னிப்பு) கேட்கும்படி அவர்களிடம் கோருங்கள்,

சத்தியமும், நேர்ச்சை செய்ய நேர்ந்து கொள்வதும்

அல்லாஹ்வைத் தவிர, மற்ற எதைக்கொண்டும் சத்தியம் செய்ய வேண்டாம். தகப்பன் மீதும் அல்லது புத்திரர்களின் மீதும் அல்லது அல்லாஹ்வின் பக்தர்களின் மீதும் தவறி சத்தியம் நாவில் வந்து விட்டால்; **கலிமா** ஓதிக்கொள்ளுங்கள். நான் பொய்யனாக இருந்தால் ஈமான் (விசுவாசம்) அற்றவனாக ஆகிவிடுவேன் (அவன் உண்மையாளனாக இருந்தாலும் சரியே) என்று சத்தியம்செய்வது கூடாது. பொய்யனாக இருந்து இவ்விதம் சத்தியம் செய்வது அல்லாஹ்விடம் அதிக கோபமாக்கப்பட்டதாய் இருக்கும்.

ஒருவன் கோப நிலையில் மார்க்கத்திற்கு முரண்பாடான விஷயத்தை குறித்து சத்தியம்

செய்துவிட்டால் உதாரணமாக, இந்த விஷயத்தை தகப்பனிடம் சொல்லமாட்டேன் என்று ஒருவர் சத்தியம் செய்து விட்டால், சத்தியம் முறிப்பதால் பாவம் ஏற்படும் என்று கருத வேண்டாம். சத்தியத்தை முறிக்காமலிருப்பதே பாவம் அதிகமாகும். ஆகவே எந்த சத்தியம் மார்க்கத்திற்குமுரண்பட்டதாகஇருக்கின்றதோ அதை கோபத்தில் செய்துவிட்டால் அந்த சத்தியத்தை முறித்துவிட்டு (கப்பாரு) குற்றப் பரிகாரம் கொடுத்து விடுங்கள்.

ஒருவனின் உரிமையை முறியடிப்பதற்காக சூழ்ச்சியான முறையில் சத்தியம் செய்ய வேண்டாம்.

சத்தியம் செய்ய தேடினவர் எந்த கருத்தை உணர்வாரோ அதன்மீதே சத்தியம்உண்டாகும்.

கஷ்டத்தில் சிக்குண்டு அல்லாஹ் அல்லாதவைகளுக்கு **நேர்ச்சை** செய்ய வேண்டாம்.

அப்படி கஷ்டத்தில் சிக்குண்ட நிலையிலும் சிறிய அளவையும், அல்லாஹ்வின்பால் கொடுக்காமல் இருப்பது அற்பனின்(லோபியின்)ஆத்தாரமாக இருக்கின்றன. (நஊதுபில்லாஹ்) இவ்விதமாக நடப்பதைவிட்டு அல்லாஹ்விடம் காரமானம் தேடுகிறோம். இவ்விதமான செயல் **அல்லாஹ்வை** ஏமாற்றியது போலாகும்.

பார்ஸீ கீதம்

ஜின்ஹார் அஜான்கௌம் நபாஷீகெ பர்மீபந்த்
ஹக்ராபஸூ ஜுடதேவநபீரா பதருதே

பொருள்: அல்லாஹ்வுக்கு ஸஜ்தாவும், நபி[ஸல்]க்கு ஸலவாத்தும் சொல்லி ஏமாற்றம் செய்யும் கூட்டத்தில் நீ எந்த சமயத்திலும் சேராதே.

நாட்டு நிர்வாகமும், பரஸ்பரக் கடமைகளும்

1. தொழில்களில் சிறந்தது **கைத்தொழிலே**; நபிமார்கள் கைத்தொழில் செய்துள்ளார்கள்.

2. தொழில்களில் மிகக் கெட்டதும் கேவலமானதும், பாவமானதும் யாசகத் தொழிலேயாகும். இதனைவிட புல்பிடுங்கி அல்லது விறகு வெட்டி வயிறு வளர்த்தல் ஆயிரம் மடங்கு **சிறந்தது**.

3. யாசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உங்களுக்கு நேரிடின், மார்க்க பக்தியும், தாராள மனப்பான்மையும் உடையோரிடம் கேட்டு வாங்குவது ஆகும்.

4. மனமுவந்து எவராவது கொடுத்தால் பெற்றுக்கொள்வது குற்றமாகாது. பெற்றதை பிறருக்கு ஈவது தானமே.

குறிப்பு: சில முஸ்லிம் வியாபாரிகள் மகிமை என்றும் அல்லாஹ்வின் காசு என்றும் அல்லாஹ்வின் பெயர் சொல்லி தங்கள் வியாபார வாடிக்கைக்காரர்களிடம் பணம் வாங்குகிறார்கள். இம்மாதிரி வசூல் செய்யும் தொகைகளை வசூல் செய்த வழியில் செலவு செய்யாமல் வீணான வழியிலும் அல்லது சேமித்துவைத்து தனக்கு பலனளிக்கும் முறையிலோ அந்தப் பணங்களை வைத்தும் கொள்ளுகிறார்கள். இம்மாதிரி செய்வது மிகக் கடினமான குற்றமும், அல்லாஹ்வை ஏமாற்றுவதுமாகும். இவ்விதமான செயல்களை விட்டு அகன்று இருப்போமாக. (மொழி பெயர்த்தோன்)

5. மார்க்கத்தில் தடை செய்பப்பட்டவை களை திரித்துக் கூறி ஹலால் (ஆகுமாக்கி)க் கொள்ளாதீர்கள்.

6. தான் சம்பாதித்து தானும் புசித்து. பிறருக்கும் அளிப்பது மேலான செயலாகும். மார்க்கத் தொண்டு புரிந்து கொண்டிருப்போர், ஜீவனோபாயத்துக்கு வழிதேடப் புறப்படுவார்க ளானால் மார்க்க வேலைகள் வீணாகி விடும். ஆத லால் அத்தகையோர் தொழில் செய்யாதிருத்தல் குற்றமல்ல. இதர முஸ்லிம்கள் அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும்.

7. மார்க்க விதிகளின்படி தகாத தொழி லாகுமோவெனச் சந்தேகம் தோன்றும் தொழிலை விட்டுவிடுவது நலம்.

8. அதிக நேரம் அசுத்தமாய் இருக்கும் தொழிலைச் செய்யாதீர்கள்.

9. பாவத்தின் உதவியான பொருள்களை வியாபாரம் செய்வது தடுக்கப்பட்டுள்ளது.

10. வாழ்க்கைக்குப் போதுமான வருவா யுள்ள வழியை முக்கிய காரணங்களின்றி விட்டு விட்டு வேறுவழி தேடுவது கூடாது.

11. கொடுக்கல் வாங்கல்களின் போதும் தனது உரிமைகளை வற்புறுத்தும் போதும், **ஹிதமான** சொற்களை உபயோகித்தல் வேண்டும். விட்டுக் கொடுக்காமல் பேசுவது சரியன்று.

12. பொருள்களை விற்பனை செய்யும்போது நீங்கள் சொல்வது உண்மையேயாயினும் சத்தியம் கூறுதீர்கள். மிகைப்படச் சொல்லும்போது பொய் புறப்படுகுறது. வியாபாரத்தில் உள்ள பரக்கத் எடுபட்டு விடுகிறறு.

13. நம்பிக்கையும் நேர்மையும் வியாபாரத்தின் அணிகலன்களாகும். அதனால் இம்மையிலும், மறுமையிலும் நற்பெயருமுண்டு.

14. வியாபாரத்தின் லாபத்திலிருந்து, தர்மம் செய்வதை வழக்கமாகக்கொள்ளுங்கள். அது வியாபாரத்திலேற்படும் குற்றங்களின் கடுமையைத் தணிக்கிறது.

15. வியாபாரத்தில் பொய் சொல்வதும், சரக்கில் உள்ள குறையை மறைப்பதும், வியாபாரத்தின் பரக்கத் (விருத்தியைக்) கெடுத்துவிடுகின்றது.

வட்டியின் விளக்கம்

16. வட்டி வாங்குவதும், கொடுப்பதும் அதனைப் பிறருக்காக எழுதிக் கொடுப்பதும், அதற்காக சாட்சியம் கூறுவதும் சபிக்கப்பட்ட காரியங்களாகும்.

வட்டி வாங்குதல், வட்டி கொடுத்தல், வட்டிப் பத்திரங்கள், பாண்டுகள். கணக்குகள் முதலியவற்றை எழுதுவது, சாட்சியம் சொல்லுவது முதலிய வட்டி சம்பந்தமான எந்த வேலையிலும் சம்பந்தம் வைத்துக்கொள்ளாதீர்கள்.

கோதுமை போன்ற சில பொருள்கள் அளந்து விற்கப்படுகின்றன. தங்கம், வெள்ளி போன்ற சில பொருள்கள் நிறுத்து விற்கப்படுகின்றன. இத்தகைய பொருட்களை விற்பதற்கு வாங்குவதற்கு ஒரு **விதியுண்டு.** உதாரணமாக கோதுமையைக் கொடுத்து கோதுமையை வாங்கும் போதும் தங்கத்தைக் கொடுத்து தங்கத்தை வாங்கும் போதும், கொடுக்கும் பொருளும் வாங்கும் பொருளும் ஒரு சிறிதும் கூடுதல் அல்லது குறைவுதல் இருக்கக்கூடாது. சம அளவுடையதாக இருக்க வேண்டும். மேலும் கொடுக்கும் பொருளைக் கொடுக்கும்போதே வாங்கும் பொருளை உடக்குடனுகை வாங்கிக் கொள்ள வேண்டும். சிறிதும் தாமதிக்கக் கூடாது. இந்த விதிக்குமாருக விற்றல் வாங்கல் செய்தால் வியாபாரத்தில் வட்டி ஏற்பட்டு விடுகிறது. மேற்கூறிய விதி ஒரே மாதிரியான பொருளுக்கேயாகும்.

வேறு வகைப்பட்ட பொருளுக்கு சட்டம் வேறு. வேறுபட்ட பொருளை மாற்றிக் கொள்ளும்போது, அளவு கூடுதலாகவாவது அல்லது குறைவாகவாவது இருப்பது கெடுதியல்ல. ஆனால் விற்கும் வாங்கும் பொருள்களை உடனுக்குடன் மாற்றிக்கொள்ள வேண்டும். உதாரணமாக தங்க நகையை வெள்ளி ரூபாய்க்கு விலை பேசி வாங்கும்போது நகை, ரூபாய் இரண்டின் எடையும் சரிக்கு சரியாய் இருக்க வேண்டியதில்லை. ஆனல் ரூபாய் கொடுத்தவுடன் நகையை

வாங்கிக் கொள்ள வேண்டும். **கெடுவு** தவணை வைத்துக்கொள்ளக் கூடாது. தவணை ஏற்படுத்தினுல், வியாபாரத்தில் வட்டி ஏற்பட்டு விடுகிறது.

அளந்தோ நிறுத்தோ விற்கப்படாத ஒரு மாதிரியான பொருளை பண்டமாற்றுதல் செய்து கொள்வதனுல் இரு பொருளும் சரிக்குச் சரியாக இருக்க வேண்டியதில்லை; ஆனுல் இரு பொருளையும் உடனுக்குடன் மாற்றிக்கொள்ள வேண்டும். உதாரணமாக ஒரு ஆட்டைக்கொடுத்து இரண்டு ஆட்டை வாங்கிக் கொள்வது ஆகும், ஆனுல், பொருள்கள் உடனே கை மாறியாக வேண்டும்.

அளவு நிறையில் வராததும் வேறு வகைப் பட்டதுமான ஒரு பொருளை பண்ட மாற்றுதல் செய்துகொள்ளும்போது, கூடுதல், குறைவுதல் இருக்கக்கூடாது என்ற நிபந்தனையுமில்லை. உடனுக்குடன் மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதுமில்லை. உதாரணமாக ஒரு ஒட்டகத்தைக் கொடுத்துவிட்டு, அதற்குப் பதிலாக நான்கு மாடுகளை வாங்கிக்கொள்வது ஜாயிஸாகும். இந்த பண்டமாற்று வியாபாரத்தில் தவணை சொல்லிக் கொள்வது குற்றமில்லை. இதுவரை நாம் ஹனபி மத்ஹபின்படி வட்டி சம்பந்தமான மூல விதிகளை விளக்கிச் சொன்னேம்.

விலை ஏற்றத் தாழ்வின் காரணத்தால் இன்று பெரும்பாலும், நகை செய்து கொள்வோரும், விலைக்கு வாங்கிக் கொள்வோரும், நகையும் விலை

யும் சரிக்குச் சரியாக இருப்பதைக் கவனிப்ப தில்லை. மேலும் கெடுவும் வைத்துக்கொள்கிறார் கள். இது மார்க்கச் சட்டப்படி வட்டியாகும். உதாரணமாக நாம் வெள்ளியில் செய்த ஒரு செயினை வாங்குவதாக வைத்துக் கொள்ளுங்கள், அது ஆறு தோலா எடை இருக்கிறது. வெள்ளி விலை இறக்கமாக இருக்கும் சந்தர்ப்பத்தில் அதற்கு விலை ரூபாய் 4-0-0 சொல்லுகிறார்கள். ஆறு தோலா எடையுள்ள அந்த வெள்ளிச் செயினை 4-0-0 ரூபாய் விலைக்கு வாங்குவோமா னால் நாம் இரண்டு ரூபாய் வட்டி கொடுத்ததாக ஆகும். ஆகையால் இம்மாதிரியான சந்தர்ப்பங் களில் ஏதேனும் வகை செய்துதான் வட்டியை விட்டும் தப்பித்துக் கொண்டாக வேண்டும். மூன்று ரூபாய்களும் அத்துடன் ஒரு ரூபாய்க்காக செம்புக் காசுகளையும் சேர்த்துக் கொடுத்து அந்த ஆறு தோலா நிறையுள்ள செயினை வாங்கிக் கொண்டால் வட்டி ஏற்படுவதில்லை என்று **புகஹாக்கள்** தீர்மானித்துள்ளார்கள்.

வெள்ளி நகையை வாங்க கடைக்குச் சென் றோம். குறிப்பிட்ட நகையை விலை பேசினோம். கடைக்காரர் ஆறு ரூபாய் விலை சொன்னார். நம் மிடம் ஐந்து ரூபாய்தான் இருக்கிறது, நகையை வாங்கிக்கொண்டு ஐந்து ரூபாயைக் கொடுத்து விட்டு பிறகு ஒருரூபாய் கொடுப்பதாகச் சொல்லி வந்தால் இந்த வியாபாரம் வட்டியாகி விடுகிறது. இவ்வாறு ஏற்பட்டுவிடும் சந்தர்ப்பங்களில் ஏதே னும் **தந்திரம்** செய்து நிலைமையைச் சரிக்கட்டிக்

கொள்ள வேண்டும். உதாரணமாக நகை வியாபாரியிடம் ஒரு ரூபாய் கடன் வாங்கி அவருக்கு சேரவேண்டிய ஆறு ரூபாயும் கொடுத்துவிட்டு நகையை எடுத்துக் கொள்ளலாம். பிறகு அவரிடம் வாங்கிய ஒரு ரூபாயைக் கொடுத்துவிட வேண்டும்.

சில்லரை மாற்றும்போது ஒரு தவறு செய்கிறார்கள். ஒரு கடைக்காரரிடம் ஒரு ரூபாயைக் கொடுத்து சில்லரை கேட்கிறார்கள். கடைக்காரர் சில்லரை இல்லை என்று சொல்லுகிறார். இருப்பதைக் கொடுங்கள் என்று சொல்லி ஒரு ரூபாயைக் கொடுத்துவிட்டு எட்டு அணு அல்லது நான்கு அணு வாங்கிக்கொண்டு வந்து விடுகிறார்கள். மீதத்தைப் பிறகு வாங்கிக் கொள்கிறார்கள். இது ஜாயிஸ் இல்லை, இது நிர்ப்பந்தமானால் இப்படிச் செய்யுங்கள். உங்களுக்குத் தேவையான சில்லரையை வியாபாரியிடம் கடனாக வாங்கிக் கொள்ளுங்கள். ரூபாயை அவரிடம் அமானிதமாகக் கொடுத்து வைத்து விடுங்கள். அவரிடம் கொடுத்து விட்டு, சில்லரையை வாங்கிக் கொண்டு, அவரிடம் நீங்கள் கடன் வாங்கி இருந்த சில்லரையையும் கொடுத்து விடுங்கள். **கணக்கு** நேராகி விடுகிறது. மார்க்கப்படி ஜாயிஸ் ஆகி விடுகிறது.

உங்களிடம் மட்டரகமான நெல் இருக்கிறது. உங்கள் நண்பர் ஒருவரிடம் உயர்ந்த ரகமான நெல் இருக்கிறது. உங்களிடமிருக்கும் மட்டரகமான நெல்லை உங்கள் நண்பருக்குக் கொடுத்து

விட்டு, அவரிடமிருந்து உயர்ந்த ரக நெல்லை நீங்கள் வாங்க நினைக்கின்றீர்கள். உங்களின் நண்பர் மட்டரக நெல்லை எடுத்துக்கொண்டு அந்த அளவுக்கு உயர்ந்தரக நெல்லைக் கொடுக்க மாட்டார் என்று உங்களுக்குத் தோன்றுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் நீங்கள் மூன்று கலம் குருவை நெல்லைக் கொடுத்துவிட்டு, இரண்டு கலம் சம்பா நெல் வாங்கிக் கொள்கிறீர்கள். இது நமது சட்டப்படி வட்டியாகும். ஆனால் இம்மாதிரியான சந்தர்ப்பத்தில் பின்வருமாறு செய்து கொள்ள வேண்டும். உங்களிடமுள்ள மூன்றுகலம் குருவை நெல்லையும் உங்கள் நண்பரிடம் ஒரு விலைபேசி விற்றுவிடவேண்டும். பிறகு விலையாகக் கிடைத்த ரூபாயைக் கொடுத்து, அவரிடமுள்ள சம்பா நெல்லில் உங்களுக்கு வேண்டிய அளவுக்கு வாங்கிக் கொள்ள வேண்டும்.

ஒரு நகை முக்கால் சவரனும், கால் தோலா வெள்ளியும் சேர்த்துத் தயாரிக்கப்பட்டிருக்கிறது; அதை நாம் ஒரு சவரன் விலை கொடுத்து வாங்குவோமானால், அது வட்டியாகும் மார்க்கச் சட்டப்படி இப்படி வாங்குவது ஹராம் ஆகும்.

உங்களுக்கு முன்பின் பழக்கமில்லாத ஒருவர் உங்களிடம் ஒரு தொகை கடனாகப் பெற்றுள்ளார். அவர் அத்தொகையை உங்களுக்கு திருப்பித் தரவில்லை. இந்த நிலையில் அவர் உங்களுக்கு ஏதேனும் சன்மானமாகக் கொடுத்தாலும், அல்லது விருந்துக்கு அழைத்தாலும் அதை ஏற்றுக்

கொள்ளாதீர்கள். அவரது சன்மானம் முதலியவை வட்டியாகி விடுகிறது.

உங்களுக்கு பழக்கமுள்ள ஒருவர் உங்களிடம் கடனாக ஒரு தொகை வாங்கி இருந்தால் அவரால் வழக்கப்படி அளிக்கப்படும் விருந்து சன்மானம் முதலியவற்றை நீங்கள் அங்கீகரித்துக் கொள்வதில் தவறு ஒன்றும் இல்லை.

போக்கிய அடமான வருமானத்தைக் கடன் கொடுத்தவர் உபயோகிப்பதும் வட்டியேதான் ஆகிறது.

ஒருவர் ஒரு பொருளை மற்றொருவரிடம் விலை பேசி வாங்குகிறார். பொருளை விலைபேசி வாங்கின பிறகு விலைக்கு ரொக்கம் கட்டமுடியாமலிருக்கிறது. அது சமயம் வாங்கின பொருளை, விற்றவரிடம் சிறிது விலையைக் குறைத்து விற்றுவிடுகிறார். இந்த விற்பனையில் விற்றவருக்கு அதிகமாக ரூபாய் கிடைக்கிறது, அதிகமாகக் கிடைக்கும் இந்த ரூபாய் வட்டியின் மூலம் கிடைத்ததாகும். ஆதலால் இது ஹராம்.

இவ்விதம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால், முதலில் பொருளை விற்றவர், வாங்கியவருக்கு முன் ஏற்பட்ட கிரயத்தின் அளவுக்கு பணத்தைக் கடனாகப் பாவித்துக் கொடுக்க வேண்டும். இந்தப் பணத்தை அவருக்கு வாங்கின பொருளுக்கு கொடுத்துவிட வேண்டும். பிறகு வாங்கின பொருளை குறைந்த கிரயத்திற்கு விற்றுவிடலாம். மேற்கூறிய வகையில் ஏற்பட்ட நஷ்டத்தைப் பிறகு கொடுக்க வேண்டும்.

உதாரணமாக பத்து ரூபாய்க்கு ஒரு கடிகாரத்தை வாங்குகிறீர்கள். அந்த பத்து ரூபாயை நீங்கள் செலுத்த முடியாமலாகி விட்டால் அதே கடிகாரத்தை முந்தி வாங்கினவரிடமே எட்டு ரூபாய்க்கு விற்று விடுகிறீர்கள். இது அனுமதிக்கப்படாததும் வட்டியுமாகும். பத்து ரூபாய்க்கு வாங்கின கடிகாரத்தை பணவசதி யில்லாததால் வாங்கினவருக்கு விற்க வேண்டிய நிலை ஏற்பட்ட சமயம் கடிகாரத்தை வாங்கினவரிடமே பத்து ரூபாய் கடன்வாங்கி, ஷைகிரயத்தைக் கொடுத்து விடவும். பிறகு அந்தக் கடிகாரத்தை இஷ்டப் பட்ட விலைக்கு விற்கவும். இதனால் ஏற்படும் நஷ்டம் உங்களைப் பொருத்ததே. இது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டதாகும்.

17. கனி வர்க்கங்கள் பக்குவம் அடையும் வரை விற்பதும், வாங்குவதும் கூடாது. ஏனெனில், இதற்கு மத்தியில் கனி வர்க்கங்கள் அழிந்து விடுமா? அல்லது பக்குவம் அடைந்து விடுமா? என்பது தெரியாது.

18. கிரயப் பட்டியலைப் பார்த்துக்கொண்டு வாங்கவும் வேண்டாம் விற்கவும் வேண்டாம். பொருள் உங்கள் கைவசம் வந்த பிறகே விற்பனை செய்வதாகும். பொருளைப் பார்த்த பிறகு வாங்குவதும் வாங்காமலிருப்பதும் வாங்குவோரின் இஷ்டத்தைப் பொருத்து இருக்கிறது.

அதிகாரப் பூர்வமாக விலையை நிர்ணயிக்க அதிகாரிகளுக்கு அனுமதியில்லை. வியாபாரி

களுக்கு விஷயத்தை எடுத்துரைப்பதும், விலை வாசிகளைப் பற்றியுள்ள யோசனைகளைக் கூறுவதும் அனுமதிக்கப்பட்டதே.

19. தன்வசமில்லாத பொருளை விற்பது கூடாது.

20. தானியங்களை கிராமங்களிலிருந்து நகரத்துக்குக்கொண்டு வரும்போது வரும் வழியில் போய் வாங்கக்கூடாது. பிறரை நஷ்டப்படுத்தும் நோக்கத்துடன் விலைகளை ஏற்றுவது என்ற குற்றம் இதனால் ஏற்படுகிறது.

21. கிராமவாசிகள் நகரத்திற்கு வியாபார நோக்கத்துடன் பொருள்களைக் கொண்டுவந்தால் வாங்குபவர், விற்பவரின் நலனைக் கவனிக்க வேண்டும்.

22. ஆடுமாடுகளின் பாலைக் கறக்காமல் விட்டு வைத்திருந்து மடிகளைப் பெரிதாகக் காண்பித்து வாங்குபவர்களை ஏமாற்றி விற்பது கூடாது.

23. கஷ்டத்தின் காரணமாகத் தன் பொருளை விற்க முற்படின் வாங்குபவர் விலையைக் குறைத்து வாங்கக்கூடாது. நியாயமான விலைக்கு வாங்குங்கள் அல்லது அவருக்கு உதவிபுரியுங்கள்.

24. கைவசத்தில் இல்லாத பொருளை பஜாரில் வாங்கிக் கொடுத்து விடலாம் என்ற எண்ணத்துடன் விற்பனைக்கு உறுதி செய்யக்கூடாது

25. அடமானத்தில் குறித்த காலத்திற்குள் பணம் கொடுக்காவிட்டால் அடமானப்பத்திரம்

செல்லாது என்று இக்காலத்தில் நிபந்தனை வைக்கிறார்கள், இது தகாத காரியமாகும்.

26. நிறுப்பதிலும் அளப்பதிலும் மோசம் செய்யக்கூடாது.

27. தானியங்களை வாங்கிவைத்து லாபத்திற்கு விற்பது கூடும். மக்களுக்கு தேவை ஏற்படும் நேரத்தில் விலையின் ஏற்றத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது தடுக்கப்பட்டதும் அல்லாஹ்வின் கோபத்திற்கு ஆளாவதுமாகும்.

28. கடன்பட்டவன் ஏழையாக இருந்தால் அவனைத் துன்புறுத்தி கடனை வசூலிக்காதீர்கள். தவணை கொடுங்கள் அல்லது அவனது கடனை மன்னித்து விடுங்கள். மறுமைநாளின் சோதனைகளில் அல்லாஹ் உங்களுக்குவிடுதலை அளிப்பான்.

29. உங்களிடம் கடன் வாங்கியவர் கடன் செலுத்தும் பொறுப்பை இன்னொருவரிடம் சாட்டி, சாட்டப்பட்டவர் கடனைச் செலுத்துவதற்கு சித்தமாய் இருந்தால் வாங்கினவர்தான் கொடுக்க வேண்டும் என்று கடன் வாங்கினவரை நிர்ப்பந்தம் செய்யாதீர்கள். சாட்டுதலை ஒப்புக்கொள்ளுங்கள்.

30. வாங்கின கடனை நல்ல முறையில் கொடுத்து விடுங்கள்.

31. கடனைத் திருப்பிக்கொடுக்க சக்தி இருக்கும்போது காலங் கடத்துவது அநீதமாகும்.

32. நிர்ப்பந்தமின்றிக் கடன் வாங்கக்கூடாது கடனைத்தீர்க்க தீவிரமாகமுயற்சிப்பது அவசியம்

கடன் கொடுத்தவர் ஏதேனும் சொன்னல் அதை சகித்துக் கொள்ளுங்கள்.

33. கடனைத் தீர்க்கும்போது கடன் கொடுத்தவனுக்காக துஆச்செய்யுங்கள். அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

34. கூட்டுறவு வியாபாரத்தில் பரஸ்பர நம்பிக்கை வேண்டும். நம்பிக்கையின்றேல் வியாபாரத்தின் முன்னேற்றம் தடைப்பட்டு விடுகிறது.

35. பிறருக்கு அநியாயம் செய்து வற்புறுத்தி வசூலிக்கும் பொருள் ஹலாலானதல்ல. வசூலிப்பவரின் கண்ணியத்தைக் கருதிக் கொடுக்கப்படும் பொருளும் அப்படியே. அன்புடன் அளிக்கப்படும் தொகை மட்டுமே ஆகுமானது.

36. ஒருவர் பிறரிடமிருந்து கைமாற்ருக ஒரு பொருளை வாங்கியிருந்தால் அந்தப்பொருள் பருவ காலத்தில் கிடைக்காமல் ஆகிவிட்டால், பொருளைக் கொடுத்தவருக்கு எத்தனை ரூபாயைக் கொடுத்திருந்தாரோ அதை மட்டிலும்தான் கொடுக்க வேண்டும். வேறு பொருளையோ, அல்லது அதிக பணத்தையோ வாங்குவது கூடாது, நிர்ப்பந்தம் ஏற்பட்டால் தனது ரூபாயை வாங்கிக்கொண்டு, அந்தப் பணத்தைக் கொண்டு தேவைப் பட்டதை வாங்கிக் கொள்ளவும்.

37. விளையாட்டுக்காக ஒருவனின் பொருளை எடுத்து வைத்துக்கொண்டு அவனைப் பரிதவிக்க விடவேண்டாம்.

38. வீட்டையோ அல்லது நிலத்தையோ விற்றுவிட்டால், அதற்குப் பதிலாக விரைவில் வேறு வாங்கிக் கொள்ளுங்கள். பணம் கையில் இருந்தால் செலவாகிவிடும்.

39 பிறருடைய நிழல்தரும் மரங்களை வெட்டக்கூடாது. அவ்வாறு வெட்டினால் அல்லாஹ்வின் வேதனையுண்டு.

40. வேலையாட்களிடமிருந்து வேலையை வாங்கிக்கொண்டு கூலி கொடுப்பதில் தாமதம் செய்யக்கூடாது, அப்படிச் செய்வதால் நபி ஸல் அவர்களின் ஆட்சேபனைக்கு இடமிருக்கிறது.

41. உடன்படிக்கைக்கு மாறு செய்யாதீர்கள்.

42. வறுமைக் காலத்தில் சிலர் தங்களின் புத்திரர்களையும் சில அக்கிரமக்காரர்கள் மற்றவர்களின் சிறிய குழந்தைகளையும் விற்பனை செய்துவிடுகின்றனர். இப்படி விற்பது கூடாது. வாங்கிய குழந்தைகளை அடிமை என்று கருதுவதும் கூடாது.

43. உணவு சமைப்பதற்கு கொடுக்கப்படும் நெருப்பானது அந்த நெருப்பில் சமைத்த உணவை கொடுத்த நன்மை உண்டு. இதே போல் உப்புக் கொடுத்தவனுக்கும் உணவு கொடுத்த நன்மை இருக்கிறது.

44. தண்ணீர் கிடைக்குமிடங்களில் ஒருவனை தண்ணீர் அருந்த வைப்பது அடிமையை உரிமை விடும் நன்மை இருக்கிறது. தண்ணீர் சுலபமாகக்

கிடைக்காத இடத்தில் ஒருவனுக்குத் தண்ணீர் அருந்தக் கொடுப்பது **இறந்தவனை** உயிர்ப்பித்தது போலாகும்.

45. சிலர் தங்களுடைய பொருள்களை ஒருவனுக்கு ஆயுள் பரியந்தம் நீ அனுபவித்துக் கொள். உனது மரணத்திற்குப் பிறகு நான் எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்லி அதன்படி செய்கின்றனர். இந்த நிபந்தனையிலும் கொடுக்கப்பட்டவனுக்கே அப்பொருள் சேர்ந்து விடும். கொடுத்தவனுக்கு கொடுக்கப்பட்ட பொருள் சேராது. கொடுப்பதானால் ஒரே முடிவின் மீது கொடுத்து விடுங்கள் அல்லது அதை தானே வைத்துக் கொள்ளலாம்.

46. ஒரு புத்திரனுக்குக் கொடுப்பதுபோல் மற்ற புத்திரனுக்கும் கொடுங்கள். மக்களின் மத்தியில் அநீதம் செய்வது மிகத் தீய செயலாகும்.

47. பிரதிப்பலனை எதிர்பாராமல் யாராவது **அன்பளிப்பு** ஏதாவது கொடுத்தால் அதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

48. அன்பளிப்பை அளித்தவனுக்கு பிரதி செய்ய முயற்சிக்க வேண்டும். பிரதி செய்ய முடியாவிடின் அவரைப் புகழ வேண்டும். அன்னாரின் நன்றியை பிறரிடம் கூறவேண்டும்.

جَزَاكَ اللهُ خَيْرًا **ஜஸாக்கல்லாஹு கைரன்**

49. "அல்லாஹ் உனக்கு நலனை அருள்வானாக! என்று கூறுவதும் நன்றி செலுத்தலேயாம்.

50. ஒருவருக்கு ஒருவர் அன்பளிப்பு வழங்கும் வழக்கம் வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் மனதில் தூய்மைஉண்டாகிறது; அன்பு அதிகரிக்கிறது. சிறிய பொருள்களை அன்பளிப்புச் செய்வதில் தவறொன்றுமில்லை.

51. உங்களை மகிழ்விக்கும் பொருட்டு எவரேனும் வாசனைத் திரவியம், தலையணை (தலகாணி) பால் இவைகளை அனுப்பினால் மறுக்காதீர்கள்; அதனை அன்புடன் ஏற்றுக்கொள்ளுங்கள்

52. பருவ காலத்தின் கனி வர்க்கங்கள் கிடைத்தால் அதை நேத்திரங்களிலும் உதட்டிலும் வைத்திடுக. பிறகு கீழ்கண்ட துஆ ஓதவும். "**அல்லாஹும்ம கமா அரைத்தனா அவ்வலஹு பஅரினா ஆகிறஹு**" என்று கூறவும்.

பொருள்:- **அல்லாஹ்வே** இதன் ஆரம்பத்தை எங்களுக்குக் காண்பித்தது போன்று அதன் இறுதியையும் காண்பிப்பாயாக. பிறகு சில குழந்தைகளுக்கு அதைப் பங்கிடவும்.

மரண சாசனம்

53. தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட **அமானித** பொருள்களையும் தான் கொடுக்க வேண்டிய கடனையும் எழுதிவைத்துக் கொள்ள வேண்டும்.

திருமணத்தின் விளக்கங்கள்

54. தேவையும், சக்தியும் இருப்பின் திருமணம் செய்து கொள்வதே உசிதம்.

55. மணம் புரிவதற்கு வேண்டிய **உடல் வலிமை** இருந்து இதர வசதிகள் இல்லையானால் அதிகமாக நோன்பு நோற்பதால் காம இச்சை கட்டுப்படுவதுண்டு.

56. மார்க்க பக்தியுள்ள மாதர்களையே மணந்து கொள்ளுங்கள். பொருள், அழகு, குலப் பெருமை இவற்றைப் பெரிதும் தேடிக்கொண்டிருக்காதீர்கள்.

57. நற்குணம், நல்லொழுக்கம் ஆகிய குண விசேஷங்கள் உள்ளவருக்கு உங்கள் மக்களை திருமணம் செய்து கொடுங்கள். இதர விஷயங்களை உத்தேசித்து பெண்மணிகளின் திருமணத்தைக் காலதாமதம் செய்வதால் பல கெடுதிகள் உண்டாகின்றன.

58. திருமணமாகாத ஒரு பெண்ணுக்கும் ஒரு ஆணுக்கும் காதல் ஏற்பட்டுவிடின் உடனே அவர்களுக்கு திருமணம் செய்து விடுவதுதான் நேர்மை.

59. எந்தத் திருமணத்தில் மஹர் (திருமண கட்டணம்) மற்றுமுள்ள செலவினங்கள் குறைவாக இருக்கின்றனவோ, அத்திருமணத்தில் **பறகத்** உண்டு

60. பெண்கள் தங்கள் கணவர்களிடத்தில் பிற பெண்களின் லக்ஷணங்களை கூறுதல் கூடாது

61. ஒரு பெண்மீது தன் பார்வை விழுந்தால் உடனே தன் பார்வையை வேறு திசையில் திருப்பிக் கொள்ளுங்கள். ஒரு பெண்ணைப் பார்த்த

மாத்திரத்தில் ஒருவரின் மனதில் அப்பெண்ணின் **நினைவு** இருப்பின் உடனே தனது மனைவியிடத்தில் அணுகி தனது வேட்கையைத் தணித்துக் கொள்ளல் வேண்டும்.

62. மலஜலம் கழித்தல், இன்பலீலை புரிதல் போன்றவை தவிர அவசியமில்லாமல் நிர்வாணமாகாதீர்கள். அல்லாஹ்வும் நம்முடன் உள்ளவானவர்களும் நம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அவர்களுக்கு நாணம் கொள்ளுங்கள்.

63. பெண்மணிகள் புருஷன் இல்லாத காலத்தில், தன்னை அழகுபடுத்தாமல் சாதாரண நிலையில் இருப்பதுண்டு. இதைப் பார்த்து புருஷனுக்கு மனைவிமீது வெறுப்பு ஏற்படலாம். ஆதலால் ஆடவர்கள் தங்கள் பிரயாணத்திலிருந்து திரும்பினவுடன் வீட்டினுள் நுழையாமல் மனைவி தன்னை அழகுபடுத்தும் நேரம் வரையில் தாமதப்படுத்தி வீட்டினுள் நுழையவும்.

64. ஒரு ஆண் அன்னியப் பெண்ணுடன் **தனிமையாக** இருத்தல் நஞ்சு போன்றதும் கடும் பாவமுமாகும். இவ்வாறே அன்னிய ஆணுடன் ஒரு பெண் பிரயாணம் செய்தலும் கூடாது. தான் மணந்து கொள்வதற்கு (ஹலால்) அனுமதிக்கப்பட்ட எல்லாப் பெண்களும் அன்னிய பெண்களேயாம்.

தாய், சகோதரிகள் போன்றவர்களைத் தவிர மற்றவர்கள் அன்னியப் பெண்களே.

ஒரே ஆடையில் இரண்டு ஆண்களும், இது போன்றே ஒரு ஆடையில் இரண்டு பெண்களும் போர்த்திக்கொள்வது ரோஷமற்றதும், நேர்மையற்ற செயலுமாகும். ஒரு ஆண், மற்ற ஆணின் மறைவு ஸ்தானத்தைப் பார்ப்பதாகாது. இது போல் ஒரு பெண் மற்ற பெண்ணின் தொப்புள் முதல் முட்டுக்கால்வரை பார்ப்பதாகாது **(ஹறும்)** இதை அநேக பெண்கள் பேணுதவர்களாய் இருக்கின்றூர்கள்.

65. பிள்ளைகளுக்கு அழகிய பெயர் வைப்பதும் **கல்வி** புகட்டுவதும், பருவ வயது எட்டியதும் திருமணம்செய்து வைப்பதும் தந்தையின் கடமையாகும். இவைகளைக் செய்யத் தவறினல் தந்தையின்மீது குற்றம் ஏற்படுகிறது.

66. ஒரு பெண்ணை, ஒருவருக்குப் பெண் பேசிக்கொண்டிருக்கும்போது அதன் முடிவு தெரியும்வரை மற்றவர் அப்பெண்ணைப் பெண் பேசப் போவது கூடாத காரியமாகும்.

67. ஒருவருக்கு முதல் மனைவி இருக்க இரண்டாவது திருமணத்தில் வரப்போகும் பெண் அல்லது அப்பெண்ணின் பந்துக்கள் முந்தின மனைவியை (தலாக்) விவாக ரத்துச் செய்துவிட வேண்டுமென்று நிபந்தனை இடுவது நேர்மையானதல்ல. தன் (தக்தீர்) விதியின்படி சகித்து நடப்பதே உசிதமாகும்.

68. மணவறை இரகசியங்களை நண்பர்களிடமும் தோழிப் பெண்களிடமும் சொல்லுதல் அல்லாஹ்வுக்கு வெறுப்பான செயலாகும். இது

விஷயத்தில் அநேக மணமக்கள் கவனக் குறை வாக இருக்கிறார்கள்.

திருமண விருந்து

திருமண சமயத்தில் மணமகன் ஒரு விருந்து செய்வது (முஸ்தஹப்பு) நலம். அவ்விருந்து சிரமத்துடனும் ஆடம்பரமாகவும் செய்தல் முறையன்று. ரஸூல் கரீம் ஸல் அவர்கள் ஒரு திருமண விருந்தில் 2 சேர் கோதுமையைச் செலவிட்டார்கள். மற்றொரு **வலீமா** விருந்தில் ஒரு ஆடு அறுத்து விருந்திட்டார்கள்.

ஆடவர்கள் மனைவிகளிடத்தில் நடக்க வேண்டிய ஒழுக்கங்கள்.

1. பல மனைவியுடையோர் எல்லா மனைவிகளையும் சமத்துவமாக நடத்த வேண்டும்.

2. பெண்கள் தவறு செய்தால் பொறுமையாக இருங்கள். வஞ்சங் கொள்ளாதீர்கள்.

3. பெண்மணிகளை மிகவும் முக்கியமான காரணமின்றி **அடிக்காதீகள்,** விசேஷமாக கன்னத்தில் அறையாதீர்கள். ஏசிப் பேசிக் கொண்டிருக்காதீர்கள்.

4. கணவன் மனைவிக்கிடையில் மனக்கசப்பு ஏற்படின்கணவர்கள் வீட்டைவிட்டு வெளியேறாதீர்கள். அவசியமானால் வேறு படுக்கையில் நித்திரை செய்யுங்கள்.

பெண்கள் புருஷனிடத்தில் அனுஷ்டிக்க வேண்டிய ஒழுக்கங்கள்.

1. மனைவி தன் புருஷனை பரிபூரணமாகத் திருப்திப் படுத்த வேண்டும்.

2. அவருடைய உத்தரவை எவ்வகையிலும் மீறுவது கூடாது.

3. புருஷனின் வருவாயைவிட அதிகமாக மனைவி குடும்பச் செலவு செய்தல் கூடாது.

4. புருஷனிடத்தில் வம்பு வளர்த்தல்கூடாது

5. புருஷனின் விருப்பத்திற்கு மாறுக நபில் தொழக்கூடாது. நபில்நோன்பு நோற்கக்கூடாது

6. புருஷனின் பொருளை அவருடைய உத்திர வில்லாமல் எவருக்கும் கொடுப்பதாகாது.

7. மனைவியும் புருஷனின் பொருளைத் தன் தேவைக்கு அதிகமாக எடுப்பதாகாது.

8. புருஷனின் அனுமதியின்றி எவரையும் தன் வீட்டில் வரவேற்கலாகாது.

9: நிவர்த்திசெய்ய முடியாத நிலைமையில் புருஷனிடம் மனைவி விவாஹரத்துக் கேட்கலாம்.

71. கணவருக்கும் மனைவிக்கும் உள்ள நேச உறவை மத்தியிலுள்ளோர் கெடுப்பது பெரும் பாவமாகும்.

72. கணவன் தன் மனைவியை ஏதோ ஒரு காரணத்தை முன்னிட்டு அடிக்கும்போது மற்றவர்கள் அதில் தலையிடுவது ஒழுங்கன்று.

73. தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் விவாஹரத்தைப் பிரயோகிக்கலாம்.

74. சந்தேக பாவனையினால், தன் மனைவி (விபச்சாரி) கெட்ட நடத்தைக்காரி என்று நிச்சயிப்பதும், குழந்தைகளின் வடிவம் தனது சாயலில் இல்லாததால் அக்குழந்தைகள் தனக்குப் பிறந்ததல்லவென்று கூறுவதும் பெரும் பாவமாகும்.

75. மனைவி கெட்டவளாக இருப்பதுடன் அவளை நிர்வகிக்க முடியாமலுமிருந்தால் விவாஹரத்துச் செய்துவிடலாம். ஆனால் அவள்,மீது தனக்குள்ள அன்பின் காரணமாக அவளைவிட்டு பிரிந்திருப்பது சங்கடமாக இருந்தால் இயன்றவரை அவளை சீர்திருத்தம் செய்து நிர்வாகம் நடத்தலாம்.

76. தன் மனைவி விபச்சாரம் செய்வதை நேரில் கண்ட கணவன் தன் மனைவியைக் கொலை செய்வதால் அல்லாஹ் இடத்தில் குற்றவாளி அல்ல. (ஆனால் மார்க்கத்தின்படி ஸினாவை ருஜூபிக்காததால் அரசாங்கத்தின் குற்றவாளியே)

77. தகுந்த ஆதாரமில்லாமல் தன் மனைவி விபச்சாரம் செய்வதாக கெட்ட எண்ணங்கொள்வது **அறியாமையும், அகம்பாவமுமாகும்.** மனைவியின் துர்நடத்தையின் மீது தகுந்த ஆதாரமிருக்க தனக்குத் தெரியாததுபோல் இருந்து வருவது ரோஷமற்ற தன்மையாகும்.

78. மணப்பெண்ணைப் பற்றியோ அல்லது மணமகனைப் பற்றியோ யாராவது உங்களிடம் யோசனை கேட்டால் உங்களுக்குத் தெரிந்த விவரத்தைக் கூறிவிடுதலே நலம். தீய செய்கையை

யும் பழக்க வழக்கங்களையும் தூய்மையான எண்ணத்துடன் கூறுவது தவறல்ல. இதே போன்று எங்கு தீங்கு காணப்படுமோ அதை சீர்திருத்த நோக்கத்துடன் எடுத்துரைப்பது சன்மார்க்கத்தில் அனுமதியுண்டு. அப்படி குறைகளை கூறும் சந்தர்ப்பத்தில் தீங்கு விளைவிக்கும் நோக்கம் இருப்பதாகாது. சில சந்தர்ப்பங்களில் தீய விஷயங்களைப் பற்றி எடுத்துரைப்பது வாஜிபாகவும் இருக்கிறது.

79. தன் கணவனுக்கு தகுதி இருந்து **லோபித்தனத்தால்** தனது போஷணைக்குப் போதிய அளவு கொடுக்காவிடில் கணவனுக்குத் தெரியாமல் தனக்குப் போதிய அளவிற்குப் பணத்தை எடுத்துக் கொள்வது தவறல்ல. இறைவன் செல்வத்தை அருள் செய்தால் முன்பு தனக்கு செலவு செய்வான் மீதியுள்ளதை தனது சுற்றத்தாருக்கு கொடுப்பான்.

அடுத்த மதத்தவர்களுடன் எப்படி நடந்து கொள்வது

80 உங்களை ஒரு அன்னிய மதத்தவன் காயப்படுத்தி விட்டாலோ அல்லது அங்கஹீனம் செய்து விட்டாலோ நீங்கள் அவனைப் பழி வாங்கலாம். ஆனால், நீங்கள் பழி வாங்க எத்தனிக்கும் சமயம் அவன் இஸ்லாமிய மூல மந்திரத்தை (கலிமாவை) சொல்லிவிட்டால், உயிருக்குப் பயந்து கலிமாவைச் சொல்லுகிறான் என்று கருதி கொலை செய்து விடாதீர்கள். அவனை மன்னித்து விடுங்கள். இதனால் இஸ்லாத்தின் சகிப்

புத்தன்மை, பொருமை, ஈகை, உண்மையை உணர்த்தும் தன்மை ஆகியவைகளை எடுத்துக் காட்டுகிறது.

81. இஸ்லாமிய நாட்டில் வசிக்கும் அன்னிய மதத்தினர்களை குற்றமின்றிகொலைசெய்வது கடுமையான பாவமாக இருப்பதுடன் கொலை செய்தவன் சுவர்க்கத்தைவிட்டு விலகியவனுவான்.

82. ஒரு முஸ்லிம் இஸ்லாமிய அரசாங்கத்திற்குக் கட்டுப்பட்டுள்ள அன்னிய மதத்தினரைக் கொலை செய்தால் அதற்குப் பதிலாக அந்த முஸ்லிமைக் கொலை செய்வதுதான் இஸ்லாமிய விதி.

தற்கொலை புரிந்து கொள்வது

83. தற்கொலை புரிந்து கொள்வதற்கு இஸ்லாமிய மார்க்கத்தில் எந்த வகையிலும் அனுமதியளிக்கப்படவில்லை.

84. கூட்டத்தில் ஆயுதம் தாங்கிச் செல்ல நேரிடின் பிறருக்குத் **தீங்கு** விளைவிக்காமல் கொண்டு செல்ல வேண்டும்.

85. விளையாட்டாகவும் ஆயுதங்களை மற்றவர்கள் மீது சுட்டிக் காண்பிப்பது கூடாது.

86. வாள். கத்தி போன்ற ஆயுதங்களை உறையிலிருந்துஉருவி மற்றவர்களின் கரங்களில் கொடுக்க வேண்டாம். கொடுக்கும் சமயம் உறையிலிட்டுக்கொடுங்கள். அல்லது தரையில்வைத்து விடுங்கள். வாங்குவோர் எடுத்துக்கொள்ளட்டும்

87. உயிர்ப் பிராணிகளை வதை செய்து கொல்லுவது அனுமதிக்கப்படவில்லை. பிராணி

களை வதை செய்வோரை அல்லாஹ் மறுமையில் மிக வதை செய்வான்.

88. நெருப்பில் வேதனை செய்வது அல்லாஹ்வுக்கே உரியதால் சிருஷ்டிகள் மற்ற சிருஷ்டிகளை நெருப்பில் எரிக்க அனுமதி இல்லை.

89. விஷ ஜந்துக்களையும் இதர உயிர்ப் பிராணிகளையும் சித்திரவதை செய்வது கூடாது.

90. பறவைகளின் குஞ்சுகளை அதன் கூண்டுகளை விட்டு அப்புறப்படுத்தி அதன் மாதாக்களை ஏங்கவிடக்கூடாது.

91. சூனியம் செய்வது கொலை செய்வது போலாகும்.

92. பொய்யான விஷயத்திலும் மற்றும் எந்த விஷயத்திலும் உண்மையை உணராத வரையில் அதில் அக்கரை காட்டுவதும், உதவி புரிவதும் கூடாது.

93. மதுபானங்களை மருந்துகளிலும் சேர்ப்பது ஹறுமாகும்.

94. போதையைத் தரக்கூடியது குறைவானதையும், அதிகமானதையும் உபயோகிப்பது கூடாது.

பதவியும் நாட்டு நிர்வாகமும்

95. பதவியில் ஆசை கொண்டவன் பதவிக்குத் தகுதியற்றவனும் சுயநலமியாகும். பதவிப் பேராசை இல்லாதவனே நீதியை நிலை நாட்டுவான்.

96. அரசனை நிந்திப்பவனை அல்லாஹ் நிந்திக்கிறான். ஆதலால், அரசனை நிந்திப்பது இஸ்லாத்தில் அனுமதிக்கப்படவில்லை.

97. அதிகாரிகள் பிரஜைகளுடன் சுமூகமாக நடந்து கொள்ள வேண்டும்.

98. அதிகாரிகளிடம் அணுகி அவர்களுக்கு அநீதியானவைகளை எடுத்துரைப்பதும், அவர்களுக்கு அநீதியான காரியங்களில் உதவி புரிவதும் இழிவான செயலாகும்.

99. அதிகாரிகளிடம் உண்மையை உரைப்பதில் தயங்கக்கூடாது.

100. அதிகாரிகள், குற்றமில்லாத பிரஜைகளைக் குறை கூறுவதும் தண்டிப்பதும் கூடாது.

101. அதிகாரிகள்பிரஜைகளை அவசியமின்றி பயப்படுத்தும் முறையில் பயங்கரமான தோற்றத்தில் பார்ப்பது கூடாது.

102. அதிகாரிகள் அநீதம் செய்தால் அவர்களை நீங்கள் திட்டவேண்டாம். நீங்கள் அல்லாஹ்வுக்கு குற்றம் செய்து இருப்பதை முன்னிட்டு அல்லாஹ்வின் தண்டனை ஏற்பட்டுள்ளது என்று நினைத்துத் தன்னைத்தான் தூய்மைப்படுத்திக் கொண்டால் அதிகாரிகளின் கடின சுபாவத்தை அல்லாஹ் இலகுவாக்கி விடுவான்.

103. ஜனங்கள் தங்கள் முறையீடுகளை வெளியிட முடியாத இடத்தில் அதிகாரிகள் அமர்ந்திருக்கக் கூடாது.

104. கோப வேளையில் ஒருவரின் மனநிலை நேரான முறையில் இராது. ஆதலால், அந்த நிலையில் தீர்ப்பு அளிப்பது கூடாது,

105. **லஞ்சம்** வாங்குவதும் கொடுப்பதும் மிகக் கடினமான பாவமாகும்.

106. பொய்த்தாவா செய்வதும், பொய் சாக்ஷி சொல்வதும். பொய் சத்தியம் செய்வதும் உண்மையை மறுக்கின்றதும் பெரும்பாவமாகும்

107. உரிமைகளை நிலைநிறுத்த முயற்சி செய்வது குற்றமல்ல. முயற்சியின்றி இருப்பது சோம்பேறித்தனத்தையும், கோழைத்தனத்தையும் உறுதிப்படுத்துகிறது. முயற்சி செய்து பலன் தராவிடில், அதற்குத் துக்கப்படுதல் கூடாது. அதன் பலாபலன்களை நம்பிக்கை வைத்து அல்லாஹ்விடத்தில் சாட்டி விடுதல் வேண்டும். மேலும் அல்லாஹ்வுக்கு இதுவே நாட்டமிருந்தது அதன்படி ஆகிவிட்டது என்று மனதைத்திருப்தி செய்துகொள்ள வேண்டும்.

108. ஒரு மனிதரின் துர்நடத்தையின்மீது போதிய ருஜூ இல்லாமல் அவனை அதிகாரிகளிடத்தில் ஒப்படைப்பது கூடாது.

வாகனங்களின் மீது சவாரி அனுபவமும் குறிகள் பழகுவதும்

109. வாகனங்களின்மீது சவாரி செய்தும் அம்பு எய்தும் பழகுங்கள்.

110. குதிரையின் வால், நெற்றி, பிடரி ரோமங்களைக் கத்திரிக்க வேண்டாம். ஏனெனில்

வால் ரோமத்தால் ஓடும் சக்தி அதிகரிக்கிறது. பிடரி ரோமத்தால் அதற்கு உஷ்ணத்தை அதிகரிக்கிறது. நெற்றி ரோமத்தால் (பரகத்) விருத்தி இருக்கிறது.

பிரயாணத்தின் ஒழுங்குகள்

111. பிரயாணம் செய்யும் சமயம் பாதைகளில் வாகனப் பிராணிகளை சற்று நேரம் மேய விடுங்கள். வரண்ட காலமாகவும், புல் இல்லாமலும் இருந்தால் பாதைகளில் வாகனப் பிராணிகளைக் கஷ்டப்படுத்த வேண்டாம். அதிசீக்கிரமாக தங்குமிடத்திற்குச் சென்று அதற்கு தீனி போடுங்கள். தங்குமிடம் வந்துவிட்டால் **ரஸ்தாக்களில்** தங்க வேண்டாம்.

112. கூடுமானவரை தனியாகப் பிரயாணம் செய்ய வேண்டாம்.

113. பிரயாணம் செய்த நோக்கம் முடிந்துவிட்டால் தாமதியாமல் திரும்பி விடுவதே நலம்.

114. பிரயாணத்தின் சிரமம் தோன்றாமலிருப்பதற்காக இரவில் பிரயாணம் செய்வதே நலம்.

115. பிரயாணத்தில் தோழர்களில் ஒருவரைத் **தலைவராக** ஆக்கிக் கொள்ள வேண்டும்.

116. பிரயாணத்தின் தலைவர், தனது சகாக்களை மிகவும் ஜாக்கிரதையுடன் கவனிப்பது அவசியம்.

117. தங்குமிடத்தில் ஒருவருக்கொருவர் சமீபமாகத் தங்குவதே நலம்.

118. வாகனப் பிராணியின்மீது அமர்ந்து கொண்டு அதிக நேரம் பேசவேண்டாம். ஏனெனில் வாகனப் பிராணிகள் சவாரி செய்வதற்காகத்தான் இருக்கிறது.

119. தங்குமிடத்திற்கு வந்தவுடன் வாகனத்தின் மீதுள்ள சுமைகளை உடனே அகற்றி விடுங்கள்.

120. ஒருவனுக்கு அபயம் கொடுத்த பிறகு அதற்குத் துரோகம் செய்வது பெருங் குற்றமாகும்.

121. தூதுகொண்டு வருபவனைக் கொலை செய்வது அனுமதிக்கப்படவில்லை.

122. (காபிரான)முஸ்லிம் அல்லாத பிரஜைகளின்மீது அநீதி செய்வதும், அவர்களின் உரிமைகளில் குறைவு செய்வதும், அவர்களின் சக்திக்கு அதிகமாக கஷ்டம் கொடுப்பதும், அவர்களிடமிருந்து அவர்களின் அனுமதியின்றி எதையும் எடுத்துக் கொள்வதுமாக உள்ளவர்கள் மறுமை நாளில் ரஸூல் கரீம் ஸல் அவர்களின் எதிர்ப்புக்கு ஆளானவராக ஆகிவிடுவார்கள்.

உயிர் பிராணிகளை அறுக்கும் ஒழுக்கம்

123, உயிர்ப் பிராணிகளை அறுப்பதற்கு முன் ஆயுதத்தை மிகக் கூர்மைப்படுத்திக் கொள்ளுங்கள்.

124. நாயானது தொந்தரவு கொடுக்கக்கூடியதாகவும் பிச்சைக்காரர்களை விரட்டக்கூடிய

தாகவும். தன் இனம் என்ற ஒற்றுமை இல்லாத தாகவும் இருப்பதால் தேவை இன்றி அதை வளர்ப்பது அனுமதிக்கப்படவில்லை.

125. உயிர்ப் பிராணிகளை ஒன்ருேடு ஒன்று சண்டைபோடவிடுவது (ஹராம்) தடுக்கப்பட்ட தாகும்,

125. வேட்டையாடுவதில் அதிகமான நேரத்தைப் போக்க வேண்டாம். அதிகமான நேரத்தை வேட்டையாடுவதில் கழிப்பதால் அறிவு குன்றிவிடுவதுடன், அவரின் முக்கியமான காரியங்களைக் கவனிக்க முடியாமல் சோம்பேறியாகவும் ஆக்கிவிடுறது.

வாழ்க்கையின் ஒழுக்கமும், உண்ணுவதும், குடிப்பதும்

127. உணவில் ஈ, எறும்பு விழுந்துவிடின் அதன் முழு உடலையும் முக்கி எறிந்துவிட்டபின், உணவுப் பொருளை உட்கொள்வதில் கெடுதியில்லை. ஈயின் இரு இறக்கைகளில் ஒரு இறக்கையில் விஷமும். மறு இறக்கையில் அதன் முறிவும் இருக்கின்றது. விஷமுள்ள தன் இறக்கையையே அது முதலில் முக்குகிறது, ஆதலால், முழு உடலையும் முக்கிவிடின் அதன் விஷம் முறிவு ஏற்பட்டு விடுகிறது.

128. உணவை உட்கொள்ளும் நேரத்தில் பிஸ்மில்லாஹ் சொல்லி தனக்கு முன்பாக உள்ள உணவை வலக்கரத்தால் உட்கொள்ளுங்கள். பல பதார்த்தங்கள் இருப்பின் பிரியப்பட்டதை உட்கொள்ளுங்கள்.

129. எந்த வஸ்துவை அருந்துவதில் எல்லா விரல்களையும் இட வேண்டிய நிர்பந்தமில்லையோ அந்த உணவை **மூன்று** விரல்களினால் உட்கொள்ளவும். விரல்களைக் கடைசியில் சூப்பிக் கொள்வதாலும், சாப்பிட்ட பாத்திரத்தை விரல்களைக் கொண்டு அதில் ஒட்டி இருக்கும் பதார்த்தங்களைத் துடைத்துச் சாப்பிடுவதாலும் (பறக்கத்) சுகங்கள் உண்டு.

130. உணவு உட்கொள்ளும்போது கரங்களை விட்டு உணவு தவறிக் கீழேவிழுந்துவிடின் அதை மீண்டும் எடுத்து உட்கொள்ளுங்கள்.

131. தவறி விழுந்த உணவில் அசுத்தம் ஏற்பட்டிருந்தால் சுத்தம் செய்து கொள்ளுங்கள்.

132. உணவை உட்கொள்ளும்போது மிக மரியாதையாக அமர்ந்து புசியுங்கள். பெருமை கொண்டவர்களைப்போல் சாய்ந்து உண்ண வேண்டாம்.

133. உணவு குறைவாகவும், உண்ணுபவர்கள் அதிகமாகவும் இருந்தால் **பகர்ந்து** உண்ணுங்கள். எல்லா உணவையும் ஒருவரே புசித்துவிட வேண்டாம்.

134, இனிப்புப் பதார்த்தங்களை அருந்தும் சமயம் மற்ற தோழர்களைக் கவனித்துச் சிறுகச் சிறுக அருந்துங்கள்.

135. வெங்காயம், வெள்ளைப்பூடு முதலிய துர்வாடையுள்ள வஸ்துக்களை உண்டபின் ஜனங்களின் மத்தியில் செல்லவேண்டாம்.

136. உணவு தானியங்களை அளந்து சமயல் செய்வதில் பறக்கத் இருக்கிறது.

137. உணவு உட்கொண்ட பிறகும், தண்ணீர் குடித்த பிறகும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். அல்ஹம்து லில்லாஹ் என்று சொல்லுங்கள்.

138. உணவு அருந்துவதற்கு முன்னும் பின்னும் வாய் கொப்பளித்துக் கொள்வதாலும் கரங்களைக் கழுவிக் கொள்வதாலும் (பறக்கத்) பல நலன்கள் இருக்கிறது.

139. அதிக சூடான உணவை உட்கொள்ள வேண்டாம். அதனால் கெடுதிகள் உண்டு. (தந்த நோய் முதலியன உண்டாகிறது.)

140. விருந்தினரை நல்ல முறையில் உபசரியுங்கள். விருந்தாளிகள் மூன்று நாட்களுக்குமேல் தங்குவது அழகல்ல.

141. உணவைப் பலரும் சேர்ந்து உட்கொள்வதால், (பறக்கத்) இருக்கின்றன.

142. சபையில் சாப்பிடும்போது யாவரும் சாப்பிட்ட பின் எழுந்திருங்கள். முதலில் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டால் சபையோர் முன் மன்னிப்புக்கோரிக் கொள்ளுங்கள்.

143. விருந்தினர் விருந்து அருந்திய பின் விருந்துண்டவரின் வீட்டின் வாசல் வரையில் அழைத்துச் செல்வது உபசரிப்பின் ஒழுக்கமாகும்.

144. தண்ணீரை ஒரே மூச்சில் குடிக்க வேண்டாம். இரண்டு மூன்று மூச்சுகளில் குடிக்கவும். மூச்சுவிடும் சமயம் பாத்திரத்தை வாயை விட்டு எடுத்துக் கொள்ளவும். தண்ணீர் அருந்தும்போது பிஸ்மில்லாஹ் என்று கூறுங்கள். தண்ணீர் அருந்திய பிறகு அல்ஹம்துலில்லாஹ் என்று சொல்லுங்கள்.

145. துருத்தி போன்ற பாத்திரங்களின் வாயின் வழியாகத் தண்ணீரைக் குடிக்க வேண்டாம்.

146. நிர்ப்பந்தமின்றி தண்ணீரை நின்று குடிக்க வேண்டாம்.

147, **தங்கம் வெள்ளிப்** பாத்திரங்களில் உண்பதும் குடிப்பதும் (ஹராம்) தடை செய்யப்பட்டதாகும்.

148, தண்ணீரைப் பலரும் குடிக்க வேண்டியதிருந்தால் முதலில் வலது பக்கத்திலிருந்து குடிக்க ஆரம்பித்து வலது பக்கத்திலேயே முடிக்கவும்.

149. ஓரங்கள் உடைந்துள்ள பாத்திரங்களில் ஓரங்கள் உடைந்துள்ள பக்கமாகத் தண்ணீர் குடிக்க வேண்டாம்.

150. மாலை நேரங்களில் பாலகர்களை வெளியில் விட வேண்டாம். பிசாசுகள், ஜின்கள் இவ்வு காலங்களில் உலாவுதல் உண்டு. கதவையும் பாத்திரங்களையும் பிஸ்மில்லாஹ் கூறி மூடிவிடுங்கள். நித்திரை செய்யும்போது தீபத்தை அணைத்து விடுங்கள்.

78472

151. உணவு பதார்த்தங்களை மற்றவர்களிடம் கொண்டுசெல்லும்போது மூடிக்கொண்டு செல்லுங்கள்.

152. நித்திரைக்கு முன் அடுப்பிலுள்ள நெருப்பை அணைத்து விடுங்கள். அல்லது மூடி விடுங்கள்.

மறைக்கவேண்டிய உருப்புகளும், அழகுபடுத்துதலும்

153. ஆடவர்கள் கரண்டைக்கால் மொழிக்கிகீழே உடைகளை அணிவதும் நான்கு விரல் அகலத்தைவிட அதிகமாகவுள்ள பட்டு ஜரிகை உள்ள ஆடைகளை அணிவதும் கூடாது.

152. நடக்கும் சமயங்களில் மர்ம ஸ்தலம் தெரியும் முறையில் ஆடைகளை அணியக்கூடாது.

156. ஆடைகளை வலது பக்கத்திலிருந்து அணிவதற்கு ஆரம்பம் செய்யுங்கள், (உதாரணமாக சட்டையில் வலது கையை முதலில் புகுத்துங்கள்.

157. ஆடையை அணிந்த பிறகு அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்தும் பொருட்டு இதை ஓதுங்கள் **அல்ஹம்து லில்லா ஹில்லதீ கஸானீ ஹாதா வரஸகனீஹி மின்கைரி ஹௌலிம்மின்னீ வலா குவ்வத்தின்** (என் முயற்சியும் சக்தியும் இன்றி ஆடையை எனக்குக் கொடுத்து அணியவைத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது) என்று சொல்லுவதால் அநேக பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

158, தனவந்தர்களிடத்தில் அதிகமாகப் பழகுவதால் உலகப் பற்று அதிகரிக்கிறது.

159. ஆடையில் ஒட்டுப் போடாதவரை பழையதென கருத வேண்டாம்.

160. ஆடை அணிவதில் பெருமை இல்லாமலும் தன் கௌரவத்திற்கு குறைவில்லாமலும் நடுத்தரமாக அணியுங்கள்.

161. தன் மதத்தின் கோட்பாடுகளை விட்டு விட்டு பிற மதத்தினரின் கோட்பாடுகளைச் செய்வது பிற மதத்தைச் சேர்ந்தவன் என்பதைக் குறிக்கிறது. பெண்மணிகள் லேசான ஆடைகளை அணிவது நிர்வாணத்தைப் போன்றாகும்.

162. பாவு நூலாகவும் ஊடை பட்டாகவும் உள்ள ஆடைகளை அணியலாம்.

163. ஆடவர்கள் தங்கமோதிரம் அணிவது கூடாது அவசியம் இருப்பின் காலே அரைக்கால் ரூபாய்க்கு குறைந்த எடையில் வெள்ளி மோதிரங்களை அணியலாம்,

164 கலகலத்த சப்தத்தை உண்டாக்கும் நகைகளை அணிவது கூடாது.

195, பல ஜூத்தாக்களை வைத்துக்கொள்ளலாம் அவைகளை வலது பக்கத்திலிருந்து அணியுங்கள். இடது பக்கத்திலிருந்து கலற்றுங்கள்.

166. ஜூத்தாவை கயிறு கொண்டு கட்ட வேண்டியதும். இருக்கத்தை லேசாக்க வேண்டியதும் நேரிட்டால் நின்று கொண்டு கட்ட வேண்டாம்.

167. மிதியடிகள் திருட்டுப் போய்விடும் என்ற பயம் இருப்பின் அவைகளை தன்னுடன் வைத்துக்கொள்ளவும்.

168. விருத்த சேதனம் (கத்னு) செய்வதும் தொப்புளுக்கு கீழ் உள்ள ரோமத்தை நீக்குவதும் நகத்தை எடுப்பதும், கக்கத்து ரோமத்தை நீக்குவதும், மீசையைக் கத்தரிப்பதும், இயற்கைக்குப் பொருத்தமான விஷயங்களாகும். நகங்களையும் ஷை ரோமங்களையும் நாற்பது நாட்களுக்குமேல் வளரவிடக்கூடாது.

169. ஆடவர்கள் பெண்மணிகளின் ஆடைகளை அணிவதும். பெண்மணிகள் ஆடவர்களின் ஆடைகளை அணிவதும், ரூபங்களை மாற்றிக் கொள்வதும் (ஹராம்) அனுமதிக்கப் படாததாகும்.

170. மற்றவர்களின் ரோமத்தை தன் தலை ரோமத்தில் சேர்த்துக் கொள்வதும் சரீரத்தில் பச்சைக்குத்திக் கொள்வதும் விலக்கப்பட்டதும் அல்லாஹ்வின் சாபத்திற்கு (லஃனத்திற்கு) தகுதியானதுமாகும்,

171. ஆடவர்கள் மஞ்சள். குங்குமம் நிறமுள்ள ஆடைகளை அணிவது கூடாது.

172. ஒரு பிடியைவிட குறைவான தாடியை கத்தரிப்பது கூடாது. வளர்ந்துள்ள ஒன்று இரண்டு ரோமங்களை ஒழுங்கு படுத்துவது குற்றமல்ல.

173. தலையில் ரோமம் வைத்திருப்பின் ரோமத்தைக் கழுவுவதும். எண்ணெ போட்டு வாரிவிடுவதும். தாடியை சீவி விடுவதும் நலமே யாகும். ஆனால் அதுவே வேலையாக வைத்துக் கொள்வது வீண் செயலாகும்.

174. ரோமங்கள் வெளுக்க ஆரம்பித்து விட்டால் அதை எடுக்க வேண்டாம். ரோமங்களுக்கு சிகப்புச் சாயமிடுங்கள். கருப்புச் சாயமிடுவது கூடாது.

175. சிறுவர்களுக்கு முடி வைப்பதைவிட எடுத்து விடுவதே நலம்.

176. பெண்மணிகளின் கரங்களுக்கும், நகங்களுக்கும் மருதோன்றி இடலாம்.

177. நித்திரை செய்யும் நேரத்தில் கண்களுக்கு மும்மூன்று தடவை சுர்மா இடுங்கள். நபிகள் கோன் ஸல் அவர்கள் இப்படிச் செய்துள்ளார்கள்.

178. வீடுகளையும், வீட்டின் முன் பாகத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள்.

179. சமயா சமயங்களில் வாசனைத் திரவியங்களைப் பூசிக் கொள்ளுங்கள்.

180. சொரூபங்களையும், போட்டோ படங்களையும் வீட்டில் வைக்க வேண்டாம்.

181. புருக்களைப் பறக்கவிட்டுக் கொண்டிருப்பதும், ராகங்களைப் பாடுவதிலேயே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பதும், சதுரங்கம் போன்ற விளையாட்டுக்களை விளையாடுவதும் கூடாது.

வியாதியும், அதன் சிகிச்சையும்

182. வியாதிகளுக்கு உடனுக்குடன் மருந்து கொடுக்க வேண்டும்.

183. வியாதியஸ்தர்களை உண்பதில், குடிப்பதில் அதிகமாக வற்புறுத்த வேண்டாம்.

184. மார்க்கத்தில் தடுக்கப்பட்ட வஸ்துக்களை மருந்துகளில் சேர்க்கக் கூடாது.

185. இயன்ற வரையில் ஜீரணக் கருவியை சீராக வைப்பதால் திரேக முழுதும் வியாதி பீடிக்காமலிருக்கும், ஜீரணக் கருவி கெட்டுவிட்டால் திரேகம் முழுதும் கெட்டுவிடும்.

186. எந்த வியாதியில் மக்கள் வெறுப்பு அடைகின்றனரோ. அந்த வியாதியில் பீடிக்கப் பட்டவர்கள் ஜனங்களைவிட்டுத் தனித்திருப்பதே நலம்.

187. மார்க்கத்திற்கு முரண்பட்ட வகையில் தாயத்து போடுவதும், மந்திரிப்பதும் கூடாது.

188. சகுனங்கள் பார்ப்பது அல்லாஹ்வுக்கு மற்றவர்களைக் கூட்டாக்குவது (இணைவைப்பது) போன்றாகும்.

189. நக்ஷத்திரத்தைப் பார்த்து விஷயத்தைக் கிரகித்துக் கொள்வதும், கோடு கிழித்து விஷயத்தை உணர்ந்து கொள்வதும் ஜோதிடம் பார்ப்பதும் ஈமானை அகற்றக்கூடியதாகும்.

கனவைப் பற்றிய விளக்கம்

190. தனக்குப் பொருத்தமற்றதும், வெறுக்கத்தக்கதுமான கனவைப் பார்த்தால் இடது பக்கம் மூன்று தடவை துப்பிவிட்டு,

اَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

وَمِنْ شَرِّ هٰذِهِ الرُّؤْيَا

அஊது பில்லாஹி மினஷ் ஷைதா னிர்ரஜீம்

வமின் ஷர்ரி ஹாதி ஹிர்ருஉயா

பொருள்: அல்லாஹ்வால் சபிக்கப்பட்ட ஷைத்தானின் தீங்கைவிட்டும், இன்னும் இந்தக் கனவின் கெடுதியை விட்டும் அல்லாஹ்வைக் கொண்டு நான் காவல் தேடுகிறேன். என்று கூறி அடுத்தபக்கம் திரும்பி படுத்துக்கொள்ளவும் ஷை துர்க்கனவை எவரிடமும் கூறவேண்டாம் **இன்ஷா அல்லாஹ்** எவ்விதக்கெடுதியும் ஏற்படாது

191. கனவைக் கூறவேண்டிய திருந்தால் கெடுதியான வியாக்யானம் சொல்லாம லிருப்பதற்காக அறிவாளிகள் அல்லது நண்பர்களிடம் கூறுங்கள். கனவுக்கு வியாக்யானம் செய்வதால் அதன்படி சம்பவம் அதிக சந்தர்ப்பங்களில் நடந்தும் விடுகிறது.

192. பொய்க் கனவு உண்டுபண்ணுவது பெரும் பாவமாகும்.

ஸலாம் கூறுதலும் அதன் ஒழுக்கங்களும்

193. நீங்கள் ஒருவருக்கொருவர் சந்தித்தால் **ஸலாம்** கூறுங்கள். அதனால் அன்பு அதிகரிக்கிறது

194. அறிமுகமானவர், அறிமுகமில்லாதவர் என்ற பாகுபாடின்றி முஸ்லிம்களுக்கு **ஸலாமைக்** கூறுங்கள்.

195. வாகனத்தின்மீது சவாரி செய்பவர் நடப்பவருக்கும், நடப்பவர் உட்கார்ந்து கொண்டிருப்பவருக்கும், குறைவான கூட்டத்தினர் அதிகமாயுள்ள கூட்டத்தினருக்கும், சிறியோர்கள் பெரியோர்களுக்கும் **ஸலாம்** கூறவேண்டும்.

196. ஸலாம் கூற முந்திக் கொள்பவருக்கு அதிக நன்மையுண்டு.

197. பலரின் மத்தியில் ஒருவர் **ஸலாம்** கூறுவதும், பலரின் ஸலாமுக்கு ஒருவர் பதில் பகருவதும் போதுமானது.

அனுமதி கேட்டல்

198. எவரையாவது சந்திக்க வேண்டியதிருந்தால் அனுமதி பெறுவதற்கு முன் எச்சரிக்கையின்றி அவரின் வீட்டிற்குள் போக வேண்டாம். அந்த வீட்டினுள் இருப்பவர்கள் ஆண்களாக இருந்தாலும் சரியே. மூன்று தடவை சப்தமிட்டும் உத்தரவு கிடைக்காவிடில் திரும்பி வந்துவிடவும். இதே போன்று தன்னுடைய இல்லத்திலும் எச்சரிக்கையின்றி நுழைய வேண்டாம். ஏனெனில் சமயோஜிதமாக நாணக்கூடியவர்கள் வந்திருக்கக் கூடும்.

ஆனுல் ஒருவர் பொது இடத்தில் அமர்ந் திருந்தால் அவரைச் சந்திப்பதற்கு அனுமதிபெற வேண்டியதில்லே.

199. வீட்டின் தலேவாயிலிலிருந்து கொண்டு அழைக்கும்போது வீட்டின் சொந்தக்காரர் தலே வாயலில் நிற்பவரை யார் என வினவிடின் நான் என்று கூருமல் பெயரை அறிவிக்கவும்.

(முஸாபஹா) கை கோர்த்தலும், (முஆனகா), ஆலிங்கனம் செய்தலும். (கியாம்) மரியாதைக்காக எழுந்திருத்தலும்

200. ஒருவரை மற்றவர் சந்திக்கும் சமயம் இருவர் கரங்களேயும் சேர்த்து (முஸாபஹா) செய்வதால் தீய எண்ணங்களே விட்டு மனது பரிசுத்தமடைவதுடன் பாவங்கள் மன்னிக்கப் படுகின்றது,

201. அன்பை முன்னிட்டு நெஞ்சோடு நெஞ்சு சேர்த்து (முஆனகா) **ஆலிங்கனம்** செய் வது குற்றமல்ல. ஆனுல், மனே இச்சையின் மீது ஆலிங்கனம் செய்வது பாவமாகும்.

202. பெரியோர்கள், கண்ணிய மிகுந்தவர் கள் வருகையை முன்னிட்டு கௌரவிப்பதற்காக எழுந்து நிற்பது குற்றமல்ல. அவர்கள் அமர்ந்த வுடன் தான் உட்கார வேண்டும். வந்தவர்கள் அமர்ந்தும் தான் நின்று கொண்டிருப்பது மிக வும் வெறுக்கத் தக்கதும் குற்றமுமாகும். அடிக் கடி எழுந்திருக்க வேண்டியது ஏற்படினும் பிரதி

வருகையிலும் எழுந்து நிற்பது அவர்களுக்கு பிரியமில்லாததாக இருந்தால் எழுந்திருக்காமல் இருக்கலாம்.

நடத்தலும், அமருதலும், படுத்தலும்

203. மர்ம ஸ்தலம், வெளியில் தெரியாத விதத்தில் கால்மேல் கால் போட்டு படுத்துக் கொள்வது குற்றமல்ல.

204. சந்தோஷத்துடன் குதித்துக்கொண்டு நடக்க வேண்டாம்.

205. பெருமையின்றி முழங்காலைக் கட்டி உட்காருவது குற்றமல்ல.

206. குப்புறப் படுக்க வேண்டாம். கைபிடி சுவர் இல்லாத மாடியின் தாழ்வாரத்தில் தவறி விழ வேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுவதால். அவ் விதமான இடங்களில் நித்திரைசெய்வதுகூடாது

207. உட்கார்ந்த இடத்தில் வெயில் வந்து விட்டால், அந்த இடத்தைவிட்டு அகன்று விடவும்.

208. பெண்மணிகள் வெளியில் செல்ல நேரிட்டால் பாதையின் மத்தியில் நடக்காமல் ஓரமாக நடக்க வேண்டும்.

சபையின் ஒழுக்கங்கள்

209. நடைபாதையில் உட்கார வேண்டாம். உட்கார வேண்டிய அவசியமிருந்தால் கீழ்க் காணும் விஷயங்களைக் கவனித்து நடத்தல் வேண்டும்.

1. விவாகம் புரிவதற்கு அனுமதிக்கப்பட்ட பெண்களைப் பார்க்காமலிருக்க வேண்டும்.

2. நடக்கக்கூடியவர்களுக்கு சிரமம் ஏற்படாமலிருக்க வேண்டும்.

3. பாதையை மறைத்து உட்கார வேண்டாம்

4. ஸலாமுக்கு பதில் சொல்ல வேண்டும்.

5. நல்ல விஷயங்களை எடுத்துரைக்க வேண்டும்.

6. தீய விஷயங்களைத் தடுக்க வேண்டும்.

7. வழி தவறி இருப்பவனுக்கு, வழியைக் காட்ட வேண்டும்.

8. வாகனத்தின்மீது அமர வைக்கவும், அல்லது சாமான்களைக் கொண்டு வந்து கொடுப்பதில் உதவி தேவைப்பட்டால், உதவி புரிய வேண்டும்.

210. மற்றவர் உட்கார்ந்திருக்கும் இடத்தை விட்டு அவரை அகற்றிவிட்டு அந்த இடத்தில் தான் உட்கார்ந்து கொள்வது கூடாது.

211, மீண்டும் வந்து உட்காரும் நோக்கத்துடன் சபையை விட்டு ஒருவர் செல்வாரேயாயின், அந்த இடத்தில் அவரே உட்காரத் தகுதியுள்ளவராவார்.

212. சபைத் தலைவருக்கு சபையைவிட்டு வெளியில் போக வேண்டிய அவசியமிருந்து போய்விட்டு மறுபடியும் வருவதாய் இருந்தால் வருவதற்கு அறிகுறியாய் சபையோர்களுக்குத்

தெரியும்படி ஒரு சாமானை வைத்துவிட்டுப் போவது நலம்.

213. இரண்டு நபர்கள் சேர்ந்து உட்கார்ந்திருந்தால், அவர்களின் உத்தரவின்றி மூன்றுவது நபர் அவர்களின் மத்தியில் உட்காருவது கூடாது.

214. ஒருவர் உங்களைச் சந்திக்க வந்தால் நீங்கள் உங்கள் இடத்தைவிட்டு சிறிது நகருவது மரியாதையாகும்.

215. எந்தவிதமான தேவையின்றி சபையில் தான் மேலானவர் என்பதை மற்றவர்களுக்குக் காண்பித்துக் கொள்ளும் எண்ணத்துடன் தனி இடத்தில் அமருவது கூடாது, சபையில் இடம் உள்ள பக்கத்தில் அமர்ந்து விடுவதே சபையின் ஒழுக்கமாகும்.

216. தும்முவது சுகத்தைத் தரக்கூடியதாகும். தும்மிய பிறகு **'அல்ஹம்து லில்லாஹ்'** என்று கூறவும். இதைக் கேட்டவன் **'எர்ஹமுகல்லாஹ்'** (அல்லாஹ் உனக்கு அருள் புரிவானாகவும்) என்று பதில் கூறவும். பிறகு தும்மினவர் பதில் கூறியவருக்கு **' யஹ்தீகு முல்லாஹுௗ வயுஸ்லிஹுௗ பாலகும் '** (அல்லாஹ் உனக்கு அருள் புரிவதுடன், உங்கள் வாழ்க்கையைச் சீராக்குவானாக) என்று கூறவும்.

217. அதிகமாக ஒருவனுக்குத் தும்மல் ஏற்பட்டுவிட்டால் **'எர்ஹமுகல்லாஹ்'** என்று கூறவேண்டியதில்லை. தும்மல் வரும் சமயம் முகத்தின் மீது துணி அல்லது கரத்தை வைத்துத் தணிந்த சப்தத்துடன் தும்மவும்.

218. கொட்டாவி வந்தால் வாயின்மீது கரத்தை அல்லது துணியை வைத்துக் கொள்வது நல்லது. கொட்டாவிவரும் சமயம் இயன்ற வரையில் தடுத்துக் கொள்ள வேண்டும். முடியா விட்டால் வாயை மூடிக் கொள்ள வேண்டும்.

219. மிகவும் கலகலத்துச் சிரிக்க வேண்டாம்.

220. மார்க்க சட்டத்திற்கு விரோதமின்றி சபையோர்களுடன் சந்தோஷமான முறையில் கலந்து கொள்ளலாம்.

பலதரப்பட்ட ஒழுக்கங்கள்

221. ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் :—

1. ஒரு முஸ்லிமை சந்திக்கும் சமயம் **ஸலாம்** சொல்ல வேண்டும்.

2. அழைப்புக்கு பதில் கொடுப்பது.

3. விருந்துக்கு அழைக்கப்பட்டால் அதை ஒப்புக்கொள்வது.

4. தும்மினவர் **அல்ஹம்துலில்லாஹ்** என்றும் இதைக் கேட்டவர் **எர்ஹமுகல்லாஹ்** என்றும் சொல்வது.

5. நோயுற்றோரை விசாரித்தல்.

6. ஜனாஸாவுடன் நடந்து செல்லல்.

7, தான் பிரியப்படுவதையே மற்றவர்களுக்கும் விரும்புவது.

222. தன் வீட்டிற்குள் போகும் சமயம் வீட்டில் உள்ளவர்களுக்கு ஸலாம் சொல்ல வேண்டும்.

223. ஒருவர் மற்றொருவர் ஸலாம் கூறியதாகத் தெரிவித்தால், தெரிவித்தவருக்கு **வஅலைக்க வஅலைஹிஸ் ஸலாம்** என்று கூற வேண்டும்.

224. கடிதத்தை எழுதி அதன்மீது மண்ணைத் தூவவும்.

225. எழுதும் சமயங்களில் காதில் எழுதுகோலை வைப்பதானது மறந்த விஷயங்களை உதிக்கவைக்கின்றன.

226. தன் குழந்தைகள் மீது கிருபை காட்டுவதை முன்னிட்டும் நன்மையுண்டு.

227. மற்றவரின் ஆடையினால் தன் கையை துடைப்பதால் சமாதானப்படுவார் என்றிருந்தால் அவர் ஆடையில் துடைப்பது குற்றமல்ல.

228. சபைகளில் கால்களை நீட்டிக்கொண்டு ஒழுங்கீனமாக உட்காருவது கூடாது.

229. மற்றவர்களைச் சந்திக்கும் சமயம் மலர்ந்த முகத்துடனும் புன்சிரிப்புடனும் சந்திக்கவும்.

பெயர் சூட்டுவது

230. பெயர்களில் அப்துல்லாஹ், அப்துற்றஹ்மான் என்பது அல்லாஹ்வுக்கு மிகப்பிரியமானது.

231. பெயரால் பெருமையும், தன்னைச் சுத்தவான் என்ற கருத்துள்ள பெயர்களையும், அருவருப்பான கருத்துள்ள பெயர்களையும் சூட்ட வேண்டாம். பந்தயே ஹஸன், பந்தயே ஹுஸைன் போன்ற பெயர்களை இடவேண்டாம்.

பேசக்கூடிய ஒழுக்கங்கள்

232. காலத்தைத் திட்ட வேண்டாம்.

233. ஆதாரமற்ற விஷயங்களைப் பேசக் கூடாது.

234. பகிரங்கமான முறையில் பாவம் செய்பவனுக்கு கண்ணியமான வார்த்தைகளை உபயோகிக்க வேண்டாம்.

235. மார்க்கத்திற்கு முரண்பட்ட கீதங்களை பாடுவது கூடாது. மார்க்கத்தில் ஆகுமான கீதங்களைப் பாடுவதிலும், மார்க்க விஷயங்கள், உலக விஷயங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில். இடையூறு ஏற்படும் முறையில் அதுவே வேலையாக மூழ்கி இருப்பதும் கூடாது.

236. பேசும் சமயம் சிரமத்துடன் விஷயத்தை மறைத்தும், விழுங்கியும், அவசரத்துடன் பேசுவதும் கூடாது.

237. தான் செய்யாமல் மற்றவருக்கு எடுத்துரைப்பது, மிகக் கடினமான குற்றமாகும்.

238. விஷயங்களைச் சுருக்கமாகத் தெளிவான முறையில் பேசுவதே நலமாகும்.

239. பெண்மணிகள் தங்கள் சப்தத்தை அன்னிய ஆடவர்களுக்குக் காட்டாமல் இருப்பதும்,

ஆடவர்கள் பெண்கள் முன்னிலையில் கீதங்கள் போன்றவைகளை பாடாமலிருப்பதும் (வாஜிப்) முக்கிய கடமையாகும்.

240. சங்கீதம் பாடுவதிலேயே முழுக் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருப்பது கூடாது. ஏனெனில், அது மனதைக் கெடுத்து விடுகிறது.

நாவைப் பேணல்

பார்ஸீ கீதம்

மஜன் பேதஅம்முல் பகுப்தாரதம்
நிகோ கோயீ கர் தேர் கோயீ சேகம்

பொருள்: சிந்திக்காமல் பேசுவதைக் கொண்டு உன் மூச்சை வெளியாக்காதே! நல்லதைக் கூறினும் சிறிது தாமதத்துடன் கூறுவதால் தவறென்ன?

241. சிந்தித்துப் பேசுவதால் நமது வார்த்தைகளில் வரும் தீமைகளை தவிர்க்க முடிகிறது. சிந்திக்காமல் பேசுவதால் அவ்வார்த்தைகள் ஒருக்கால் நம்மை நரகத்தின் பக்கம் இழுத்து விடவும் கூடும்.

242. விசுவாசிகளையும், நிரபராதிகளையும் திட்டுவது பாவிகளின் செயலாகும்.

243. எவரையும் பெரும்பாவி என்றோ, காபிர் என்றோ, **அல்லாஹ்**வால் சபிக்கப்பட்டவன் என்றோ அல்லது அல்லாஹ்வின் விரோதி என்றோ இஸ்லாத்தில் விசுவாசமற்றவன் என்றோ கூறவேண்டாம். ஏனெனில், இவ்விதமான வார்த்தைகளுக்கு எதிரி தகுதியில்லாதவனாக

இருப்பின் சொன்னவர் மீதே இக்குற்றங்கள் ஏற்பட்டுவிடும்.

244. கடினமான வார்த்தையை ஒருவர் மற்றவர்மீது உபயோகித்தால் மற்றவர் அதே போன்ற வார்த்தைகளை முதலில் உபயோகித்தவர் மீது உபயோகிக்க அனுமதியுண்டு. ஆனால் அவர் உபயோகித்ததைவிட அதிகமான வார்த்தைகளை உபயோகிப்பது பாவமாகும்.

245. **கோள்** சொல்வது பெரும் பாவமாகும். ஏனெனில் கோள் சொல்பவர் சுவர்க்கத்திற்கு தகுதியற்றவர் ஆகின்றார்.

246. உண்மையே பேச வேண்டும். பொய் பேசக்கூடாது. ஆனால் இரண்டு நபர்களுக்கிடையில் சமாதானம் செய்வதை முன்னிட்டு பொய் கூறுவது குற்றமல்ல.

247. ஒருவரின் எதிரிலே அவரைச் சந்தோஷப் படுத்தபுகழவேண்டாம்.ஒருவரின் உண்மையான நிலை அல்லாஹ்வுக்கே தெரியுமாதலால் மறை முகமாகப் புகழ வேண்டிய தேற்பட்டாலும் எனக்குத் தெரிந்தவரை நல்லவராகக் காணப் படுகிறார் என்று கூறவும். தெரியாதவைகளை யெல்லாம் தெரிந்தாகச் சொல்ல வேண்டாம்.

248. புறம் எப்பொழுதும் பேசவேண்டாம் அதனால் பாவம் ஏற்படுவதுடன். உலகத்தில் பலவகையான குழப்பங்கள், புரட்சிகள் உண்டாகின்றன. (புறம் என்பது ஒருவரில்லாதபோது அவரைப்பற்றி இல்லாத - பொல்லாதவைகளைக்

கூறுவதாகும்). அந்த விஷயங்கள் அவரிடம் இருக்கக்கூடியதாக இருந்தாலும் சரியே, அவரிடம் இல்லாத விஷயங்களைக் கூறுவது இதைவிட மிகத் தவறான செயலாகும். ஒருவர் சமயோஜிதமாக ஒரு பாவத்தைச் செய்து அதை வெளியில் சொல்லிக்கொண்டு திரிவது அழகல்ல.

249. விவாதம் ஏற்பட்டு வாதி உண்மையை ஒப்புக்கொள்ளாதவராக இருந்தால் அவரிடம் பேசாமலிருப்பதே நலம். உண்மைக்கு விரோதமாக விவாதிக்க வேண்டாம்.

250. ஜனங்களுக்கு சிரிப்பு உண்டாக்குவதற்காக பொய்யான வார்த்தைகளைப் பேசும் வழக்கம் மிகவும் கெட்டது.

251. இம்மைக்கும், மறுமைக்கும் பலனற்ற வார்த்தைகளைப் பேசாமல் இருப்பதே நலம்.

252. ஒரு மனிதன் ஒரு பாவத்தில் ஈடுபட்டுவிட்டால் அவனின் நலனைநாடி உபதேசம் செய்வது நலம். அவனைக் கேவலப்படுத்தும் நோக்கத்துடன் இகழ்வது மிகவும் வெறுக்கத்தக்கதாகும் ஏனெனில், மற்றவரை எந்த விஷயத்திற்கு இகழ்ந்தாரோ அதே விஷயத்தை இவரும் செய்துவிடுவாரோ என்ற பயம் இருக்கிறது.

253. மற்றவர்களை நையாண்டி செய்வது கூடாது. உதாரணமாக ஒருவரைப் போன்று நொண்டி நடத்தல், கண்ணடித்தல் இழிவான செயலாகும்.

254. அதிகமாகச் சிரிப்பதால் ஹிருதயத்தில் கடின சுபாவம் ஏற்பட்டு விடுகிறது. முகத்தின் பிரகாசம் எடுபட்டு விடுகிறது.

255. எவரைப் புறம்பேசினீர்களோ, அவரிடம் மன்னிப்புக் கோர இயலாமலாகி விட்டால், அவருக்கும் தனக்கும், அல்லாஹ் இடத்தில் பிழை பொறுக்கக் கோருவது, நாம் செய்த குற்றத்திற்கு பரிகாரமாக ஆவதற்கும் ஆதரவும் உண்டு. (**யா அல்லாஹ்** எனக்கும் அவருக்கும் பிழை பொறுப்பாயாக! என்று கூறவும்)

256. வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள்.

257. ஒருவரை சந்தோஷப்படுத்த வேண்டுமானல் பொய் கூறுமலும், அவர் மனதைப் புண்படுத்தாமலும் சந்தோஷப்படுத்துவது குற்றமல்ல.

258. ஒருவரின் குடும்பம், வம்மிசம் அல்லது திறமை முதலியவைகளின்மீது மற்றவர் தற்பெருமை கொள்வது கூடாது.

ஊழியமும், கடமையும்

259. தாய் தந்தையர்களுக்கு ஊழியம் செய்வதே ஒழுக்கமாகும். அவர்கள் (காபிர்) அவிசுவாசிகளாக இருந்தாலும் சரியே, மார்க்கத்திற்கு முரண்பாடில்லாதவைகளில் அவர்களுக்குக் கீழ்படிதல் முறையாகும்.

260. மற்றவர்களின் தாய் தந்தையர்களை இகழ்வது தன் தந்தையர்களை பிறர் இகழ்வதற்கு காரணமா யிருக்கிறது.

261. தாய் தந்தையர்கள் இறந்தபின் அவர்களின் சிநேகிதர்களுக்குப் பணிவிடை செய்வது தன் தாய் தந்தையர்களுக்குப் பணிவிடை செய்வது போலாகும்.

262. சுற்றத்தார்கள் கெடுதி செய்திடினும் அவர்களுடன் சேர்ந்து வாழ்வதே நலமாகும்.

263. சுற்றத்தார்களின் கடமைகளை நிறைவேற்ற அவர்களிடம் தொடர்பு வைத்துக் கொள்ளுங்கள்.

264. தாய்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை தாயின் சகோதரிக்கும் செய்யலாம்.

265, தாய் தந்தையர்கள் மனம் சமாதானமில்லாமல் இறந்துவிட்டால். எப்பொழுதும் அவர்களின் பிழைகளைப் பொறுக்கும்படி அல்லாஹ்விடம் துஆ கேட்டுக் கொண்டிருங்கள் அல்லாஹ் அவர்களைச் சந்தோஷமாக்கி வைத்துவிடுவான் என்ற ஆதரவு இருக்கிறது.

266. சிறிய தகப்பனின் கடமை, தகப்பனின் கடமை போன்றதாகும்.

267. மூத்த சகோதரரின் கடமை தகப்பனின் கடமை போன்றதாகும்.

268. ஆண் குழந்தைகளை வளர்ப்பதைவிட பெண் குழந்தைகளை வளர்ப்பது அதிக நன்மை கிடைக்கின்றன.

269. யத்தீம் (தாய் தந்தை யற்றவர்)களுக்கும், விதவை (புருஷன் இழந்தவர்)களுக்கும் உபகாரியாக இருந்து கொண்டிருப்பவர்கள்,

அல்லாஹ்வின் பாதையில் (பீஸபீல்) போர் புரிகின்றவர்களின் நன்மையைப் பெறக்கூடிய வர்களாக இருக்கிறார்கள்.

270. (யத்தீம்) தாய் தந்தையற்றவர்களைக் காப்பாற்றுபவர்களுக்குச் சொர்க்கத்தில் ரஸூல் ஸல் அவர்களுக்கு மிகசமீபத்தில் இருக்கும் பலனை அளிக்கிறது.

271. குழந்தைகளுக்கு மதக் கல்வியையும் ஒழுக்கங்களையும் கற்பிப்பது வாரிஸ்தாரர்களின் கடமையாகும்.

272. அண்டை வீட்டார்களுக்கு எவ்விதமான கஷ்டத்தையும் கொடுக்க வேண்டாம். முடிந்த வரை அவர்களுக்கு உதவி செய்யுங்கள்.

273. ஒரு முஸ்லிம் மற்ற முஸ்லிமுக்கு அன்பு காட்டுவதும், கிருபை காட்டுவதும் ஒரே சரீரத்துக்குச் செய்தது போன்றாகும். (சரீரத்திலுள்ள ஒரு பாகத்தில் வியாதி ஏற்பட்டுவிட்டால் மற்ற பாகங்களுக்கும் நிம்மதி இல்லாமலிருப்பது போல்) ஒரு முஸ்லிமுக்கு மற்ற முஸ்லிம் உதவியாளனாக - உபகாரியாக - இரக்கம் காட்டக் கூடியவனாக இருப்பது அவசியமாகும்.

274. ஒருவரின் விருப்பத்தை பூர்த்திசெய்ய முயற்சி செய்யுங்கள். உங்களால் முடியாவிட்டால் மற்றவர்களுக்கு கஷ்டம் ஏற்படாத முறையில் மற்றவர்களிடம் ஸிபாரிஷ் செய்யுங்கள்.

275. அநீதம் செய்பவனை அதைவிட்டு விலக்கச் செய்யுங்கள். அநீதம் செய்யப்பட்டவனுக்கு உதவி செய்யுங்கள்.

276. ஒருவரின் குற்றத்தைக் கண்டால் மறைத்து வைக்கவும்; சொல்லிக்கொண்டு திரிய வேண்டாம்.

277. ஒருவர் கஷ்டப்படுவதைப் பார்த்தால் இயன்றவரை உதவி புரியுங்கள்.

278. எவரையும் கேவலமாக கருத வேண்டாம். எவரின் பொருளையும் கண்ணியத்தையும் குறைப்பதில் பிரியப்பட வேண்டாம்.

279. எவரையும் வருந்த வைக்க வேண்டாம்

280. தான் பிரியப்படுவதையே மற்றவர்களுக்கும் பிரியம் கொள்ளச் செய்க.

281. மூவர்கள் இருந்தால் அதில் ஒருவரைத் தனியாக பிரித்துவிட்டு இருவர் தனித்து ரகசியம் பேச வேண்டாம்.

282. யாவரின் நலத்தையும் நாடுங்கள்.

283. அல்லாஹ்வின் சிருஷ்டிகள் மீது நாம் கிருபை காட்டுவதால் அல்லாஹ் நம்மீது கிருபையை அருள்வான்.

284. சிறுவர்களுக்கு கிருபை காட்டுங்கள். முதியோர்களை கண்ணியப்படுத்துங்கள். தளர்ந்த வயதடைந்தவர்களுக்கு மரியாதை செய்வதில் தனி மகத்துவம் உண்டு.

285. உங்களது எதிரில் மற்றவரின் புறம் பேசப்பட்டால் இயன்ற அளவு தடுங்கள். புறம் பேசப்பட்டவனுக்குப் பரிந்து பேசுங்கள்.

286. ஒருவரின் குற்றத்தைக் கண்டால் மிகச் சாந்தத்துடன் மற்றவர்களுக்குத் தெரியாத விதத்தில் அக்குறையை விட்டு சுத்தமாகும்படி அவருக்கு அறிவித்து விடுங்கள். ஏனெனில் குறைகள் மற்றவர்களுக்குத் தெரிந்தால், அக் குற்றம் செய்தவரை மற்றவர்கள் இகழ நேரிடும்

287. உங்கள் சிநேகிதர்கள் உற்ற தோழர் களுடன் நற்குணத்துடன் பழகுங்கள்.

288. ஜனங்களின் தராதரத்திற்குத் தகுந்த படி அவர்களைக் கண்ணியப் படுத்துங்கள். எல் லாரையும் ஒன்றே போல் கருத வேண்டாம்.

289. அடுத்த வீட்டார் பசியுடன் இருக்க அதற்குப் பக்கத்து வீட்டார் புசிப்பது மிகவும் வெறுக்கத்தக்கது.

290. சுயநலத்தை முன்னிட்டு அன்பு கொள் வது பிரயோஜன மற்றது மார்க்கத்தின் நலனை நாடி அல்லாஹ்வுக்கு என்று அன்பு கொள்ளவும்

291. ஒருவரிடம் அன்பு ஏற்பட்டால் அவரி டத்தில் தெரியப்படுத்திக் கொள்ளுங்கள். அவ ருடைய பெயரும், கோத்திரமும் விசாரித்துக் கொள்வதால் அன்பு மேலும் அதிகரிக்கிறது.

292. ஒருவரிடம் சிநேகிதம் கொள்வதற்கு முன், அவரின் மார்க்கம், கொள்கை போன்ற

வைகளைத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனெனில் துர்சிநேகிதத்தால் கெட்டுப்போக நேரிடும்.

293. மூன்று தினங்களுக்குமேல் ஒரு சகோதரரிடம் பேசாமலிருப்பது கூடாது. அவருடன் பிறகும் சேருவது அவசியம். இருவரில் எவர் முந்தி ஸலாம் சொல்லுகிறாரோ, அவரே மேலானவர்.

294. ஒருவருக்கொருவர் துர் எண்ணம் கொள்ளல், ஒருவர் மற்றவரின் குறைகளைத் தேடல், ஒருவருக்கொருவர் பொறாமை கொள்ளல், பேராசை கொள்ளல், தொடர்பை முறித்துக் கொள்ளல் கூடாது. சகோதரவாஞ்சையுடன் வாழுங்கள்.

295. இருவர்களுக்குள் வருத்தம் ஏற்பட்டு விடின் அதை சமாதானப்படுத்தி விடுங்கள். ராசிபடுத்துவது தொழுகை, நோன்பு, தர்மம், இவைகளின் நன்மைகளைவிட அதிக பலனைக் கொடுக்கிறது.

296. ஒருவர் குற்றம் செய்த பிறகு மன்னிப்புக் கேட்டால் அவருடைய குற்றத்தை மன்னித்து விடுங்கள். மன்னிக்காமலிருப்பது பாவத்தை உண்டாக்குகிறது.

297. ஒருகாரியத்தை செய்யுமுன் ஆராய்ந்து அதன் முடிவைத் தெரிந்து நிம்மதியுடன் செயலாற்றுங்கள்,

---

இஸ்லாம் எப்படிப் பரவியது?

என்ற நூலை ஒவ்வொருவரும் வாங்கிப் படிக்கத் தவறாதீர்கள்.
விலை 10 அணா தான். 12 அணா அனுப்பி பெற்றுக் கொள்க!

298. விரைந்து செய்வதில் கெடுதிகள் ஏற்படுகின்றன. ஆனால், மறுமையின் காரியங்களை விரைந்து செய்வதே நலம்.

299. அனுபவம் உள்ளவரே அறிவு பெற்றவராவார்.

300. எந்த காரியத்திலும் நடுத்தரத்தைக் கையாளுங்கள்.

301. உங்களிடம் யோசனை கேட்கப்பட்டால் உங்களது அபிப்பிராயத்தில் நலமாக இருக்கின்றதைக் கூறுங்கள்.

302. செலவு செய்வதில் நடுத்தரமாக இருப்பது வாழ்க்கையின் பகுதியாயும், ஜனங்களிடத்தில் அன்பு காட்டுபவனாக இருப்பது அறிவின் பகுதியாயும், விஷயங்களை விசாரித்துணர்வது கல்வியின் பகுதியாயும் இருக்கிறது.

303. ஜனங்களிடத்தில் சாந்தத்துடனும் நற்குணத்துடனும் பழகுங்கள்.

304. ஜனங்களுக்கு உதவியின்றித் தனித்து அமல்களை செய்பவரை விட மனிதர்களுடன் சேர்ந்து அதனால் ஏற்படும் கஷ்டங்களைச் சகித்துக் கொண்டு வணக்கம் புரிபவரே மேலானவர். ஒரு மனிதனின் சுபாவத்தில் ஜனங்களுடன் சேர்ந்திருப்பது இயலாததாக இருப்பின் அது குற்றமல்ல.

305. கோபத்தை இயன்றளவுக்குத் தடுத்துக் கொள்ளுங்கள்.

306. பெருமையின்றி பணிவுடன் வாழ்க!

307. அநீதி செய்திருப்பின் அதை இம் மண்ணுலகத்திலேயே மன்னிப்புக் கோரி நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். (கியாமத்) மறுமை நாளில் நிவர்த்தி செய்யவும், மன்னிப்புக் கோரவும் இயலாது,

308. ஜனங்களுக்கு நன்மை தீமைகளைக் கூறிக்கொண்டிருங்கள். அவர்கள் அறவே ஒப்புக் கொள்ள மாட்டார்கள் அல்லது கூறினால் கஷ்டங்கள் உண்டாகும் என்ற பீதி இருப்பின் கூறாமல் இருப்பது ஆகும். ஆனால், தீமைகளைத் தீமை என்றே மனதில் உணருங்கள்.

தஃலீமுத்தீனின் ஐந்து பிரிவுகளில் நான்கு பிரிவுகள் முற்றிற்று.

மிக முக்கியமான ஐந்தாம்பிரிவு **இன்ஷா அல்லாஹ்**
வெகு விரைவில் வெளி வருவதை
எதிர்பாருங்கள்!

வஆகிருதஃவானா அனில்ஹம்துலில்லாஹி ரப்பில் ஆலமீன்.

தம்மத் வபில்கைரி அம்மத்

எங்களிடம் அறபி, உர்தூ, பார்ஸி, அரபுத் தமிழ் கிதாபுகள், பல சைஸ் குர்ஆன் ஷரீப்கள், மற்றும் அஸ்மியான் களிம்பு, சுற்மா, மிஸ்வாக்கு, தஸ்பீஹ்மணி. ஈத் வாழ்த்துக் கார்டுகள், மக்கா, மதீனா பல புண்ணிய க்ஷேத்திரப் படங்கள் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும். விபரங்களுக்கு கேட்லாக்கிற்கு எழுதுங்கள்.

குர்ஆனிய்யா புக் டிப்போ, மதுரை.